# மயில் நிற மங்கை

உதயணன்



சீதை பதிப்பகம்

## முன்னுரை

வரலாற்று ஆராய்ச்சியாளரான டாக்டர் சிமீனாட்சி அவர்கள் "பல்லவர்கள் காலத்தில் நிர்வாகமும் சமூக வாழ்க்கையும்" என்னும் தமது நூலில் பாண்டிய மன்னனான ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் தன்னுடன் போரிட முற்பட்ட சிங்கள மன்னனை முறியடிக்க பல்லவ மன்னன் நிர்பதுங்கவர்மனை நாடினான் எனவும், அதையடுத்து பல்லவர் கடற்படை துணையால் சிங்களவரை வென்றான் என்றும் குறிப்பொன்றைக் கொடுத்திருந்தார். எனக்குத் தெரிந்து அக் குறிப்பு வேறெந்த ஆராய்ச்சி அறிஞர்களாலும் மறுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே அச்சிறு குறிப்பைக் கொண்டு சிறியதொரு வரலாற்றுக் கதை எழுத விரும்பினேன். "மயில்நிறமங்கை" உருவானாள்.

இதனை மனமுவந்து பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு என் நன்றி உரித்தாகும்.

சென்னை 600061 **உதயணன்**

# மயில் நிற மங்கை

## அத்தியாயம் ஒன்று

(நேரிசை வெண்பா)

காலைக் கதிரவனும் காளையரும் கவின்மலரும்
வேலைப் பழிக்கின்ற விழியாரும் - சீலத்
தென்மருதத் துறையாடும் தேமதுரக் காட்சியினை
என்சொல்லி வாழ்த்திடு வோம்?

'உலகனைத்தும் தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன் நான்மாடக் கூடல் நகர்' என்று பரிபாடலும் 'பதிவெழுவறியா பண்பு மேம்பட்ட மூதூர்' என்று சிலப்பதிகாரமும் புகழ்ந்து போற்றிய அந்த மதுரை மாநகரின் விஸ்தாரமான பேரரண்களையும் விண்ணை முட்டும் விதானங்களையும் கண்டு அசந்து போய் நின்றான் அபராஜிதன். அதோடு அவன் நின்ற இடம் வையையாற்றின் வடகரையாதலால் அவனது கண்களுக்கு முன்னால் ஒரு சொர்க்கலோகமே விரிந்து கிடந்தது. 'வையை என்னும் பொய்யா குலக்கொடி' என இளங்கோவடிகளால் அழகுற அழைக்கப்பட்ட அவ்வாறே அப்புலவரின் கூற்றை மெய்ப்பிப்பது போல் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. வானம் பொய்ப்பதில்லையாதலால் ஆற்றில் நீரும் வற்றுவதில்லை. அந்த இளைஞன் வந்திருந்த காலமும் மாரிக்காலமாதலால் ஆற்றில் நீர் வாரிக் கொண்டு போயிற்று. கரையைக் கொண்டதொரு கடலைப் போன்றிருந்த அவ்வாற்றில் அலை அலையாய் புரண்டு ஓடிய நீர் கரைகளில் மோதி அவற்றை உடைக்க முடியாமல் தன் ஆற்றாமையை கரைக்குச் சற்றுத் தள்ளிக் கிடந்த கோட்டைச் சுவற்றில் எழுதிப் புலம்பப்போனதுபோல் மோதித் தெறித்தது. அந்த வேளை காலை வேளையாய் இருந்ததால் கீழ்வானத்தில் எழுந்த கதிரவனின் வீரியக் கதிர்கள் ஆற்று நீரில் தங்குதடையின்றி வந்திறங்கியதால் உருக்கப்பட்ட வெள்ளிபோல் காட்சியளித்த அந்த நீரில் கரையோர மரங்கள் வரம்பின்றி உதிர்த்த மலர்கள் எம்பி எம்பிக் குதித்துச் சென்ற விதமானது இயற்கை நடத்தும் வண்ண ஜாலம்போல் இருந்தது. அப்படி உதிர்ந்த மலர்களும் மணமுள்ளவைகளாய்

இருந்துவிட்டதால் மரணமடையும் போதும் கருணை செய்யும் கனவான்களைப் போல் அழியும் நேரத்திலும் சுகந்த மகரந்தங்களை நீர் முழுவதும் கொட்டி மணம் பரப்பி ஆற்றில் ஓடுவது தண்ணீரா இல்லை பன்னீரா என்று பிரமிக்க வைத்தன. அப்படிப்பட்ட நீரில் நனைவதும் நெளிவதும் பெரும் பாக்கியம் என்று கருதினாற்போல் நாவல் மரக் கிளைகளில் விழித்தெழுந்த மைனாக்கள் இமைக்கும் நேரத்தில் நீரில் பாய்வதும், மேலே பறப்பதுமாய் இருந்தன. அவற்றின் செய்கைகளைக் குழந்தைத்தனமாய் எண்ணிய சாம்பல் குருவிகள் இறக்கைகளை விசிறிபோல் விரித்து 'கீச்கீச்' சென்று குரலெழுப்பிச் சிரித்தன. அந்தச் சிரிப்பிற்குப் பின்னணி செய்வதுபோல் கரைக்கு அப்பால் இருந்த அசோக வனத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆவினங்கள் தத்தம் தலைகளை ஆட்டிக் கழுத்தில் தொங்கிய மணிகளால் ஒலி எழுப்பின.

யதார்த்தமான இந்தக் காட்சிகள் மட்டுமின்றி ஏங்க வைக்கும் வேறு பல காட்சிகளையும் அவ்வாலிபன் காணநேரிட்டது. நீரிலே மிதந்த மலர்களைக் காட்டிலும் மென்மையான கட்டழகிகள் பலர் நூற்றுக்கணக்கில் மருதத் துறையருகே நீராடிய வண்ணமாய் இருந்தார்கள். பூவுலகிற்குப் பிரத்தியேகமாய் வந்து குதூகலிக்கும் தேவதைகளைப்போல் தோன்றினார்கள் அவர்கள். உணர்ச்சியுள்ள மலர்ச் சிலைகளாயும், வண்ணக் கயல்களாயும் ஆங்காங்கே நீந்தியும், ஆழ்ந்தும், மிதந்துமாய் எந்தவிதக் கவலையும் இல்லாமல் அக்காரிகைகள் நீராடிக் கொண்டிருந்தார்கள். உடலைச் சில இடங்களிலாவது மறைக்க வேண்டும் என்ற நியாயமான பாதுகாப்பு உணர்வோடு பட்டடுச்சிலைகளை மேனியில் சுற்றியிருந்தாலும் நீரில் இறங்கியபின் அந்த உணர்வினை அவர்கள் மறந்து போயிருக்க வேண்டும். இல்லாது போனால் துள்ளி விளையாடி கள்ளநகை போட்டு நீராடிய அவர்களது மேனியில் சுற்றிக்கிடந்த சிலைகள் தமக்கென்று தனியிடம் தேடிச் செல்வதுபோல் அவர்களைவிட்டு விலக முயன்றிருக்க மாட்டா. எழிலிடங்களைப் போர்க்க வேண்டிய அச்சிலைகள் நழுவி விலகியதால் நீரின் பரப்பை விட்டு அப்பெண்கள் மேலெழும் போதெல்லாம் எழில் பிம்பங்கள் குமரி முனையில் காணும் உதயசந்திரனைப் போல் தெரிந்தும் மறைந்துமாய் ஜால வித்தைகளைச் செய்தன. நீரோட்டத்தின் உத்வேகத்திலும் நீராட்டத்தின் உற்சாகத்திலும் தத்தம் சிலைகளின் அலைக்கழிப்பினை சில பெண்கள் அறியாமல் இருந்தார்கள். வேறு சிலரோ அறிந்தும் அறியாதவர்களாய் இருந்தார்கள். ஆதலால் வையை என்னும் அக்குலக்கொடி முடிந்த மட்டும்



அலையாகிய சிலையை வீசி வீசி தெரியக்கூடாத அங்கங்களை மறைக்க முயன்றாள். அந்த நீரோட்டத்தில் சிக்கித் தவித்து அழிவை நாடிக் கொண்டிருந்த மலர்கள் சிரழியும் நிலையிலும் ஆசையை விட விரும்பாத காமுகர்களைப்போல் அவ்வழகிகளின் அங்கங்களை உரசியும், இடித்தும், தழுவியும் இயன்றளவு இன்பத்தை அடைந்து அகன்றவாறிருந்தன. அந்த மலர்களின் செயலினை ஈனமாகக் கருதி மனம் பொறுக்காத தென்றலானது எழுந்து வீசி அலைகளைப் பிளந்து தள்ளியதால் நீரின் வேகம் அவ்வப்போது அதிகரித்து மலர்களை வேகமாக விரட்டியடித்தது. நின்று நிலைத்துத் தழுவத்துடித்த மலர்கள் நினைத்தபடி அடைய முடியாத நிலையில் அவ்வாரணங்குகளை விட்டு விலகிப் பரிதாபமாய் புரண்டோடியதைக் கண்டு கேலி செய்வதுபோல் கரையோர நாவல் மரங்களில் வாலாட்டி அமர்ந்திருந்த குரங்குகள் நாவற்பழக் கொட்டைகளை நீரில் எறிந்து பற்களைக் காட்டிச் சிரித்தன. யார் சிரித்தாலும் சிரிக்கட்டும் என்று துணிந்துவிட்ட ஆந்தைகள் சில இருக்குமிடம் தெரியாமல் மாமரங்களில் உலர்ந்த கிளைகளில் அமர்ந்துகொண்டு குளிக்கும் அழகிகளைக் கண்கொட்டாமல் கவனமாகப் பார்த்துக் கிடந்தன.

இப்படிக் கோரமான ஆந்தைகளே கண் வாங்காமல் பார்க்குமளவு அழகுப் பெட்டகங்களாய் அப்பெண்கள் நீரில் நீந்தியபோது அவர்களது நீண்ட கருங்கூந்தல்கள் கட்டவிழ்ந்து நீரோட்டத்தில் அப்படியும் இப்படியுமாய் ஆடி அசைந்து கருநாகங்கள் ஊர்வதுபோல் எண்ண வைத்தன. அதைக்கண்ட அபராஜிதன், உலகில் காணும் பல்வேறு உயிரினங்களையும் இதர அம்சங்களையும் பெண்ணொருத்தியிடமே கண்டுவிட முடியும் என்று கருதினான். பெண்கள் நீராடிய பகுதிக்குச் சற்று தள்ளியும் நேரெதிரிலுமாய் பற்பல ஆடவர்களும் குளியல்களில் திளைத்திருந்தார்கள். பொதுவாகப் பார்ப்பதற்கு இரு சாராரும் தனித்தனியே தங்களுக்குரிய கட்டுப்பாடுகளுடன் நீராடுவதுபோல் தோன்றினாலும் ஊன்றிப் பார்க்கும்போது இரு பிரிவினருமே வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் விஷமங்களில் திளைத்திருந்ததைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவரவர் எல்லைகளை மீறியவர்கள் தவறிச் செய்ததுபோல் பெண்களுக்கு மிக நெருக்கத்தில் வந்து உரசிக் கொண்டார்கள். அப்படி உரசிய ஆடவர்களை எரித்துவிடுவதுபோல் புறக் கண்களால் நோக்கினாலும் உள்ளுக்குள் அத்தகைய உரசல்களை விரும்பவே செய்த பெண்கள் பலர் வம்பை விலைக்கு வாங்கும் வகையில் நீந்தினார்கள். அவர்களில் சிலர் நீந்துவதோடு நில்லாமல் எம்பிக் குதித்தும் கரணமடித்தும்

விளையாட முயன்றபோது திடீர் திடீரென்று வெளிப்பட்ட அவர்களது அங்க லாவண்யங்களைக் கண்டுவிட்ட ஆடவர் சிலர் நீரோட்டத்தை மறந்து பல் தெரியப் பார்த்து சிலையாக நின்றபோது நீரோட்டம் அவர்களைக் கவிழ்த்துப் புரட்டியது.

சில பெண்கள் குங்குமத்தை இறைத்து விளையாடினார்கள். வேறு சிலர் அரைத்த மஞ்சளை அளவுக்கு அதிகமாகவே மேனியில் பூசிக் கொண்டு மூழ்கினார்கள். அவற்றால் சிவப்பும் மஞ்சளும் ஏராளமாய் கலந்து வெள்ளியென ஓடிய நீரில் மிதந்தபோது கதிரவனின் ஒளி அதில் ஊடுருவி கதிர்களை வண்ணக் கோடுகளாய் காட்டின. ஆடைகளை நழுவவிட்ட மாதிரி ஆடவர் சிலரும், சேலைகளை நெகிழவிட்ட மாதிரிச் சிங்காரிகள் சிலரும் திசைமாறி நீந்தித் தனி இடங்களில் கைகளைக் கோர்த்துக் கொண்டார்கள்.

ஆபத்தில் சிக்கியதுபோல் பெண்கள் சிலரும், உதவ வந்ததுபோல் ஆடவர் சிலரும் சாகசங்களைக் காட்டி, காதற் கணைகளைத் தொடுத்து உடலோடு உடலுரசி நீருக்கடியில் மூழ்கியும் எழுந்துமாய் சரசமாடினார்கள். அப்படி ஈடுபட்டபோது நடந்துவிட்ட முரட்டுத்தனத்தினால் விளைந்துவிட்ட ஊமைக் காயங்களால் இன்ப வேதனையடைந்து பொய்க் கோபம் காட்டிய பெண்களில் சிலர் மஞ்சள் நிற நீரை வாரி ஆடவர்கள் மீது வீசவும் அதனால் அவர்களது உடலில் ஆங்காங்கே தங்கிவிட்ட மஞ்சள் துணுக்குகள் கதிரவனின் ஒளியில் பொன்மணிகள் போல் பூத்துத் தெரிந்தன.

வையை ஆற்றையும் வையையில் விளையாடிய வடிவுக்கரசிகளையும், ஆடவரையும் வடகரையில் நின்றபடி கண்ட அபராஜிதன் கண்களை உயர்த்தி ஆற்றின் அக்கரைக்குச் சற்றே தள்ளி வானைத் தொடுவதுபோல் மழைக்கால மேகம் திரையாய் வந்து நின்றாற் போல் தெரிந்த கோட்டைச் சுவற்றைக் கவனித்தபோது வையை ஆறு கோட்டையின் வடஅரணாக அமைந்திருந்ததை உணர்ந்து கொள்ள முடிந்தது. கோட்டையின் மற்ற முப்புறங்களில் அடர்ந்த காவற்காடுகள் உண்டாகியிருந்ததையும் கண்டான். அந்தக் காட்டு மரங்கள் மிகப்பெரியதாயும், நன்றாய்த் தழைத்ததாயும் இருந்ததைக் கவனித்த அவனுக்கு மதுரை மாநகர் பகைவரின் தாக்குதலுக்கு இலக்காகி வெகுகாலம் ஆகியிருக்க வேண்டும் என்பது புலப்பட்டது. அந்தக் காட்டு மரங்களும் மதில்சுவற்றுக்குச் சற்று தள்ளியே அமைந்திருந்ததால் பகைவர் எவரும் கோட்டையின் காவல் வீரர்களுக்குத் தெரியாமல் வாயில்களை நெருங்குவதற்குச் சாத்தியமில்லை என்பதையும் அப்படி நெருங்கினால் இமைக்கும்



நேரத்தில் காவல் வீரர்கள் எளிதில் அழித்துவிட முடியும் என்பதையும் அறிந்து கொண்டான் அவன். மதிட்சுவர் சுமார் நாற்பதடி உயரத்திற்கு உறுதியாக அமைக்கப்பட்டிருந்ததையும் அவற்றில் ஆங்காங்கேகணக்கற்ற துளை மாடங்கள் இருந்ததையும், மதில் தளங்களில் காவல் வீரர்களின் நடமாட்டம் இடைவிடாமல் நிலவியதையும் கண்ட அவனுக்கு மதுரை மாநகர் பாதுகாக்கப்பட்டிருந்தவிதம் குறித்து பிரமிப்பாக இருந்தது. கோட்டையின் உள் வயணங்களைக் காண முடியவில்லை என்றாலும் புறத்தோற்றத்தைக் கொண்டே அவனால் அவற்றை ஊகிக்க முடிந்தது.*

இந்தக் கணக்குகளெல்லாம் அவனுக்குப் புரிய புரிய அவனுக்குள் உண்டாகியிருந்த ஆசை அலைகளின் வேகம் அதிகரித்தது. பல்லவ மாமன்னரும், பாண்டியனை அரசலாற்றங்கரையில் புறங்கண்டவருமான நிர்பதுங்கவர்மர் தன்னிடம் சொல்லியிருந்த வார்த்தைகளை நினைவுகூர்ந்த அவன், "மன்னர் விஷயத்தோடுதான் கூறியிருக்கிறார். நானிருந்தாலும் அப்படித்தான் சொல்லியிருப்பேன்" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான். மன்னர் கூறிய விஷயத்தை உடனடியாக கண்டுவிட வேண்டும் என்று அவனது மனம் துடித்தது.

மனிதனிடம் துடிப்புகள் பெருகும் அளவிற்கு அவை நிறைவேறும் வாய்ப்புகள் விரும்புகிற மாதிரி கிடைத்துவிடுவதில்லை. நிறைவேறாத நிலையில்தான் மனிதனிடம் அதிகத் துடிப்புகளும் ஆசைகளும் பிறக்கின்றன. அபராஜிதனுக்கும் அத்தகைய துரதிர்ஷ்டம்தான் நேர்ந்தது.

கோட்டைக்குள் நுழைந்து அவன் சாதிக்க வேண்டிய விஷயங்கள் நிரம்ப இருந்தும், அதற்காகவே காஞ்சி மாநகரிலிருந்து புறப்பட்டிருந்தும், மதுரைக்கு வந்து நாட்கள் இரண்டாகியும் கோட்டைக்குள் நுழைய முடியாத துரதிர்ஷ்டத்தில் இருந்தான் அவன். நான்குமுறை முயன்றும் நுழைய முடியாதவனாய் தவித்தான். என்ன காரணத்தாலோ நகரில் கெடுபிடிகள் அதிகமாகியிருந்தன. கோட்டைக்குள் பிரவேசித்தவர்களும் கோட்டையிலிருந்து வெளியேறியவர்களும் கடுமையான சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அயலார்களும் சந்தேகத்திற்குரியவர்களும் அனுமதி மறுக்கப்பட்டார்கள். அதன் காரணம் சரிவரப் புலப்படாததால் தனது உற்ற நண்பனும் சீனனுமான சென்சுவானை கெடுபிடிகளுக்கான காரணங்களை

* சிலப்பதிகார மதுரையும் பிற்காலத்தில் விளங்கிய மதுரையும் வேறு வேறு என்றும், சிலப்பதிகார மதுரையானது தற்போதைய மதுரைக்கருகே உள்ள அவனியாபுரத்தைச் சேர்ந்த பகுதியே என்றும் அறிஞரிடையே கருத்து நிலவுகிறது.

அறிந்து வருவதற்கும், கோட்டைக்குள் நுழைவதற்கான வாய்ப்புகளை அறிவதற்கும் அனுப்பியிருந்தான்.

தற்போது ஆற்றங்கரையில் நின்றபடி ரசனை ஒருபுறமும், விசனம் ஒருபுறமுமாய் அழுத்திய நிலையில் பலவாறு யோசித்தவனாய் ஆற்றங்கரை அசோக வனத்தில் நெடுநேரம் நடமாடினான். நேரம் செல்லச் செல்ல கோட்டைப் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் அதிகரித்தது. வாயிற்புறம் காவல் வீரர்களும் புரவி வீரர்களும் அதிக எண்ணிக்கையில் திரிந்தார்கள். வைவைக் கரையோரமாயிருந்த வடக்கு வாசல் பகுதி அலங்கரிக்கப்பட்டு தோரணங்கள் வழிதோறும் கட்டப்பட்டன. அந்தணர் கூட்டம் வேறு அடிக்கடி முளைத்தது. இப்படி ஒவ்வொன்றும் புதிர்போல் வளர்ந்து கொண்டிருக்க, அவன் எதிர்பார்த்த மாலை நேரமும் வந்தது. சினனும் வந்தான்.

பூனை முகமும் யானைக் கண்களுமாய் விசித்திர தோற்றமுடைய அச்சினன் அவசியத்தைப் பொறுத்து தமிழனைப்போல் வேடம் தரிக்க முற்பட்டு முடிவில் அனுமாரைத் தேடிப்போய் குரங்கைப் பிடித்து வந்தது மாதிரி ஆகிவிடவே இப்படியுமல்லாமல் அப்படியுமல்லாமல் விபரீத மனிதனாகக் காட்சியளித்தான். அவனைக் கண்டதுமே நேரத்தை வீணடிக்காமல் "என்ன சினா, என்ன அறிந்து வந்தாய்? ஏன் இந்தக் கெடுபிடிகள்?" என்று வினவினான் அபராஜிதன்.

சினன் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுக் காதில் ஏதோ ஓதியதும் வாலிபனின் முகம் வியப்பால் விரிந்தது. "உண்மையாகவா?" என்று கேட்ட அவன் "அது உண்மையானால் நான் உடனடியாக கோட்டைக்குள் போயாக வேண்டுமே!" என்று முணுமுணுத்துவிட்டு "உள்ளே போக வழி ஏதாவது கண்டாயா?" என்று கேட்டான்.

"பூனையாக இருந்தாலொழிய நுழைய முடியாது" என்றான் சினன்.

"ஆமாம், கோட்டைப் பகுதியில் ஏன் இந்த திடீர் சுறுசுறுப்பு?"

பதிலைச் சொன்னான் சினன். அதைக் கேட்டதும் அபராஜிதனின் கண்கள் மூடின. கைகள் இரண்டும் இணைந்தன. அடுத்த கணம் அவனிடம் திட்டம் ஒன்றும் உருவாயிற்று. அதை வாய்விட்டுக் கூறவும் செய்தான்.

"அபாயமானத் திட்டம்" என்று சினனின் உதடுகள் முணுமுணுத்தன.

★ ★ ★



# அத்தியாயம் இரண்டு

(நேரிசை ஆசிரியப்பா)

மாலிருஞ் சோலையில் மடையினை உடைத்து
ஆலவாய் நகரினில் சாலவே நுழைந்தவன்
பண்ணிடைப் பட்ட பாடலாய்
பெண்ணிடைப் பட்டுக் கண்திறந் தனனே.

கோட்டைக்குள் உண்டாகியிருந்த கெடுபிடிகளுக்கான காரணத்தைச் சினன் கூறியதும் நிகழ்ச்சிகள், தான் எதிர்பார்க்கும் அளவைவிட வேகமாக நடைபெற்றுக் கொண்டு போவதை அறிந்த அபராஜிதன் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் கோட்டையின் வாயிற் பகுதியில் உண்டான திடீர் சுறுசுறுப்புக்கான காரணத்தை வினவியபோது சினன் தந்த பதில் புத்தொளியை அளித்தாற் போலிருந்தது.

"சரியாக அறிந்தாயா? விஷ்ணுசித்தரா விஜயம் செய்கிறார்?" என்று சந்தேகத்துடன் மேலும் கேட்டான்.

"ஆம் பிரபு. பெரியாழ்வார் என்று சொன்னார்கள். அவர்தான் இன்றிரவு மதுரைக்கு விஜயம் செய்கிறாராம்" என்றான் சினன்.

பாண்டிய நாட்டில் பிறந்து கண்ணன்மேல் காதல் கொண்டு அவனது பரம அடியவராய் தன்னைக் கருதிக் கொண்டவரும், வாழ்க்கைப்பட்டால் கண்ணனுக்குத் தான் வாழ்க்கைப்படுவேன் என்று கூறி அக்கண்ணனுக்கு சூடிக்கொடுத்த மாலையைச் சூட்டிக் கொண்டு திருப்பாவை அமுதத்தை திருவாய் மலர்ந்தருளிய சூடிக்கொடுத்த நாச்சியாரென்னும் ஆண்டாளைப் பெற்றெடுத்தவரும், திருமொழி பாடி நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு அழகு செய்தவரும், ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தத்தைத் தலைமேற்கொண்டு சுடராழியும் பாஞ்ச சன்யமும் கொண்ட திருமாலழகனைப் பாடிப் பரவுவதையே வாழ்க்கைப் பயனாய்க் கொண்டவரும், விஷ்ணுசித்தர் என்ற

இயற்திருநாமமும், பெரியாழ்வார் என்னும் பெரும் பெயரும் கொண்ட அந்த வைஷ்ணவ சிரேஷ்டர் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் ஆளும் மதுரையம்பதிக்கு விஜயம் செய்கிறார் என்ற செய்தி அவனைப் பலவகைகளில் பரவசப்படுத்தியது. ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனின் அவையில் பொற்கிழி பெறப்போகும் அப்பெரியவரின் விஜயத்தை★ கோட்டைக்குள் நுழைய வேண்டிய தன் சுயநல காரியத்திற்காகப் பயன்படுத்தத் தீர்மானித்துவிட்ட அவன் அந்த தீர்மானத்திற்காக அப்பெரியாரிடம் மானசீகமான மன்னிப்பை மனத்திற்குள் கேட்டுக் கொண்டு சீனனை நோக்கி, "இப்போது பெரியாழ்வார் எங்கிருக்கிறார்?" என்று வினவினான்.

"திருமாலிருஞ் சோலையில் இருக்கிறாராம்" என்றான்.

"சரி. நாம் இருவரும் அங்கு செல்வோம். பிரசித்திப் பெற்ற அந்த விஷ்ணுசித்தருக்குப் பாதுகாப்பாகவும் மரியாதையின் அடையாளமாகவும் பாண்டியரது காவல் வீரர்கள் புரவிகளில் கூடவே வருவார்கள். அவர்களில் இருவரது இடத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் வழி. இல்லையென்றால் இப்போதைக்கு நம்மால் உள்ளே நுழைய முடியாது."

"ஆபத்தான திட்டம்" என்றான் சீனன்.

"வேறு வழியில்லை சீனா. சாதாரண மனிதனாக முயன்றேன். முடியவில்லை. என்னை யாரென்று கூறிக் கொண்டாலோ வாயிலிலேயே வெட்டிப் போடுவார்கள். இப்படியுமில்லாமல் அப்படியுமில்லாமல்தான் முயல வேண்டும்."

"திங்கள் திட்டத்திலும் வெட்டுப்பட வாய்ப்புகள் உண்டு" என்றான் சீனன்.

"வாளும் வெட்டும் குறுக்கிடாத வாழ்க்கை வீரர்களுக்கு அமையாது சீனா. அவைகளுக்காக நாம் தயங்கிக் கொண்டிருக்க முடியாது. ஆனால் முட்டாள்தனமாக அவற்றுக்கு இரையாகாமல் இருக்க முயலலாம் அல்லவா? ஆகவே இருவரும்

---

★ 1. பாண்டியன் கொண்டாடப் பட்டர் பிரான் வந்தானென்று
ஈண்டிய சங்கமெடுத் தூத - வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று

-பெரியாழ்வார் திருமொழிகளின் தனியன்

2. பெரியாழ்வார் பாண்டிய மன்னனான ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனுடைய அவைக் களத்தில் சமயவாதம் செய்து வெற்றி பெற்றார்.

-பக்கம் 189 தென்னிந்திய வரலாறு (பகுதி 2) கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி



பாண்டிய வீரர்கள் இருவரைப் பிரித்து ஒதுக்கி அவர்களது உடைகளை தரித்துக்கொள்ள வேண்டும். ஆமாம், நீ என்ன வேடம் போட்டாலும் பொருத்தமாக இல்லை" என்று கூறிய அவன், "எதற்கும் முகத்தைப் பாதி மூடிக் கொள்கிற மாதிரி தலைப்பாகையை அணிந்து கொள். கோட்டைக்குள் நுழையும் நேரம் இரவு நேரமானதால் ஓரளவு பரவாயில்லை" என்றான்.

பிறகு இருவரும் திருமாலிருஞ் சோலைக்குப் பயணமானார்கள்.

பசுமை கொஞ்சும் அத்திருமாலிருஞ் சோலையில் விஷ்ணு சித்தர் தங்கியிருந்ததன் பொருட்டு ஏராளமான பக்தகோடிகள் கூடியிருந்தார்கள். அந்த அழகிய மலையூர் திருவிழாக் கோலம் பூண்டு நிறைந்த திருமகள்போல் காட்சி தந்தது. கூட்டம் பெருகியதால் கொள்ளையும் பெருகுமாதலால் காவலும் பெருகியிருந்தது. பாண்டிய நாட்டில் பெரியாழ்வார் மிகவும் மதிக்கப்பட்ட மனிதராதலால் அவருக்கும் அவர் பொருட்டு வந்த எவருக்கும் பாதுகாப்பு நல்கும் பொருட்டு அமர்த்தப்பட்டிருந்த பாண்டிய காவல் வீரர்கள் அழகர் மலை வட்டாரம் முழுதும் உலவிய வண்ணமிருந்தார்கள். அவர்களில் இருவரோடு பேச்சு கொடுத்து அவர்கள் மீது பேயெனப் பாய்ந்து வீழ்த்திய சீனன் விடுவிடுவென காரியங்களில் ஈடுபட்டான். வீழ்த்தப்பட்ட வீரர்கள் ஆடை மாற்றப்பட்டு கட்டிவிடப்பட்டார்கள். அவர்களது உடைகள் அபராஜிதனின் உடலிலும் சீனனின் உடலிலும் ஏறின. இருவரும் பாண்டிய வீரர்களது புரவிகளில் ஏறி மக்கள் கூட்டமிருந்த பகுதிக்கு வந்தபோது இரவு தன் போர்வையை வானில் வீசியெறிந்தது. அதேசமயம் அழகர் ஆலயத்திலிருந்து ஆழ்வார் புறப்பட்டதாலும், கூடிக்கிடந்த மக்கள் சிதறி ஒதுங்கியதாலும், அந்தணர்கள் அணிவகுக்கத் தொடங்கியதாலும் இவ்விரு வீரர்களையும் பாண்டிய காவல் வீரர்கள் சரிவர கவனிக்கவில்லை. எப்பேர்ப்பட்ட துரதிர்ஷ்டசாலியின் வாழ்விலும் ஒரு சில அதிர்ஷ்ட நேரங்களாவது இருக்கும் என்பதையும், அப்படியொரு நேரமே தற்போது வாய்த்திருக்கிறது என்பதையும் புரிந்து கொண்ட அபராஜிதனும் சீனனும் திருப்தியோடு ஊர்வலத்தின் இரு பக்கங்களிலும் சென்ற காவல் வீரர்களின் வரிசையில் கலந்து கொண்டார்கள்.

பயணத்தின்போது அபராஜிதனுக்கு பெரியாழ்வாரைக் காணும் வாய்ப்புக் கிட்டியது. கூடியிருந்தவர்கள் அமர்க்களப்படுத்தினாலும் அவரென்னவோ எளிமையாயும் அமைதியாயுமே காணப்பட்டார். மரச்சிவிகையில், மரவுரி

தரித்து, திருதண்டத்தையும் பன்னிரு திருமண் காப்புகளையும் தாங்கியவராய் காணப்பட்ட அவரது திருமுகத்தில் மிகவும் அரிதாக நிலவிய சாந்தக் களையினைப் பந்த ஒளியில் கண்ட பல்லவ அபராஜிதன் அவரை மனத்திற்குள் மதிக்கவே செய்தான்.

ஊர்வலம் மதுரையை அடைந்தபோது பேராரவாரம் உண்டாகி பெருவிழாபோல் அமர்க்களப்பட்டது. மரப்பாலத்தில் வையையைக் கடந்து வடக்கு வாசலை அடைந்தபோது காவல் வீரர்கள் அனைவரையும் கண்ணும் கருத்துமாய் கவனித்தார்கள். விஷ்ணு சித்தருடன் வந்த அந்தணர்களிடம் அடையாள முத்திரைகள் சோதிக்கப்பட்ட பின்னே அவர்கள் உள்ளே புக அனுமதிக்கப்பட்டார்கள். சோதிக்கப்படாதவர் ஆழ்வாரும் அவரது சீடர் செல்வ நம்பிகளும்தான். ஊர்வலத்தினரை இரு புறங்களிலும் காத்து வந்த பாண்டிய வீரர்கள் ஊர்வலத்தினர் உள்ளே நுழைந்தபோது வாயிலுக்கு வெளியிலேயே நின்று கடைசியில் கும்பலாக உள்ளே பிரவேசிக்கலானார்கள். அவர்களுடன் அபராஜிதனும் சினனும் சென்றபோது அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது.

வீரர்களோடு புரவியில் நுழைந்து கொண்டிருந்த சினன் சற்றே பொறுமையிழந்து புரவியின் பிடரியைத் தூண்டியபோது அப்புரவி மேலே எம்பிக் குதித்ததால் பக்கத்திலிருந்த பாண்டிய வீரரின் வேலொன்று சினனின் தலைப்பாகையை அசைத்துத் தள்ளிவிடவே அவனது சொரூபம் புலப்பட்டது. அவனது முகம் தெளிவாகப் புலப்பட்ட பட்சத்தில் அவன் பாண்டிய வீரனல்ல என்பதை எளிதில் புரிந்துகொண்ட காவல் வீரர்கள், "டேய் யார் நீ?" என்றபடி சூழ்ந்து கொள்ளலானார்கள். நிலைமை மிதமிஞ்சி விட்டதைக் கண்ட சினன் அபராஜிதனை எச்சரிக்க விரும்பித் திரும்பியபோது அபராஜிதன் பக்கத்தில் காணாததை உணர்ந்தான். மறுகணம் அவனது நடவடிக்கை பேய் நடவடிக்கையாய் தொடங்கியது. புரவியைத் திடீரெனத் தூண்டிவிட்ட அவன் கண்மண் தெரியாமல் புரவியை மடக்கி இயக்கவே குழப்பம் உண்டாகி உள்ளே நுழைய வழியும் உண்டாயிற்று. மின்னல் வேகத்தில் உள்ளே சினன் ஊடுருவி விடவே பாண்டிய வீரர்கள் "ஒற்றன். பிடியுங்கள். பிடியுங்கள்" என்றபடி அவனைத் துரத்தினார்கள். உள்ளே ஏற்கெனவே பெருங்கூட்டம் நுழைந்திருந்ததால் தற்போது குழப்பம் அதிகரித்து கூட்டத்தில் சினன் கலந்து மறைந்தான்.

சினனின் தலைப்பாகை நழுவும் முன்பாகவே முன்னேறிப் போய்விட்டிருந்த அபராஜிதனுக்கும் இக்குழப்பம் வசதியைச்



செய்தது. காவல் வீரர்கள் பலவிதமாய் துரத்தத் தொடங்கியதும் கலைந்தோடிய மக்களுக்கிடையில் நடந்தும் ஓடியுமாய்ச் சென்றான் அபராஜிதன். கூட்டமானது நெடுந்தூரம் வரை வியாபித்திருந்ததால் நன்றாகக் கலைந்துபோய் அனைவரையும் தாறுமாறாக ஓட வைத்தது. அவ்வாறு தாறுமாறாகவும் திக்குத் தெரியாமலும் ஓடிய அபராஜிதன் சளைக்கும் அளவிற்கு ஓடினான். கூட்டமில்லாத பகுதிக்கு வந்ததும் இருட்டைத் தேடிப்பிடித்துப் பதுங்கி நடந்தான். பரத்தையர் தெருவிலும் விவரம் தெரியாமல் அவனப்படிச் சென்றதைக் கண்ட கணிகைகள் சிலர் கொல்லென்று சிரித்தார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நடந்த அவன் நகரின் பிரதான அல்லங்காடிக்கு வந்து சேர்ந்தான். இரவு வெகு நேரமாகியும் வியாபாரம் நடந்து கொண்டிருந்த அந்த கலகலப்பான ஆடிவீதிக்கு வந்தபின் ஆடி அலுத்த நிலைக்கு வந்து விட்டானாதலால் கண்ணில்பட்ட மாளிகையொன்றில் நுழைந்தான். பிரதான வாசலில் மண்டிக்கிடந்த இருளில் போய் அமர்ந்தான். கண்கள் செருகிக் கொண்டு சென்றன.

எவ்வளவு நேரமாக அவன் அங்கிருந்தானோ தெரியாது. கண்விழித்தபோது அவனிருந்த இடம் மாறுபட்டுப் போயிருந்தது மட்டுமின்றிப் பொழுதும் நன்றாய் விடிந்திருந்தது. அதோடு யார் யாரோ பேசும் அரவங்களும் அவனது செவிகளில் விழுந்தன. கண்களைக் கசக்கிக் கொண்ட அவன் எழுந்து கொள்ள முயன்றபோது, "எழுந்துகொள்ள முயல வேண்டாம். காயம் சற்று ஆறட்டும்" என்று கட்டையான குரலொன்று ஒலித்தது. பெரிதும் வியந்துபோன அபராஜிதன் தன் உடலைத் தொட்டுப் பார்த்துக் கொண்டபோது வலது தோளில் கட்டொன்று போடப்பட்டிருந்தது தெரிந்தது. "இதென்ன கட்டு? இது எப்படி வந்தது? யார் கட்டினார்கள்?" என்றெல்லாம் சரமாரியாகக் கேட்டுக் கொண்டான். அப்போது அவனுக்கு அருகில் மலை போன்றதொரு உருவம் நெருங்கி வந்து நின்றது. கண்களை உயர்த்திப் பார்த்தான் அபராஜிதன். தனக்கருகில் மொட்டைத் தலையும் காவியுமாய் சாமியாரொருவர் நின்றிருப்பதைக் கண்டான். ஏதோ கேட்கும் பாவனையில் அவனது உதடுகள் அசைந்தன. அதைக் கண்ட அடிகள், "என்ன வேண்டும்?" என்பதுபோல் தலையை ஆட்டியதும், "இது என்ன இடம்?" என்று மெல்ல வினவினான் அவன். அதற்கு "இப்போது என்ன அவசரம்? காயம் ஆறட்டும்" என்றார் அடிகள்.

"இதென்ன காயம்? எப்படிப்பட்டது?" என்றான்.

"அதைப்பற்றி நீயல்லவா சொல்ல வேண்டும்?" என்றார் அடிகள்.

முன்னாள் இரவு நடந்ததை நினைவு கூர்ந்தான் அபராஜிதன். கூட்டத்தில் சிதறி ஓடியபோது காவல் வீரர்களில் யாராவது தன் மீது வேலெறிந்திருக்க வேண்டும் என்றும், அது தெரியாமல் தான் தொடர்ந்து ஓடியிருக்க வேண்டும் என்றும், அந்தக் களைப்பினால் தான் மாளிகையின் முன்னே அமர்ந்ததுமே மயங்கி விழுந்திருக்க வேண்டும் என்றும் கருதிய அவன். "சிகிச்சைக்கு மிகவும் நன்றி அடிகளே" என்று தெரிவித்துக் கொண்டான்.

"நன்றியைச் சொல்ல வேண்டியவர்களிடம் சொல்" என்றார் அடிகள்.

"யாரிடம் சொல்ல வேண்டும்?" வினவினான் அபராஜிதன்.

"வருவார்கள். அவர்களிடம் சொல்" என்று அடிகள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சலங்கை ஒலிகளும் வளையோசைகளும் கேட்டன.

"இதோ வந்துவிட்டாள். அவளிடம் தெரிவி உன் நன்றியை. மாளிகை வாசலில் மயங்கிக்கிடந்த உன்னைக் கண்டவள் அவள். உனக்கு உண்டாகியிருந்த காயத்தைக் கண்டவள் அவள். காயத்தைச் சோதித்தவள் அவள். சோதித்துக் கட்டைப் போட்டவளும் அவள்தான்" என்று கூறிய அடிகள் அங்கே வந்து கொண்டிருந்தவளிடம், "வா, மயில் நிற மங்கை. இவன் விழித்துக் கொண்டிருக்கிறான்" என்றார்.

அபராஜிதனுக்கு அனைத்தும் கனவுபோல் இருந்தது. கண்ணை முன்போல் உயர்த்திப் பார்த்தபோது, மயில் நிற மங்கை தனக்குச் சற்றுத்தள்ளி நின்றிருப்பதைக் கண்டான். ஆனாலும் அவளைப் பூரணமாய் பார்க்க முடியவில்லையாதலால் எழுந்து கொள்ள முயன்றான்.

"எழ வேண்டாம் என்று சொன்னது நினைவில்லையா உனக்கு?" என்றார் அடிகள்.

"சிகிச்சை அளித்தவரைப் பார்க்கலாம் என்றுதான்..." இழுத்தான் அபராஜிதன்.

"முகத்தைப் பார்த்து என்ன செய்துவிடப் போகிறாய்?" கேட்டார் அடிகள்.

"நன்றியைத் தெரிவிக்கலாம்."

"அதற்காக எழ முயன்றால் உன் காயம் பெரிதாவதை யாராலும் தடுக்க முடியாது."

"அடிகளே, நான் பார்க்காத காயங்களே இல்லை. ஆகவேதான் சொல்கிறேன். சிகிச்சை அளித்தவரை காண இந்த



காயத்தை ஒரு தடையாக நீங்கள் சொல்வீர்களானால் அக்காயத்தை அதிகமாக்கிக் கொண்டாவது மருந்திட்டவரைப் பார்க்கச் சித்தமாய் இருக்கிறேன்" என்றான் அபராஜிதன்.

அதைக் கேட்டதும் நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்த அடிகள் "பார்த்தாயா பெண்ணே? உன்னைப் பார்ப்பதற்காக காயப்படவும் இவன் தயாராக இருக்கிறானாம். காயப்படுவதற்கென்ன? முட்டாள் தனமாகக்கூடப் படலாம். ஆனால் இருக்கிற கஷ்டமெல்லாம் சிகிச்சையளிப்பதில் தானே?" என்றார்.

இந்த நிலையில் இருந்த இடத்தைவிட்டுச் சற்றே நகர்ந்த அப்பெண், "கஷ்டமென்ன இருக்கிறது இதில்?" என்று அடிகளிடம் கேட்டுவிட்டு அபராஜிதனை நோக்கி, "ஐயா வீரரே, முதலில் உங்கள் காயம் பூரணமாக குணமடையட்டும். நிதானமாக என்னைப் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொன்னாள்.

"உதவி செய்தவர்கள் பொறுத்திருக்கலாம். உதவியை அடைந்தவர்கள் எப்படிப் பொறுத்திருப்பது? எப்படி முடியும்?" என்றான் அபராஜிதன்.

"அப்படியென்ன பெரிதாக உதவி செய்துவிட்டார்கள்? காயத்திற்கு மருந்திடுவதும் கட்டுப் போடுவதும் சிறிய விஷயங்கள்" என்று அழகிய குரலில் சொன்னாள் அவள்.

"இருக்கலாம். ஆனால் இந்தச் சிறிய விஷயத்தை அழகிய பெண்கள் எல்லோருமே செய்துவிடுவதில்லை."

மயில் நிற மங்கைக்கு என்ன பேசுவதென்று விளங்கவில்லை. அடிகளைப் பார்த்து, "அடிகளே, இவரைச் சற்று பேசாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நான் போய் உடம்பைப் பிடித்துவிடவும் துடைத்துவிடவும் ஆட்களை அனுப்புகிறேன்" என்று கூறி வெளியேற எத்தனித்தாள்.

அந்த நேரத்தில் உடம்பைப் பிடித்துவிட அவள் அழைக்காமலேயே வந்து சேர்ந்த மாதிரி மாளிகையின் கதவுகள் மூர்க்கமாகத் திறக்கப்பட்டுத் தடார் தடாரென மூடப்பட்டு தாளிடும் அரவமெழுந்தது. அதையொட்டி நான்கைந்து பேர் அவர்கள் இருந்த அறையில் நுழைந்தார்கள். மயில் நிற மங்கையின் கரத்தை ஒருவன் பற்றவும் செய்தான். அடிகள் திகைத்துப் போய் நின்றார்.

★ ★ ★

# அத்தியாயம் மூன்று

(கலி விருத்தம்)

படுக்கையில் படுத்தாலும் படுகாய மடைந்தாலும்
உடுக்கையினை இழந்திட்ட படுநிலையில் உழன்றாலும்
வடிக்காத ஓவியமாம் வடிவரசி தனைக்காக்க
நடித்தேதான் செயல்முடித்த நிமலனவன் திறம் யாதோ?

முற்றிலும் எதிர்பாராதவிதத்தில் நிலைமையானது மாறிவிட்டதையும் அந்த மாற்றம் விபரீதமாய் இருந்ததையும் கண்ட அடிகள் திகைத்தாரென்றால் மயில் நிற மங்கையோ செய்வதறியாமல் ஸ்தம்பித்துப் போனாள். முரட்டுத்தனமாக உள்ளே பிரவேசித்தவர்கள் மாளிகையில் வேறெங்கும் போகாமல் நேராக இந்த அறையில் நுழைந்ததிலிருந்தும் மயில் நிற மங்கையைப் பற்றி இழுத்ததிலிருந்தும் காரியமானது திட்டமிடப்பட்டு நடத்தப்படுகிறது என்பதை இருவரும் உணர்ந்து கொண்டார்கள். பிரவேசித்திருந்த பிரமுகர்கள் தங்கள் வாழ்நாளையெல்லாம் உடல் வளர்க்கவும் உயிர் வளர்க்கவும் செலவழித்தவர்களைப்போல் ஆஜானுபாகு வானவர்களாய் இருந்தார்கள். அவர்களிடம் முரட்டுத் தனத்தையும் பேராசையையும் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதைத் தோற்றமும் பாவனைகளும் உணர்த்தின. வந்திருந்த நால்வரும் பாண்டிய வீரர்களுக்குரிய ஆடைகளையே அணிந்திருந்தார்கள். இதையெல்லாம் கவனித்தார் அடிகள். கீழே தோளில் பச்சைக் காயத்துடன் படுத்திருந்த அபராஜிதனிடமிருந்து எந்தவித உதவியும் கிடைக்காது என்பதையும் புரிந்துகொண்ட அவர், தான் ஏதாவது செய்தால்தான் உண்டு என்பதை உணர்ந்து நெஞ்சிலே சற்று துணிவையும் வரவழைத்துக் கொண்டு, "டேய், யார் நீங்கள்?" என்று கர்ஜித்தார்.

அவரது கர்ஜனையைக் கேட்டு வீரர்கள் சிரிக்கவே செய்தார்கள். அவர்களில் ஒருவன், "நாங்கள் யாராக இருந்தால்தான் என்ன அடிகளாரே?" என்று கேட்கவும் செய்தான்.



"இந்தப் பெண்ணைத் தொட யார் உங்களுக்கு அனுமதியளித்தது?" என்று மீண்டும் சீறினார் அடிகள்.

"அது உங்களுக்குத் தேவையில்லாத விஷயம்" என்றான் ஒருவன்.

"நால்வராக வந்திருப்பதால் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற தைரியத்தில் பேசுகிறீர்களா?"

"அப்படியானால் தாங்கள் ஒருவர் எங்கள் நால்வரை வென்று வீழ்த்திவிடுவீர்கள் என்றாகிறது" நமட்டுச் சிரிப்புடன் கூறினான் ஒருவன்.

இதற்கிடையில் மயில் நிற மங்கையின் கரத்தைப் பற்றியிருந்தவனிடமிருந்து கட்டளையொன்று பிறந்தது.

"டேய், இந்த முட்டாள் சாமியாரைப் பிடித்துத் தூணில் கட்டுங்கள். நாம் புறப்படுவோம்."

கட்டளை முழுதாக வெளிப்படுவதற்குள் சாமியார் கட்டப்பட்டார்.

"ம். புறப்படு மங்கை. போகலாம்" என்றான் கரத்தைப் பிடித்திருந்தவன்.

அப்போது கரகரத்த குரலொன்று எழுந்தது.

"உங்களில் யார் தலைவன்?"

குரலைக் கொடுத்த அபராஜிதனை அனைவரும் பார்த்தார்கள். கரம் பற்றிய வீரன் பேச முற்பட்டு "யாராய் இருந்தால் உனக்கென்ன?" என்றான்.

இதையடுத்து அபராஜிதன் உதிர்த்த சொற்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின.

"மாயபாண்டியரின் காவலர்கள் முட்டாள்தனமாகப் பேச வேண்டாம்"

அபராஜிதன் பேசிய இச்சொற்கள் மயில் நிற மங்கையைப் பிடித்திருந்தவனின் செவிகளில் மந்திரமாய் விழுந்தன. பிரமித்துப் போன அவன் பெண்ணின் கரத்தை விட்டுவிட்டு படுத்துக்கிடந்த அபராஜிதனின் பக்கத்தில் வந்தான். மண்டியிட்டு அமர்ந்து உற்று நோக்கினான்.

அதைக்கண்ட அபராஜிதன், "என்னை நிதானமாகப் பார்த்துக் கொள்ளலாம். காதைக் கொண்டு வா இப்படி" என்றதும் வீரனின் செவிகள் அவனுக்காக தாழ்ந்தன.

அபராஜிதனின் உதடுகள் ரகசியத்தை ஓதின. மறுகணம் அந்த வீரனின் முகம் பளிச்சிட்டது.

'மூர்க்கத்தனமாக நடந்துகொண்டுவிட்டதற்கு மன்னிக்க வேண்டும்' என்று அபராஜிதனிடம் கேட்டுக் கொண்ட அவன் தன் வீரர்களிடம் 'டேய், இப்பெண்ணை ஒன்றும் செய்யாதீர்கள். அடிகளாரையும் கட்டை அவிழ்த்து விடுதலை செய்துவிட்டுப் புறப்படுங்கள்' என்று கட்டளையுமிட்டான்.

அனைத்தும் சில நொடிகளில் நடந்துவிட்டன. வந்த நால்வரும் வெளியேறினார்கள்.

கனவுபோல் நடந்துவிட்ட நிகழ்ச்சிகளைக் கண்ட அக்கட்டழகியும் அடிகளாரும் பிரமித்துப் போய் நின்றார்கள். மாளிகையில் அந்த முரட்டு வீரர்கள் நுழைந்ததைவிட மாளிகையை விட்டு வெளியேறியது பெரும் புதிராக இருந்தது அவர்களுக்கு. முரட்டுத்தனமாகப் பேசிய வீரர் தலைவன் முடிவில் மன்னிப்பு கேட்டானாதலால் அப்படியென்ன ரகசியத்தை அபராஜிதன் கூறியிருக்க முடியும் என்பது அவர்களுக்கு வியப்பாக இருந்தது. வயிறும் வாயுமாய் தானிருந்தும் தன்னால் எதையும் சாதிக்க முடியாமல் போய்விட்ட பட்சத்தில் இந்த அபராஜிதன் காயத்துடன் படுத்துக்கொண்டே சர்வ சாதாரணமாக நிலைமையைத் தலைகீழாக்கிவிட்டதைக் கண்டு வெட்கமும் கொண்டார் அடிகள். மயில் நிற மங்கையோ பரவசத்தில் ஆழ்ந்து போயிருந்தாள்.

இருவரது நிலையையும் கண்ட அபராஜிதன் "என்ன இருவரும் சிலையாகி விட்டீர்கள்?" என்று அவனாகவே வினவினான்.

"உண்மைதான். சிலையாகத்தான் இருந்துவிட்டோம். ஆனால் சிலையாக இருக்க வேண்டிய நீங்களோ பெரும் ஆச்சரியத்தைத் தந்துவிட்டீர்கள்?" என்று மரியாதையோடு கூறிக் கொண்டார் அடிகள்.

"ஆச்சரியத்தையா? எதைச் சொல்கிறீர்கள்?"

"என்னைக் கட்டிப்போட்டு இவளைத் தூக்கிச் செல்ல வந்தவன் மன்னிப்பு கேட்டுவிட்டுச் சென்றது வியப்புக்குரிய நிலையல்லவா?"

"ஓர் ஆடவன் செய்யவேண்டியதைத்தான் செய்தேன் அடிகளே."

"செய்ய முடிந்த நிலையில் இருந்தால்தானே செய்யலாம்."



"அதனால்தான் தந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று. இல்லையென்றால் வாளால் சமாளித்திருப்பேன்."

"ஆமாம், அவனிடம் என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டாள் மயில் நிற மங்கை.

"நீங்களோ பெண். அடிகளும் தள்ளாதவர். நானும் காயப்பட்டுக் கிடக்கிறேன். வந்திருப்பதோ நால்வர். இந்த நிலையில் போருக்கோ, மிரட்டல் பேச்சுகளுக்கோ இடமில்லை என்றறிந்தேன் நான். உங்களைக் கொண்டு போக முயன்றதிலிருந்தே வந்திருப்பவர்கள் மாயபாண்டியரின் ஆட்கள் என்பதை அறிந்து கொண்டேன்."

"அதெப்படி தெரிந்தது உங்களுக்கு?" கேட்டாள் மங்கை.

நான் கோட்டைக்குள் நுழைவதற்கு முன்பாகவே இங்குள்ள நிலவரத்தை என் நண்பன் செங்கவானின் மூலம் அறிந்திருந்தேன். மதுரையில் ஆட்சிபுரியும் ஸ்ரீமாறருக்கு எதிராக மாயபாண்டியன் என்றொருவன் கிளம்பியிருப் பதாகவும் அவன் மறைவில் இருந்து கொண்டு கலகங்களை உண்டாக்கி வருவதாகவும் அறிந்தேன். உங்களைக் கடத்த நான்கு பேர் வந்ததும் இதை நினைவு கூர்ந்தேன். உங்களைக் கடத்தும் ஆட்கள் ஸ்ரீமாறரின் ஆட்களாய் இருக்க முடியாது என்றும் மாயபாண்டியரின் ஆட்களாகவே இருக்க வேண்டும் என்று கருதி பேசினேன். அப்போது வீரர் தலைவன் காட்டிய பிரமிப்பு என் கருத்தை உறுதிப்படுத்தியது."

"அவனிடம் என்ன சொன்னனீர்கள்?"

"என்னை மாயபாண்டியனின் ஒற்றன் என்று கூறிக் கொண்டேன். நாளை இரவு நீங்கள் பாண்டிய மன்னரிடமிருந்து முக்கிய ஓலையொன்று பெற்று பல்லவ நாட்டுக்குச் செல்லவிருப்பதாகவும் அதுவரை உங்களைக் கடத்த முயல வேண்டாம் என்றும் நாளை இரவு வந்தால் ஓலையையும் சேர்த்து உங்களைப் பிடித்துக் கொள்ளலாம் என்றும் கூறி அவர்களில் ஒருவனை அல்லங்காடி வீதியில் இருந்து கொண்டு கண்காணிக்கும்படி சொன்னேன். நம்பினான்."

"அப்படியானால் நாளை இரவு வருவார்களா?"

"ஆம்."

"நாளை இரவு வரச்சொன்னது ஏன்?" வினவினார் அடிகள்.

"என் உடம்பு தேற அவகாசம் வேண்டாமா?" அப்போதுதானே சமாளிக்க முடியும்?"

அபராஜிதனின் புத்திக் கூர்மை அவர்களைக் கவர்ந்தது. காயம்பட்ட நிலையிலும் கவனத்தோடு நடந்துகொண்ட அவனது திறமையை மெச்சிக் கொண்டார்கள்.

"உங்கள் உதவிக்கு ரொம்பவும் நன்றி" என்றாள் அவள்.

"அப்படியென்ன பெரியதாக உதவி செய்யப்பட்டுவிட்டது? நிர்க்கதியில் இருப்பவர்களுக்குத் துணை செய்வதும் உதவுவதும் சிறிய விஷயங்கள்" என்றான் அபராஜிதன்.

தன் வார்த்தைகளையே அவன் உபயோகித்ததை ரசித்த அவள் ஓரக் கண்களால் அவனைப் பார்த்துவிட்டு ஓடி மறைந்தாள்.

அதற்குப் பிறகு அவனுக்கு அங்கே ராஜ உபசாரங்கள் நடந்தன. கட்டும் மாற்றப்பட்டது. அந்த நிலையில் அடிகளை அழைத்த அவன் தன் உடைவாளின் முத்துக்கள் பதித்த உறையை அவரிடம் கொடுத்து மாளிகையின் வாயிற்புறத்தில் செருகி வைக்கும்படி கேட்டுக் கொண்டான்.

அந்தச் செயலால் எதை அவன் எதிர்பார்த்தானோ அது வீண் போகவில்லை. அன்றிரவு அந்த மாளிகையை அடையாளம் கண்டு கொண்டு வந்து சேர்ந்தான் சீனன்.

கோட்டை வாசலில் குழப்பம் விளைவித்ததும் தப்பியோடியதும் இருவருக்குமே பெரிய விஷயங்களல்லவாதலால் அது விஷயமாக அதிகம் பேசிக் கொள்ளவில்லை. அதிலும் சீனனுக்கு இதுபோன்ற விஷயங்கள் சர்வ சாதாரணமானவையாதலால் தன்னைப் பற்றிக் கூறிக் கொள்ளவே இல்லை. அபராஜிதன் மட்டும் அவசியத்தை முன்னிட்டு மயில் நிற மங்கையைப் பிடிக்க வந்த வீரர்களைப் பற்றிக் கூறிவிட்டு "நீ கூறியதெல்லாம் உண்மைதான் சீனா. மதுரையில் இப்போது குழப்பம்தான் நிலவுகிறது" என்றான்.

"ஆம் பிரபு. இன்றெல்லாம் நான் சும்மா இருக்கவில்லை. நகரின் பல பகுதிகளில் சுற்றிக் கவனித்தேன். எல்லா இடங்களிலும் மாயபாண்டியனின் கைகள் ஓங்கியிருக்கின்றன. அவனது ஆட்கள் எங்கு பார்த்தாலும் காணப்படுகிறார்கள். மாயபாண்டியனை மக்கள் மதிக்கவில்லை. ஆனால் அவனது கலக வேலைகளுக்கு அஞ்சுகிறார்கள். பல இடங்களில் கொள்ளை பெருகி பொருள் நஷ்டமும், கொலை பெருகி உயிர் நஷ்டமும் உண்டாகியிருப்பதால் மக்களின் சகஜ வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. பாண்டிய மன்னர் ஸ்ரீமாறர் ரொம்பவும் வேதனையுற்றிருக்கிறார் என்பதும் தெரிந்தது.



முக்கியமான அதிகாரிகளும் பிரமுகர்களும் கொல்லப்பட்டோ கடத்தப்பட்டோ அகற்றப்பட்டு விடுகிறார்கள். இந்தப் பெண்ணும் அந்த வகையில்தான் மாயபாண்டியனது ஆட்களிடம் சிக்கியிருக்க வேண்டும். இந்த மாளிகை அமைச்சருடையது என்று கேள்விப்பட்டேன்."

"அப்படியானால் அவர் இங்கு வருவதற்குள் நாம் இங்கிருந்து போய்விட வேண்டும்."

"அமைச்சருக்கு உங்களைத் தெரியுமா?"

"தெரிந்திருக்கும் என்றுதான் தோன்றுகிறது. அவரது கண்களில் பட்டுவிட்டால் நம் திட்டம் அவ்வளவுதான்."

"இத்தனைக்கும் மாயபாண்டியன் மதுரையில் இல்லை.'

"அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. மதுரையில் கலகங்கள் இருக்கின்றன. மன்னர் குழப்பத்தில் இருக்கிறார். படைகளும் அப்படித்தான் இருக்கும். நமக்கு இவை போதும். இப்படியொரு சூழ்நிலையை எதிர்பார்த்துத்தான் நேரில் பார்த்தறிந்து வர நம்மைப் பல்லவ மன்னர் அனுப்பியிருக்கிறார் என்று தோன்றுகிறது. பாண்டிய நாட்டின் மீது படையெடுக்க இது மிகவும் பொருத்தமான சந்தர்ப்பம். நாம் உடனடியாகப் புறப்பட வேண்டும் சீனா. நீ இப்போதே புறப்பட்டு பாசறைப் பக்கம் செல். படை நிலைகளை உளவறிந்து கொண்டு உறையூருக்குச் செல்லும் திரிசிரபுரச்சாலைக்கு வந்து சேர். பின்னால் நானும் வந்து சேர்ந்து கொள்கிறேன்."

சீனன் சற்று தயங்கவே, "ஏன் சீனா, என்ன தயக்கம்?" என்று வினவினான் அபராஜிதன்.

"நாளைய இரவு விருந்தை முடித்துக் கொண்டு புறப்படுகிறேனே" என்றான் சீனன்.

"விருந்தா?"

"மாயபாண்டியனின் சகாக்கள் வருவார்கள் அல்லவா?"

"அதைச் சொல்கிறாயா? அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன். உடம்பு தேறிவிட்டது எனக்கு."

"இருந்தாலும் வேண்டாம்."

"என் கைகள் ஊறுகின்றன. கொலை செய்து ரொம்ப நாளாகிறது."

"சரி சரி. நீயே பார்த்துக்கொள். ஆனால் யாரையும் கொன்றுவிடாதே. இங்கேயே ஓர் அறையில் கட்டிப்

போட்டுவிடு. நாம் வெளியேறும் வரை அவர்கள் உள்ளேயே இருக்க வேண்டும்."

"அதை விட அவர்களைத் தீர்த்துவிடுவது நல்லதல்லவா?"

"தேவை பற்ற காரியங்களைச் செய்ய வேண்டாம். அதோடு அவர்களைக் கொல்வதால் சிரமங்கள் உண்டாகும்."

"அது சரி பிரபு. நாளை இரவு வரை ஏன் நாம் காத்திருக்க வேண்டும்? இப்போதே போய்விட்டால் என்ன?"

நம்மீது இங்குள்ளவர்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. அதைக் கெடுத்துவிடக் கூடாது. அதோடு காயப்பட்டுக் கிடந்த என்னைக் காப்பாற்றிச் சிகிச்சையளித்த பெண்ணை ஆபத்தில் விட்டுவிடுவதோ, ஏமாற்றிவிட்டுப் போவதோ சரியல்ல. மயில் நிற மங்கை மட்டும் வேறு மாதிரி நடந்து கொண்டிருந்தால் நான் அநேகமாய் பாண்டியர் சிறையில் இருந்திருப்பேன். அனைத்துத் திட்டங்களும் அழிந்துபோயிருக்கும். நான் பின்னால் ஒரு வெற்றியினை அடைந்தால் அதற்கு இந்தப் பெண்தான் அஸ்திவாரம் போட்டதாகச் சொல்ல வேண்டும். அவளைக் களவாட விட்டுவிட்டு நான் வர முடியாது."

"நாளை இரவு காத்துவிட்டால் போதுமா?"

"நாளை பார்த்துக் கொள்ளலாம்" என்றான் அபராஜிதன்.

"ஆனால் இன்றே அதைத் தீர்மானம் செய்ய வேண்டியதாயிற்று. இருவரும் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் பரபரப்புடன் உள்ளே நுழைந்த மயில் நிற மங்கை, அவர்கள் வந்துவிட்டார்கள்" என்றாள்.

"யார்?" என்று கேட்டான் அபராஜிதன்.

"மாயபாண்டியனின் ஆட்கள்" என்றாள் மயில் நிற மங்கை. அவளது மேனி நடுங்கியது.

* * *



# அத்தியாயம் நான்கு

(கலித்துறை)

**வயல் துள்ளி விளையாடும் மயிற்கூட்டம் வாய்விரித்துச் சிரித்திருக்க**
**கயல் துள்ளி விளையாடும் கடல்வையை தழைத்துவரும் மதுரையினில்**
**எழில் துள்ளி விளையாடும் விழிமாதர் இடையினிலே தனித்திலங்கும்**
**மயில் நிறத்து மடந்தையவள் முழுத்திறத்தை எப்படித்தான் இயம்புவதோ?**

மயில் நிற மங்கை சொன்ன விஷயத்தைக் கேட்டதும் அபராஜிதன் சினனைப் பார்த்து "இன்றே வந்துவிட்டார்கள். ஏதோ நடந்திருக்கிறது. நம்மீது சந்தேகம் வந்திருக்க வேண்டும்" என்றான் சாதாரணமாக.

"அதனால் அவர்களுக்கெல்லாம் உபயோகம் இருக்கப் போவதில்லை" சினன்.

"ஏன்?"

"இங்கிருந்துதான் அவர்கள் திரும்பிப் போகப் போவதில்லையே." அந்த நிலையில் மாயபாண்டியனின் வீரர்கள் திமுதிமுவென அறைக்குள் நுழைந்தார்கள். அறைக்குள் இரு பந்தங்கள் எரிந்து கொண்டிருந்தன. அவை உண்டாக்கியிருந்த ஒளியில் வீரர் தலைவனின் குரூரமான முகத்தை நன்றாகக் கண்டான் அபராஜிதன். அவ்வீரர் தலைவனிடம் சந்தேகம் துளிர்விட்டிருந்ததையும் அறிந்துகொள்ள முடிந்தது. ஆனால் சிறிதும் நிதானம் தவறாமல் மஞ்சத்திலேயே அமர்ந்துகொண்டு தோளிலிருந்த காயத்தின் மீது இருந்த கட்டைப் பிரிக்கலானான். அவனிடம் இருந்த நிதானம் வீரர் தலைவனிடம் இல்லை. அவனது பேச்சே அதைப் புலப்படுத்தியது. "டேய் எழுந்திரு" என்று மூர்க்கமாக இரைந்தான் அபராஜிதனை நோக்கி. "பிரபுவை மரியாதையாக அழைப்பது நல்லது" என்று இடையே ஒரு குரல் குறுக்கிட்டது.

குரல் வந்த திசையில் இருளும் ஒளியும் பாதி பாதியாய் நிலவிய பகுதியில் பேயைப் போல் அமர்ந்திருந்த சினனைக் கண்ட வீரர் தலைவன் வெகுண்டுபோய் "டேய், நீ யார்?" என்று இரைந்தான்.

"சீனன்" சாதாரணமாகச் சொல்லிக் கொண்டான் சென்கவான்.

"அதுதான் உன் பூனை முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே" என்றான் வீரர் தலைவன்.

"வேறென்ன தெரிய வேண்டுமோ?" சீனனின் குரல் விஷமமாக வெளிப்பட்டது.

"நீ தமிழ் பேசுகிறாயே?" என்றான் தலைவன்.

"நான் பேசுவதே அசாதாரணமானதுதான்"

"ஏனோ?"

"பேசிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்காத விஷயம்" என்று கூறிக்கொண்டே ஏதோ மாயக்காரனைப் போல் நடந்து கொண்டான் சீனன். இருந்த இடத்திலிருந்தே ஏதோ தவளையைப் போல் திடீரெனத் தாவி மஞ்சத்திற்கு இப்புறமாக வந்த அவன் இடையில் செருகியிருந்த வினோத ஆயுதத்தை எடுத்து வீரனொருவனின் தலையில் 'மொட்'டென்று வேகமாகப் பிரயோகித்துவிடவே 'ஹா' என அலறியபடி அந்த வீரன் கீழே விழுந்தான். இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட இச்சம்பவத்தால் தடுமாறிப் போன வீரர் தலைவன், "டேய் இந்தப் பிசாசை விடாதீர்கள். சூழ்ந்து கொண்டு கொல்லுங்கள்" என்று கூச்சலிட்டு அவனும் வாளை உருவிக் கொண்டான்.

அப்படியொரு சந்தர்ப்பத்திற்கே காத்திருந்ததை வெளிப்படுத்தியது சீனனின் முகம். மாயபாண்டியனின் வீரர்கள் தன்னைச் சூழ்ந்து கொள்ளாமல் தனக்கு முன்னால் வரிசையாய் திரளும்படி ஒதுங்கி நின்ற சீனன், முள்பந்து போன்ற தலையமைப்பும் நீண்ட பிடியும் கொண்ட முள்ளாயுதத்தை நீட்டிப் பிடித்துக் கொண்டான். ஆனால் வீரர்கள் எதிர்பார்த்த மாதிரி அவர்களது வாட்களோடு முள்ளாயுதத்தை மோதவிடாமல் முன்போலவே திடீரென குனிந்து இமைக்கும் நேரத்தில் தவளைபோல் தாவி எதிர்வரிசையில் ஓரமாய் நின்ற வீரனின் இடுப்பில் முள்ளாயுதத்தை ஓங்கியடித்தான். கவசமற்ற உடலில் பயங்கர முள்ளாயுதம் வேகமாக அடிக்கப்படவே இடுப்பில் பெருங்காயத்திற்கு ஆளான வீரன் சரிந்து விழுந்தான். அவன் சரிந்த வினாடியிலேயே முள்ளாயுதத்தை இதர வீரர்களின் வாட்களுடன் மோதவிட்டான். தம்முடன் மோத வந்துவிட்டான் என வீரர்கள் இருவரும் வீரர் தலைவனும் மும்முரமாகப் போரிட முனைந்தபோது, மீண்டும் சீனன் குனிந்து தாவி வேறொரு வீரனையும் கன்னத்தைச் சிதைத்து வீழ்த்தினான்.

சீனன் எதை எப்போது செய்வானென புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலை உண்டாகிவிடவே, திடீரென வேறொரு



தீர்மானத்திற்கு வந்த வீரர் தலைவன் மூலையிலே சிலையென நின்றிருந்த மயில் நிற மங்கையின் ஊட்டியில் வாளை வைத்துச் சீனனை மடக்கிவிடலாமெனத் திரும்பியபோது அபராஜிதனின் வாள் அவனை உரசியது. காயம்பட்டவனை எளிதில் சமாளித்துவிடலாமென அவன் போட்ட கணக்கும் பொய்த்தது. காயம் வலது தோளில் இருந்தாலும் போரை இடது கையால் நடத்திக் காட்டினான் அபராஜிதன். இடது கையால் மிகவும் லகுவாக அவன் வாளைச் சுழற்றியவிதம் வீரர் தலைவனை மருள வைத்தது. அந்த மருட்சியில் விலகிப்போன கவனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவனது வாளை அபராஜிதன் தட்டிப் பறிப்பதற்கும் எஞ்சிய வீரனை சீனன் காயப்படுத்தி வீழ்த்தவும் சரியாய் இருந்தது.

பிறகு நடந்தவற்றை விவரிக்க வேண்டியதில்லை. தலைவனை முதலிலும், காயம்பட்டவரைப் பிறகுமாய்த் தனித்தனி அறைகளில் அடிகளாரின் துணையைக் கொண்டு கட்டிப்போட்டு பூட்டிவிட்ட சீனன், "நான் வருகிறேன் பிரபு. தாங்கள் கூறிய இடத்தில் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு எந்தப் பாராட்டையும் எதிர்பார்க்காமல் மாளிகையை விட்டு வெளியேறினான். அனைத்துச் சம்பவங்களும் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்திருந்தன. அனைத்துச் சம்பவங்களும் நம்ப முடியாதவைகளாய் இருந்தன. அனைத்துச் சம்பவங்களும் திறமைக்கு அடையாளங்களாய் அமைந்தன. மாளிகை வாயிலில் மயங்கிக் கிடந்த அபராஜிதனைக் கண்டபோதும் சரி, தூக்கி வந்து சிகிச்சையளித்தபோதும் சரி, அவன் தூங்கி விழித்துப் பேசியபோதும் சரி இப்படிப்பட்ட சம்பவங்களையெல்லாம் மயில் நிற மங்கை சிறிதும் எதிர்பார்க்கவில்லை. காயமுற்ற அபராஜிதனிடம் இத்தகைய ஆற்றல் இருக்கும் என்றும் எதிர்பார்க்கவில்லை.

அறையின் மூலையில் பதுமையென நின்றிருந்து நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்த அவள், மஞ்சத்தில் ஒன்றுமறியாதவனைப் போல் சாய்ந்து கிடந்த அபராஜிதனைப் பார்த்தாள். அந்தப் பார்வை சாதாரணமான பார்வையாய் இல்லாதிருப்பது அவளுக்கே புரிந்தது. அதுமட்டுமல்ல; உள்ளுக்குள் உருவாகியிருந்த உணர்ச்சிகள்கூட புதியனவாயும் வித்தியாசமானவைகளாயும் இருந்ததைக்கூட உணர்ந்து கொண்டாள் அவள். மஞ்சத்தில் அமர்ந்திருந்தவன் தன் நெஞ்சத்தில் அமர்ந்திருப்பதாகவும் தோன்றியது அவளுக்கு. புருஷ லட்சணங்கள் அனைத்தும் துலங்க கம்பீரத் தோரணையோடும் பிரகாசமான முகக் களையோடும் காணப்பட்ட அவனைப் பார்க்கப் பார்க்க "இப்படிப்

பட்டவனைக் கொண்டு வந்து சிகிச்சை செய்ய நேர்ந்தது தன் பாக்கியம்தான்" என்று கூறிக் கொண்டாள். மேன்மேலும் சிலையாய் நிற்க அவள் விரும்பவில்லை. முடியவுமில்லை. சில பெயர்ந்தாற்போல் அசைந்து தேர் நகர்ந்தாற்போல் நடந்து மஞ்சத்தருகே சென்று மயில் போல் நின்றாள். வீரர்களோடு போரிட்ட சம்பவத்தில் அவளையும் அவள் அந்த அறையில் இருந்ததையும் மறந்து போய்விட்டிருந்த அபராஜிதன், தற்போது அவள் தன்னருகே வந்து நின்றபோது புதியதாய் பார்ப்பதுபோல் அவளைப் பார்த்தான். மிகவும் நெருக்கத்தில் இப்போதுதான் முதன்முறையாகப் பார்க்கிறானாதலாலும், காயம் ஆறி சலிப்புக் களையும் மாறிய நிலைக்கு வந்துவிட்டிருந்தானாதலாலும் தற்போதுதான் அவளது பூரண எழிலையும் அவனால் காண முடிந்தது.

எழில் என்ற வார்த்தையே இவளால்தான் தோன்றியதோ என்று சந்தேகிக்கும் வகையில் பிரமிக்கும் அழகுடன் காட்சியளித்தாள் அவள். உச்சி முதல் உள்ளங்கால் வரை கண்களாலேயே அளப்பவனைப் போல் பார்த்த அவன், அவளது மேனி சாதாரண அழகிகளைப்போல் சிவந்தோ வெளுத்தோ இல்லாமல் நீலவண்ணக் கண்ணனை நினைவுபடுத்துவதுபோல் சற்றே நீலமாக இருந்ததைக் கண்டு 'இதனால் இவளுக்கு மயில் நிற மங்கை என்ற பெயர் வந்தது போலிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டான். அவளது நீல நயனங்களில் எந்த ஆடவரையும் கவரவல்ல சக்தி இருந்ததை அவளது விழி அசைவுகள் மூலமே கண்டுகொண்ட அவன், இவளுக்குக் கண்கள் அமைந்ததே பிறரைக் கவர்வதற்குத்தானோ என்று நினைத்தான். வானவில்லைப்போல் மின்னிய அவளது அதரங்கள் வா வா'வென அவனை அழைப்பதுபோல் நெளிந்தன. கலைந்துகிடந்த கூந்தல் இஷ்டப்படி அவளது காதோரங்களில் ஒதுங்கி அவளது கன்னத்தில் சித்திரம் வரைவதுபோல் பட்டுப் பட்டு விலகின.

அவள் சிறிய பட்டாடையை மட்டுமே அணிந்து கொண்டு மேனியின் இயற்கை எழில்களை வெளிப்படுத்தியிருந் தாளாதலால் ஆடையில் பூரணமாய் மறைய வேண்டிய பகுதிகள் அங்குமிங்குமாய் எட்டிப் பார்க்க முயன்றதால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பெயர்போன அபராஜிதன்கூடத் திணறவே செய்தான். கட்டுப்படுத்திக்கொள்ள முகத்தைத் திருப்பிக் கொண்டால் கள்ளப்பார்வை அவனைத் தூண்டியது. கள்ளப் பார்வையால் அவளைப் பார்த்தால் கட்டுப்படுத்திக்கொள்ள அவன் தூண்டப்பட்டான். தன்னுடைய மேனியாலும், மேனியின் அழகாலும், அழகின் மேன்மையாலும் அவன்



தடுமாறுவது ரசிக்கத்தக்கதாய் இருந்தாலும் அப்படித் தடுமாறவும் தவிக்கவும் வைக்க மயில் நிற மங்கை விரும்பவில்லையாதலால் அவனுடன் பேச முற்பட்டாள். பேசும் துடிப்பு அவளிடம் நிரம்ப இருந்தது. அதற்காகவே நெருங்கி வந்திருந்தாள். எனவே தன்னைச் சற்றுத் தெளிவுபடுத்திக்கொண்டு, "என்னால் இதை மறக்கவே முடியாது" என்றாள் அதிகமாகப் பேச முடியாமல்.

அவளாகப் பேச முற்பட்டது அவனுக்கும் ஆறுதலாக இருந்தது. ஆகவே, அவளப்படி பேசியதும், எதை?' என்று அவளிடமே கேட்டான். அவள் அதைச் சொல்லாமல் "நீங்கள் மட்டும் இல்லாதிருந்தால் என் நிலை என்னாகியிருக்கும்?" என்றாள் அச்சமுடன்.

"என்ன ஆகியிருக்கும்?" கேட்டான் அபராஜிதன்.

"அதை நினைக்கவே பயமாயிருக்கிறது" என்றாள் அவள்.

"இதைச் சொல்கிறீர்களே, வாசலில் கிடந்த என்னை நீங்கள் கவனித்திராவிட்டால் என் நிலை என்னவாகியிருக்கும்?"

"இரண்டிற்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது"

"என்ன வித்தியாசம்?"

"உங்களை யார் கவனித்திருந்தாலும் சிகிச்சை அளித்திருக்க முடியும். ஆனால் உங்கள் தந்திரங்களையும் தீரங்களையும் எல்லோராலும் செய்துவிட முடியாது. நான்தான் பார்த்தேனே."

"உங்களுக்குத்தான் அவை பெரிய விஷயங்களாகத் தெரிகின்றன. எனக்கோ சீனனுக்கோ அவை மிகச் சாதாரணமானவை."

"பொய்."

"எதைப் பொய் என்கிறீர்கள்?"

"முதலில் என்னை மரியாதையாக அழைப்பதை நிறுத்துங்கள்."

"அதெப்படி நிறுத்துவது? நீங்கள் பெரிய இடத்துப் பெண்ணாய் இருக்கலாம்."

"அமைச்சரின் மகள்தான்."

"நான் நினைத்து சரியாகப் போய்விட்டது. உங்களை மரியாதையாக அழைத்ததும் சரி. அதுதான் முறை."

"அமைச்சரின் மகள் என்றாலும் நான் பெண். என்னைப் பெயர் சொல்லி அழைத்தாலே போதும்."

"நீங்கள் நினைப்பதும் சொல்வதும் தவறு. அந்தஸ்துக்கு ஏற்பத்தான் மரியாதை செலுத்த வேண்டும். அரசனாய் இருப்பவன் சாதாரண மனிதன்தான் என்று மரியாதை தராமல் இருந்துவிட முடியுமா? அதெல்லாம் சம்பிரதாயங்கள்."

'சம்பிரதாயங்களை மீறிய விஷயங்களே கிடையாதா?'

'எதைச் சொல்கிறீர்கள்?'

"சம்பிரதாயங்கள் ஆயிரம் இருக்கலாம். அவற்றையெல்லாம் மீறி விருப்பம் என்று ஒன்றிருக்கலாம் அல்லவா?"

அவளது பேச்சைக் கேட்டுப் புன்னகை செய்த அபராஜிதன், "நீங்கள் விரும்பிவிட்டால் மட்டும் போதும் என்றால் சரி" என்று கூறி அவளை உற்று நோக்கினான். அந்தப் பார்வைக்குப் புது அர்த்தம் புரிந்ததாலும் அந்தப் பார்வையை அந்த நேரத்தில் அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் போனதாலும் கைகளால் முகத்தைப் போர்த்திக் கொண்டாள்.

"மங்கை" என்று இன்பமாக அழைத்தான் அபராஜிதன்.

அவள் கைகளை அகற்றி ஏதோ விசேஷத்தைப் பார்ப்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

"மஞ்சத்தில் உட்கார் மங்கை" என்றான் அபராஜிதன்.

முடியாதென்பதுபோல் தலையை ஆட்டினாள் அவள்.

"எங்கேயோ அமர்ந்துவிட்ட நீ இங்கே அமர்ந்தால் என்ன?" என்றான் அபராஜிதன்.

அவள் சற்று விலகி நின்றாள்.

"உட்கார மாட்டாயா?" என்று மேலும் கேட்டான் அவன்.

அவள் முன்போலவே தலையை முடியாதென்று ஆட்டினாள்.

"உன்னை இங்கே உட்காரவைக்க என்னால் முடியாதென்று நினைக்கிறாயா?" என்று திடீரென அவன் வேறு மாதிரி கேட்டதும் மிரண்ட அவள் விலக முற்பட்டபோது அவளது கரத்தைப் பற்றி மிக வேகமாக இழுத்தான் அவன். சாயும் பூச்செடி போல் மடியிலும் மஞ்சத்திலுமாய் போய் விழுந்தாள் அவள். மயிலெனக் கிடந்தவளை ஏதோ பொம்மையை அள்ளுவதுபோல் அள்ளி தன் மார்பிலே சாய்த்துக் கொண்டான் அபராஜிதன்.

மயில் நிற மங்கை உணர்ச்சிப்பூர்வமாய், உடையவிருந்த அணையைப்போல் பூக்கவிருந்த மலரைப்போல் இருந்தாள்.



அபராஜிதன் உதிர்த்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அமுதமென அவள் மீது சொட்டியதென்றால் அவன் தொட்டு இழுத்து கட்டிக்கொண்டபோது சொர்க்கமே கரைந்து கொட்டியதுபோல் இருந்தது. அதுவரை அடைந்திராத ஓர் உணர்ச்சியும் இன்பமும் அவளை அரை நினைவிலும் அரை மயக்கத்திலும் ஆழ்த்தியது. பருவமடைந்த பெண்களெல்லாம் ஆடவரை அடையத் துடிப்பது ஏன் என்பதை தற்போது தெளிவாகப் புரிந்துகொண்டாள். மனம் விரும்பிய ஆடவனின் பரிசத்திற்கு இணை எதுவுமில்லை என்றும் நினைத்தாள். கன்னிப் பெண்கள் வாழ்வில் அடையும் இன்பங்களில் இத்தகைய களவியல் இன்பம்தான் நிகரற்றதாய் இருக்கும் என்றும் தோன்றியது.

தேடி வந்து அன்பைக் கொட்டியவளை விட முடியாமல் மார்பில் சித்திரமாய் பதித்திருந்த அபராஜிதன் சற்றே தெளிவு பெற்று 'மங்கை' என்றழைத்து அவள் "ம்" என்றதும், "ஏதோ பொய் என்றாயே அது என்னது?" என்று கேட்டான். மார்பிலிருந்து அவளை விடுவிக்கவும் செய்தான். மார்பைவிட்டு விருப்பமே இல்லாமல் விலகிய அவள் மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு, ஆமாம் "நீங்கள் செய்தது பொய்தான்" என்றாள்.

"எது பொய்?"

'உங்கள் செயலைச் சாதாரணமாகச் சொன்னீர்களே, அது.'

'இல்லையா பின்னே?'

'இல்லை. காயப்பட்டு வலது கரத்தையே தூக்க முடியாத நிலையில் நிதானம் தவறாமலிருந்து நான்கு முரடர்களைச் சமாளித்த செயல் சாதாரணமானது என்றால் அசாதாரணமானதுதான் எது?'

அபராஜிதன் இதைக் கேட்டுப் புன்னகை செய்யவே, "நீங்கள் ஒவ்வொன்றையும் பொய்யாகச் சொல்கிறீர்கள். அவை ஒவ்வொன்றும் உண்மையானதாகவே இருந்து விடுகின்றன" என்று கூறிய மயில் நிற மங்கை தொடர்ந்து உதிர்த்த வார்த்தைகள் அபராஜிதனை ஸ்தம்பிக்க வைத்தன.

விதி தன்னோடு மிகவும் வேகமாக மோதுவதையும் உணர்ந்து கொண்டான் அவன்.

★ ★ ★

# அத்தியாயம் ஐந்து

(வெளி விருத்தம்)

நல்பாண்டி நாட்டுப்பெண் நால்விதமாய் நினைத்திட்டாள் நடந்ததுவோ?
ஒல்தொண்டை நாட்டவனும் பேராசை கொண்டிட்டான் நடந்ததுவோ?
நல்லறிவு மந்திரிமார் நட்பிற்கு தடையிட்டார் நடந்ததுவோ?
வில்லறிவுத் தளபதியோ விபரீதம் எதிர்பார்த்தான் நடந்ததுவோ?

மயில் நிற மங்கை பேசி முடித்தவுடன் அபராஜிதனின் நிலை மிகவும் சங்கடமாகிப் போயிற்று. அவளைக் கடத்தவந்த மாயபாண்டியனின் வீரனிடம் அவள் முக்கியமான ஓலையொன்றுடன் பல்லவ நாட்டிற்குச் செல்கிறாள் என அபராஜிதன் பொய்யாகச் சொன்னது தற்போது உண்மையாகியிருந்தது.

முக்கிய ஓலையொன்றுடன் காஞ்சிபுரத்திற்குச் செல்லும்படி தன்னைப் பணித்திருப்பதாகக் கூறிய அவள் அவனைத் தன் வழித்துணையாகவும் வரும்படி கேட்டுக் கொண்டாளாதலால் பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கும் சங்கடத்தில் சிக்கிக் கொண்டான் பல்லவ இளவல். அவளுக்கு வழித் துணையாகச் செல்லும் விஷயத்தில் அவனால் ஒப்புக் கொள்ளவும் முடியவில்லை மறுக்கவும் முடியவில்லை. ஆகவே அசிரத்தையுடன் பேசினான் அவளிடம். அவளோ அதைப் புரிந்துகொள்ளாமல் இயல்பாகவும் இன்பமாகவும் பேசியதோடு மட்டுமின்றி புறப்படுவதற்காக

ஆயத்தங்களையும் செய்யலானாள். மறுநாள் அடிகளாரும் அவளுடன் சேர்ந்து கொண்டு பேசியதாலும் தூண்டியதாலும் வேண்டிக் கொண்டதாலும் அவன் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அன்றிரவு சிவிகையில் புறப்பட ஏற்பாடு செய்த மயில் நிற மங்கை அபராஜிதனை வைத்தியர் வேடம் போடச் சொல்லி உடனழைத்துச் சென்றாள்.

அவளை இன்னாளென அனைவருக்கும் தெரியுமாதலால் அவள் வெளியேறுவதில் ஒரு சிரமமும் இருக்கவில்லை. அவளது



நிழலில் அபராஜிதனும் வெளியேறினான். மதுரை மாநகரை விட்டு விலகி உறையூர் பாதைக்கு அவர்கள் வந்தபோது சீனனும் வந்து சேர்ந்து கொண்டான். மயில் நிற மங்கை ஓலைகொண்டு செல்வதையும் அவளுக்கு வழித்துணையாக இருக்க வேண்டியதையும் அபராஜிதன் தெரிவித்தபோது சீனனுக்கு என்னவோ போலிருந்தது.

"இதெல்லாம் நமக்கு வேண்டாத வேலை பிரபு. நமது நோக்கத்திற்குப் பொருந்தாத காரியம் இது. பேசாமல் அவள் கொண்டுசெல்லும் ஓலையைப் பறித்து, உடைத்துப் பார்த்துவிட்டு அவளை விரட்டியடியுங்கள்" என்றான் அவன்.

அபராஜிதன் அதற்கு சம்மதிக்கவில்லை.

"முக்கிய ஓலை என்கிறார்களே, அதைப் போயும் போயும் ஒரு பெண்ணிடமா கொடுத்தனுப்புவார்கள்?" என்று கேட்டான் சீனன்.

"அதிலொன்றும் வியப்பில்லை சீனா. முக்கிய ஓலைகளைச் சில நேரங்களில் முக்கியமில்லாதவர்கள் மூலம் கொடுத்தனுப்புவதுண்டு. நானே சொல்லாமலிருந்தால் ஒரு முக்கிய ஓலை இவள் மூலம் செல்கிறதென்று நீ சந்தேகப்பட்டிருக்க முடியுமா சொல்."

சிறிது நேரத்திற்கு மௌனமாக இருந்த சீனன், மாய பாண்டியனின் ஆட்களை என்ன செய்தீர்கள்?' என்று கேட்டான்.

"நான் செய்வதற்கு என்ன இருக்கிறது? அடிகளார் அவர்களை விடுதலை செய்து அனுப்பிவிட்டார். அவர்களது வேதனையைக் காண அவருக்கு சகிக்கவில்லை பாவம்."

"ஏன் பிரபு, இரண்டாம் நாள் இரவு வருவதாகச் சொன்ன மாயபாண்டியனின் வீரர்கள் முதல் நாளிரவே வந்தார்களே, அது ஏன் என்பதை அறிந்தீர்களா?"

"நம்மீது சந்தேகம் வந்திருக்க வேண்டும் என்றுதான் சொன்னேனே?"

"அதெப்படி திடீரென்று சந்தேகம் வரும்? பிரபு, அவனிடம் உங்கள்மீது வந்த நம்பிக்கைகூட இயல்பாக இல்லை. திடீரென்றுதான் வந்திருக்கிறது."

"அதனால்?"

"அவனது நடவடிக்கையில் ஏதோ மர்மமிருக்கிறது பிரபு."

"இருக்கலாம் சீனா. அதேசமயம் நம்மை அடையாளம் தெரிந்து கொண்டவர்கள் சிலர் மதுரையில் இருக்கலாம் என்பதை நீ மறந்துவிடக்கூடாது. அதோடு நமக்குத் தெரியாமலேயே அவர்கள் நம்மைக் கண்காணித்திருக்கலாம் அல்லவா?"

சீனனால் பதில் கூற முடியவில்லையென்றாலும் அவனிடம் இருந்த சந்தேகம் மட்டும் அப்படியேதான் இருந்தது.

பயணம் முடியும்வரை மயில் நிற மங்கைக்கு ஒருவிதக் குறைவும் இல்லாமல் பார்த்துக் கொண்டான் அபராஜிதன். பல்லவர் தலைநகரை நெருங்கியபோது மருத்துவர் வேடத்தைக் களைந்து சீனனை முன்னே அனுப்பி விவரம் சொல்லும்படிப் பணித்தான். பல்லவர் தலைநகரை அடைந்ததும் அபராஜிதனுக்கு பலவிதமான வரவேற்புகளும் மரியாதைகளும் கிடைத்தன. அவனது வார்த்தைகளை அனைவரும் கட்டளையாக ஏற்றார்கள்.

காஞ்சி மாநகரின் அழகைக் கண்டு அடைந்த வியப்பைவிட இவற்றையெல்லாம் கண்டு அதிக வியப்படைந்தாள் மயில் நிற மங்கை. அவளைத் தகுந்த பாதுகாப்புடன் அரண்மனைக்கு அனுப்பி வைக்க உரிய ஏற்பாடு செய்துவிட்டு, பிறகு சந்திப்பதாகக் கூறி அவளை விட்டுப் பிரிந்து சென்றான் அபராஜிதன். திடீரென அவனைச் சுற்றிப் புதிரொன்று பிறந்துவிட்ட மாதிரித் தோன்றவே ஒரு சிலரிடம் அபராஜிதனைப் பற்றி விசாரித்தாள். கிடைத்த பதில் அவளைப் பேராச்சரியத்தில் ஆழ்த்தியது. 'பல்லவ இளவரசரா இவர்?' என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டு பரவசப்பட்டுக் கொண்டாள்.

மயில் நிற மங்கை மன்னரைச் சந்திப்பதற்கு முன்பாகவே முந்திச் சென்ற பல்லவ இளவல் அபராஜிதன் மன்னர் நிர்பதுங்கவர்மரிடம், மதுரையின் குழப்ப நிலையையும் பாண்டிய மன்னனுக்கு எதிராக மாயபாண்டியன் என்னும் ஒருவன் கலகம் செய்து வருவதையும் விவரித்துவிட்டு, 'பாண்டிய நாட்டை விழுங்க நமக்குச் சரியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது' என்றான்.

அவனது பேச்சைக் கேட்ட நிர்பதுங்கவர்மருக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால் அன்று மாலை மயில் நிற மங்கை அளித்த ஓலையைப் படித்த பின் அந்த மகிழ்ச்சி இடம் தெரியாமல் போனதோடு பெருங்கோபத்தையும் கிளறிவிட்டது. அபராஜிதனை அழைத்த அவர், பாண்டிய நாட்டை விழுங்கச் சரியான சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகச் சொன்னாயே, அதற்கு இதுதான் அத்தாட்சியா? என்று கேட்டு ஓலையை அவனிடம் கொடுத்தார். அதைப் படித்த அபராஜிதனுக்குச் சிரிப்பே



உண்டாயிற்று. தான் ஒன்று நினைக்க விதி வேறு மாதிரி நினைக்கும் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான் அவன்.

நிர்பதுங்கவர்மர் இரண்டு மூன்று நாட்களுக்கு மிகவும் சங்கடமான நிலையில் இருந்த பின்பு ஒருவிதத் தீர்மானத்திற்கு வந்தவராய் நான்காம் நாள் அனைத்து அதிகாரிகளையும் மந்திராலோசனைக்கு அழைத்தார். மயில் நிற மங்கை பாண்டிய மன்னரிடமிருந்து கொண்டு வந்திருந்த ஓலையானது அவையில் படிக்கப்பட்டது.

"பல்லவ நண்பரே! நண்பரே என்று உம்மை நான் விளிப்பது பொறுத்தமில்லாமலிருக்கலாம். ஏனென்றால் சிறிது காலத்திற்கு முன்புதான் நாமிருவரும் பகைவர்களாகச் சந்தித்துக் கொண்டோம். அப்படியிருந்தும் இப்படி உம்மை அழைக்கிறேன் என்றால் அதிலிருந்து அரசியலில் நம் போன்றவர்களுக்கு நட்பும் பகையும் நிரந்தரமாக இருக்க முடியாது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம். அதற்கு நமது மரபுகளின் இறந்தகால வரலாறே சான்று. நாம் நமக்குள் போரிட்டுக் கொண்டாலும் தமிழர்கள்தாம்.

தமிழர்கள் இதைப் பொறுத்துக் கொள்வார்கள். ஆனால் எங்கிருந்தோ வரும் ஒருவன் இத்தமிழகத்தை ஆள முற்பட்டால் அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. இதற்கிடையில் நம் போன்றோரது ஆட்சி தயாதிப் பூசல்களால் வேறு அல்லல்படுவது அதிகரித்துவிட்டது.

என் தயாதிகளில் ஒருவன் என்ன காரணத்தாலோ என்னைச் சந்திக்காமல் மறைவில் இருந்து கொண்டே பூசல்களை உருவாக்கி வருகிறான். வெறும் பூசல்களால் லாபமடையமுடியாத நிலையில் பெருந்திட்டம் தீட்டிய அவன் தற்போது பாம்பை எடுத்து மடியில் கட்டிக் கொண்ட கதையாக சிங்கள மன்னனை உதவிக்கழைத் திருக்கிறான்.

வாய்ப்புக் கிடைக்கும்போது உதவுவதுபோல் நுழைந்து தமிழகத்தையே விழுங்குவது சிங்கள மன்னனின் நோக்கம். அவனது படை சிங்களத்தை விட்டுப் புறப்பட்டு கடல் மார்க்கமாய் வருவதாகவும் செய்தி வந்துவிட்டது. அவனைச் சந்திக்கும் நிலையில் பாண்டிய நாடு இல்லை.

மாயபாண்டியனின் கலகங்களைச் சமாளிக்கவே சரியாக இருக்கும் நிலையில் படைபலமும் குறைந்திருக்கும் இக்கெட்டில் இருக்கிறேன் நான். இப்படியொரு நிர்க்கதியில் பாண்டிய நாடு என்றுமே இருந்ததில்லை. மாற்றானின் ஆதிக்கத்தைத் தடுக்கும் வகையிலும், தமிழரின் நல்வாழ்வைப் பாதுகாக்கும் வகையிலும்

பகையை மறந்து நட்புக் கரம் நீட்டி இவ்வோலையினை அனுப்புகிறேன். கடற்படைப்பலம் கொண்ட தாங்கள்தான் சிங்களவனை அடித்துத் திருப்பும் பணியினை மேற்கொள்ள வேண்டும். இது வெறும் உதவியல்ல. தமிழர்களின் வாழ்வைக் காக்கும் பெரும்பணி. இதற்கு செவிசாய்ப்பீர்கள் என்று நம்புகிறேன்."

பாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்

ஓலைச்சுருள் படிக்கப்பட்ட பின் அவையில் மௌனம் நிலவியது. அதை மன்னனே கலைத்தான்.

"நான் அபராஜிதனை மதுரைக்கு அனுப்பி வைத்ததின் காரணம் என்ன என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும் என்று நம்புகிறேன்."

அவையோர் தலையை ஆட்டியதும்,

"பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் செல்ல சரியான தருணம் நிலவுகிறதா என்பதை உளவறிந்து வர அனுப்பினேன். சரியான தருணமென்று கூறி அபராஜிதனும் வந்திருக்கிறான். ஓலையும் வந்திருக்கிறது. என்ன செய்வோம்?" என்று கேட்டார் மன்னர்.

ஒருவரும் உடனடியாக பதில் கூறிவிடவில்லை. பல்லவ சேனாதிபதி மட்டும் சிறிது நேரம் கழித்து எழுந்து, "மன்னவா, லாபமடைய வேண்டிய வேளையில் நஷ்டமடைய எப்படி நாம் விரும்புவது? பாண்டிய நாடே நமக்குக் கிடைக்கும் நிலையில் நமது கடற்படைகளையும் இழப்பது விவேகமா?' என்றான்.

வேறொரு தளபதி எழுந்து "நேற்று வரை பகைவனாய் இருந்த பாண்டியனுக்கு நமது மாபெரும் கடற்படையை காவு கொடுப்பது விவேகமாகாது. சிங்களவனை நாம் முறியடித்தபின் பாண்டியன் பழையபடியே நமது பகைவனாக மாறலாம். நிச்சயமில்லாத ஒரு அரசியல் கட்டத்தில் நாம் லாபத்தைக் கணக்குப் போடுவதுதான் நல்லது" என்றான்.

பெரும்பாலானவர்கள் அந்த ரீதியிலேயே ஆதரித்துப் பேசினார்கள். அந்த நிலையில் மன்னன் அபராஜிதனை வினவவே, அவன் கூறலானான்.

"அவையோர்களே, உங்களுக்கெல்லாம் தெரியாத எதையும் நான் கூறிவிடப் போவதில்லை. கண்முன்னே லாபம் தெரியும்போது நஷ்டத்தைத் தேடிப்போய் அடைவது விவேகமாகாதுதான். அதோடு நமது உதவியைப் பெற்ற பாண்டியர்கள் போருக்குப் பின் எப்படி வேண்டுமானாலும்



நடந்து கொள்ளலாம் என்று நினைப்பதும் உண்மைதான். ஆனால் பாண்டிய மன்னரிடமிருந்து விண்ணப்பம் வந்துவிட்ட நிலையில் நாம் மறு சிந்தனை செய்யாமல் இருப்பதற்கில்லை.

பகையை மறந்து, நண்பனாக வந்து பாண்டியர் கேட்கும் உதவியை நிராகரித்துவிடுவது பெரிய காரியமல்ல. அப்படி நிராகரித்து பாண்டிய நாட்டின் மீது இப்போது படையெடுத்தால் வெற்றி கிடைப்பதும் நிச்சயம்தான். அதைத்தான் நீங்கள் விரும்புகிறீர்கள்.

ஆனால் அப்படிச் செய்து வெற்றியும் பெறுவோமானால் நம்மைப் பற்றி மக்கள் என்ன சொல்வார்கள்? மக்கள் சுபிட்சத்திற்காகப் பாண்டியர் நீட்டிய நட்புக்கரத்தை உதாசீனப்படுத்திப் போரிட்டால் நமக்கு மக்களின் நல்வாழ்வைவிட மண்வெறிதான் முக்கியம் என்று கருதமாட்டார்களா? மக்களின் சாபத்திற்கிடையில் அவர்களின் நல்வாழ்வைச் சிதைக்கும் அரசியல் லாபம் நமக்குத் தேவைதானா?"

இளவலின் பேச்சு மன்னரைப் பரவசப்படுத்தியது. அவரும் அவனை ஆமோதித்தே பேசினார்:

"அரசியலில் எவரது நிலையும் நிரந்தரமானதல்ல. இதில் இரண்டுவிதமான நேரெதிர் விளைவுகளைத் தரும் வாய்ப்புகள் வரும்போது லாபத்தைத் தரும் வாய்ப்பைவிட நல்ல பெயரைத் தரும் வாய்ப்பையே ஏற்போம். பல்லவ குலத்திற்கு இன்றுவரை வராத அவப்பெயரை நாம் கட்டாயப்படுத்தி உண்டாக்க வேண்டாம். பாண்டியருக்கு உதவுவோம். நம்பி இருப்பவருக்கு உதவுவதே தர்மம். பாண்டியன் நன்றியை மறந்தால் பாடம் கற்பிக்கவும் தெரியும் நமக்கு."

இதற்குப் பிறகு அந்த விஷயத்தில் யாருக்கும் கருத்து வேறுபாடு வரவில்லை. ஆனால் கடற்படையை நடத்திச் செல்ல அபராஜிதனைத் தளபதியாக நியமிப்பதாக மன்னர் அறிவித்தபோது பலரும் முணுமுணுத்தார்கள். வாய் திறந்து வேண்டாமெனக் கூற அவர்களால் முடியவில்லையாதலால் மௌனமாய் இருந்தார்கள்.

ஆனால் அவை கலைந்த பின் மன்னரைத் தனிமையில் சந்தித்தான் கடற்படைத் தலைவன் மாவலிராயன்.

"பிரபு, நான் சொல்வதைத் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. அபராஜிதர் தரைப்படைகளை நடத்துவதில் வல்லவர். யாரும் மறுக்க முடியாது. ஆனால் கடற்படை விஷயமே வேறு. அனுபவசாலிகளும் திணறும் துறை அது-" என்றான்.

"அபராஜிதன் கடற்போரில் அனுபவம் இல்லாதவன்தான். ஆனாலும் ஈடுபட்டுத்தான் அனுபவம் பெற வேண்டும்" என்றார் மன்னர்.

"அதற்கு இந்தச் சந்தர்ப்பம் வேண்டுமா?"

"ஆம். இது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல."

"அபராஜிதர் விரும்புகிறாரா?"

"இல்லை. அவனது தந்தை விரும்புகிறார்."

"கம்பவர்மரா?"★

"ஆம். அபராஜிதனின் தந்தை மட்டுமல்ல அவர். பெரும் தியாகி. உடல்நலக் குறைவினால் தனக்குரிய சிம்மாசனத்தை எனக்களித்தவர் அவர். நல்ல தேக சுகம் கொண்டிருந்தால் இன்று அரியணையில் இருந்திருக்க வேண்டியவரும் அவர். அவருக்கு நாடு மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. எனவே அவரது விருப்பத்தை யாரும் மீறுவதற்கில்லை. அதோடு இன்னொரு விஷயம்."

"சொல்லுங்கள்."

"அபராஜிதனின் பேரில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முயலுங்கள். நாளைக்கு அரியணையில் அமரப் போகிறவன் அவன். அதற்குள் அவன் சிறந்த கடற்போர் வீரனாகவும் திகழ வேண்டும்."

மாவலிராயன் வாயை மூடிக்கொண்டு திரும்பினான் வேறு வழியில்லாமல். அதற்குப் பின் ஏற்பாடுகள் புயல் வேகத்தில் நடந்தன. தளபதியாக அபராஜிதன் நியமிக்கப் பட்டதையறிந்தபோது அளவற்ற ஆனந்தம் கொண்டான் சினன். ஆனால் பிற உபதளபதிகள் அபராஜிதனின் பேரில் சந்தேகம் கொண்டிருந்ததை அறிந்தபோது அவனுக்கு அவர்கள் பேரில் எரிச்லாக இருந்தது. அதை அபராஜிதனிடமே தெரிவித்துக் கொண்ட அவன். "பிரபு, எங்கள் நாட்டில் இப்படித்

★ பல காலமாக அபராஜிதன் நிர்பதுங்கவர்மனின் மகன் என்ற கருத்து அறிஞர்களிடையே நிலவி வந்தது. ஆனால் 1977 ஆம் வருடம் செங்கை மாவட்டத்தில் திருத்தணி தாலுகாவில் வேளஞ்சேரி என்னும் கிராமத்தில் அபராஜிதனின் மரபு பற்றி அரிய விஷங்களைக் கொண்ட செப்பேடுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் அபராஜிதன் கம்பவர்மன் என்பவனின் மகன் என்றும், நிர்பதுங்கவர்மன் என்பவன் கம்பவர்மனுடன் சமகாலத்தில் வாழ்ந்தவன் என்றும், இருவருக்கிடையே நடந்த பல போர்களில் (பூசல்களில்) கம்பவர்மன் வென்றான் என்றும் தெளிவாக இருந்தன. இவ்வரிய விஷயம் இண்டியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளிதழ் செய்தியாக வெளியாயிற்று. விளக்கங்களுக்கு 'Tiruthai and Velancheri Copper Plates' என்னும் நூலைப் பார்க்கவும். தொல்பொருள் துறை வெளியீடு இது.



தலைவன்மீது யாராவது சந்தேகம் கொண்டால் அவர்களது தலையை சீவிவிடுவதுதான் வழக்கம்" என்றான்.

"சந்தேகமும் அவநம்பிக்கையும் பொதுவானவை சினா. அது நமது உபதளபதிகளுக்கு வரக்கூடாதா என்?" என்றான் அபராஜிதன்.

"சரிவரப் புரிந்து கொள்ளாமலேயே சந்தேகப்படுவது எப்படி நியாயமாகும்?!"

"சந்தேகமே சரிவரப் புரிந்து கொள்ளாததினால்தான் வருகிறது. அதை விடு சினா. போகப் போகச் சரியாகிவிடும்."

மாமல்லபுரத்திற்குப் போவதற்கு முன்னால் மயில் நிற மங்கையைச் சந்திக்க விரும்பி பலவாறு முயன்றான் பல்லவ இளவல். அவள் பாண்டிய நாட்டிற்குத் திரும்பவில்லை என்பது தெரிந்தாலும் அவளை அவனால் சந்திக்க முடியவில்லை. கலங்கள் பாய்விரித்துப் புறப்பட்டன. அதுவரைகூட அவள் தட்டுப்படவில்லை.

போர்க்கலங்கள் திட்டமிட்டபடி மாமல்லபுரத் துறைமுகத்தைவிட்டு ஆர்ப்பாட்டமாகப் புறப்பட்டு பாய்விரித் தோடினாலும் உபதளபதிகளின் உள்ளங்களில் பல்லவ இளவலைப் பற்றிய அவநம்பிக்கையே விரிந்து கிடந்தது. விரைவிலேயே அபராஜிதன் தேறிவிடுவான் என்று எதிர்பார்த்தான் மாவலிராயன். ஆனால் அவனது நம்பிக்கையைக் குலைக்கும் காரியங்களையே அபராஜிதன் செய்தானாதலால் மாவலிராயன் மிகவும் குழம்பிப்போய் தீவிரமாய் யோசிக்கலானான்.

★ ★ ★

# அத்தியாயம் ஆறு

(சிந்தியல் வெண்பா)

**கண்கொண்டு மனத்துள்ளே தேடியதோர் பெண்கண்டு**
**கண்முன்னே களித்ததனை விண்ணாடும் இறையல்லால்**
**பண்பாட வல்லார் யார்?**

ஈழ நாட்டை நோக்கி பாண்டியரின் சார்பில் மாமல்லபுரத்து துறைமுகத்திலிருந்து புறப்படவிருந்த பல்லவ மரக்கலங்களைக் கண்டான் பல்லவ இளவல் அபராஜிதன். இரவு முகிழ்க்கவிருந்த அந்த வேளையில் மரக்கலங்களில் கணக்கற்ற பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்த விதமானது ஏதோ கடலுக்குத் தீபாலங்காரம் செய்யப்பட்டதுபோல் இருந்தது. படைகளை வழியனுப்பி வைக்க வந்திருந்த மக்கள் கூட்டத்தின் ஆரவாரங்களைச் சிறிதாக்கும் வகையில் பேரலைகள் எழுந்து மரக்கலங்களை மோதின. உரிய நேரம் வந்ததும் உபதளபதிகள் கலங்களைச் சென்றடைந்தார்கள். கடைசியாக பூரண கவசமணிந்தவனாய் நீர் பாயல் துறை' முகத்துவாரத்திற்கு வந்து சேர்ந்தான் அபராஜிதன். வழியனுப்பி வைக்க அங்கே வந்திருந்த அவனது தந்தையான கம்பவர்மர் அவனைத் தட்டிக் கொடுத்து நயனபாஷைகளைப் பேசினார். வேட்டுக்கள் முழங்கின. வாணங்கள் வெடித்தன. பெரும்பேரிகைகள் முழங்கின. கொம்புகள் சப்தித்தன. மக்களின் வாழ்த்தொலிகள் கடலை ஊடுருவின. தேவ புருஷனைப்போல் அபராஜிதனும் மந்திரவாதியைப்போல் சீனனும் புறப்பட்டார்கள். விரைவிலேயே நங்கூரங்கள் தூக்கப்பட்டு பல்லவ நந்திக் கொடிகள் படபடக்க கலங்கள் புறப்பட்டன.

தன் பிரதான மரக்கலத்திற்கு வந்த அபராஜிதன் தன் அறைக்குப் போய்விடாமல் கலத்திலிருந்த உபதளபதிகளை யெல்லாம் விசாரித்தான். மரக்கலங்களில் இருந்த உணவு சேமிப்பு பற்றியும் போர் ஆயுதக் குவிப்பு பற்றியும், படை வீரர்களின் எண்ணிக்கை பற்றியும் அக்கறையோடு விசாரித்தான். ஆங்காங்கே இருந்த வீரர்களுடன் சமதையாக நின்று உற்சாகமாகப் பேசினான். கலத்தின் கீழ்த்துறையில் துடுப்பு தள்ளிக் கொண்டிருந்தவர்களையும் கண்டு பேசினான். தத்தம்



சிரமங்களை மறந்து அவர்களும் அவனிடம் மனம் விட்டுப் பேசினார்கள். இதுபோலவே ஒவ்வொரு கலங்களையும் அடைந்து வீரர்களை உற்சாகப்படுத்தினான். இவ்வள வெல்லாம் செய்தவன் கடைசியாகப் போர் திட்டம் குறித்து தங்களுடன் ஆலோசனை செய்வான் என்று எதிர்பார்த்த உபதளபதிகள் ஏமாற்றமே அடைந்தார்கள். அபராஜிதன் அவர்களிடம் திரும்ப வரவுமில்லை. ஆலோசனை செய்யவுமில்லை. எல்லா கலங்களுக்கும் சென்றபின் தன் பிரதான கலத்திற்கு வந்த அவன் படிகளில் ஏறி கலத்தின்மேல் தளத்தையடைந்தான். தளத்தை அடைந்ததுமே அவனை வரவேற்றது ஒரு குரல்.

"வரவேண்டும். வரவேண்டும். பல்லவ இளவரசருக்கு என் பணிவான நமஸ்காரங்கள்" என்றது குரல். திரும்பிப் பார்த்த அபராஜிதன் வியந்து போனான். மேலே தளத்தில் நடுத்தண்டின் மீது சாய்ந்தபடி நின்றிருந்தாள் மயில் நிற மங்கை. நல்ல நிலவொளி வீசிய அந்த வேளையில் மயில் நிறம் கொண்டு நின்றிருந்த அவள் அப்சரஸ்போல் தோன்றினாள். காஞ்சியில் தேடியபோதெல்லாம் கண்ணில்படாத இப்பெண்ணை முற்றிலும் எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத நேரத்தில் காண நேர்ந்ததும் அபராஜிதனுக்கு எதுவும் தோன்றவில்லை. அதோடு அவள் தன்னை இளவரசன் என்று அழைத்தது வேறு அவனை பெருவியப்பிற்குக் கொண்டு போயிருந்தது. அந்த வியப்பு விரைவிலேயே அவனைச் சிரிப்பில் ஆழ்த்தவே மெல்லச் சிரிக்கவும் செய்தான்.

அதைக் கண்ட அவள், "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

"ஒன்றுமில்லை" என்றான் பல்லவ இளவல்.

"ஒன்றுமே இல்லாமல் யாராவது சிரிப்பார்களா?" கேட்டாள் அவள்.

"நான் சிரிக்கிறேன். அவ்வளவுதான்" என்றான் அபராஜிதன்.

"ரொம்பவும் சாமர்த்தியமாகப் பேசுகிறீர்களாக்கும்" உரிமையான குரலில் சொன்னாள் அவள்.

"எனக்கும் சாமர்த்தியத்திற்கும் சம்மந்தமே இல்லை" என்றான் அபராஜிதன்.

"ஓகோ."

"ஆகவே சாமர்த்தியமாகப் பேசுவதும் என்னால் இயலாத காரியம்."

"சொல் வேறாகவும், செயல் வேறாகவும் இருப்பது ஆண்களுக்கு இயற்கை. விரும்புவதை விரும்பாததுபோல் செய்வார்கள். விரும்பாததை விரும்புவதுபோல் செய்வார்கள்."

"அப்படியா?"

"ஆமாம். இருப்பதை இல்லாததுபோல் பேசுவார்கள். இல்லாததை இருப்பதுபோல பேசுவார்கள். சொல்ல வேண்டியவற்றை மறைப்பார்கள். மறைக்க வேண்டியவற்றைச் சொல்வார்கள்."

"எல்லாம் சரி. கடைசியாகச் சொன்னதுதான் சரியாகப் புரியவில்லை."

"எது?"

"சொல்ல வேண்டியவற்றை மறைப்பார்கள் என்றாய்."

"ஆமாம் சொன்னேன்."

"நான் ஆடவர்களில் ஒருவன் என்று நினைக்கிறேன்."

"ம்."

"நீ சொன்னது எனக்கும் சேர்த்துத்தான் என்று எண்ணுகிறேன்."

"சொன்னதே உங்களைத்தான்."

"சொல்ல வேண்டிய எதை நான் மறைத்தேன்?"

"நீங்கள் இளவரசர் என்பதை மறைக்கவில்லையா?"

"அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கலாம்."

"என்ன காரணங்கள்?"

"அரசியல் காரணங்கள்."

"ஓகோ."

"அதோடு நான் சொல்லிவிட நினைத்தேன். ஆனால் காஞ்சிக்கு வந்தபின் நீ காணாமல் போய்விட்டாய்."

"ஓகோ."

"அதோடு நான் சொல்லாமல் போனதால் உனக்குத் தெரியாமல் போய்விடவில்லை."

"ம்."

"அதோடு இதை மறைத்துவிட முடியும் என்று எண்ணுகிறவனும் நானல்ல."

"அதனால்?"

"என்மீது குறை காண நியாயமில்லை மங்கை. அப்படிப் பார்த்தால் நீ கூடத்தான் ஓலை விஷயமாக நிரம்ப மறைத்துவிட்டாய். அதைத் தவறாய்ச் சொல்லிவிட முடியுமா? உண்மையில் உன் மீதுதான் தவறு சொல்ல இடமிருக்கிறது?"



"என் மீதா?"

"ஆம். உன்னைப் பார்த்து பாண்டிய நாட்டுப் பெண்களின் பண்பு இதுதானா என்று கேட்க விரும்பினேன். நீயே வந்துவிட்டாய்."

"என்ன செய்துவிட்டேன் நான்?"

"உனக்கு வழித் துணையாக வந்தவனிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் காஞ்சியைவிட்டு மறைந்து விட்டாயே? மதுரை மாநகரின் அழகிய பெண்களின் பண்பு இதுதானா?"

"உண்மையிலேயே பண்பு காரணமாகத்தான் அப்படிச் சொல்ல முடியாமல் போய்விட்டேன்."

"நன்றி மறப்பதுதான் பண்பா?"

"இல்லை. வழித்துணையாக வந்த தங்களை விட்டுவிட்டுப் போக எனக்கு மனமே இல்லை."

"இதற்கு அர்த்தம் சொல்லாமல் கொள்ளாமல் மாமல்லபுரத்துக்கு வந்துவிடுவதுதானா?"

"கேளுங்கள். உங்களுடனேயே என்றென்றும் இருந்து விடவே விரும்பினேனே தவிர வெறும் நன்றியை மட்டும் கூறிவிட்டுப் போய்விடத் தயாராக இல்லை."

"ஓகோ."

"காஞ்சிபுரத்தில் இருந்து என்னுடைய இந்த எண்ணத்தைச் சொன்னால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று சந்தேகமாக இருந்தது. நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் போர் நம்மைப் பிரித்துவிடும். அப்படி ஆகிவிடக் கூடாதென்று நினைத்துத்தான் இங்கு வந்தேன். சீனனைச் சந்தித்து மரக்கலத்தில் என்னை அனுமதிக்கும்படி கேட்டேன்."

"அனுமதியளித்தானா அவன்?"

"ஆமாம். நான் மரக்கலத்திலிருப்பது ஒருவகையில் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றும் சொன்னார்."

"பயனா? இங்கா? உன்னாலா? என்ன பயன் அது?"

"சீனனைத்தான் கேட்க வேண்டும்" என்று கூறி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள் அவள்.

'இச்சினன் சரியான விஷமியாக இருப்பான் போலிருக்கிறதே' என்று முணுமுணுத்த அபராஜிதன் உன்னுடைய எண்ணங்கள் எப்படியிருந்தாலும் இப்போது அவை நிறைவேறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது மங்கை" என்றான்.

"ஏன்?"

"நாம் சந்திக்கப் போவது அந்தப்புரமல்ல. கடற்போர். முடிவைப் பற்றிச் சொல்ல முடியாது. நாம் பிரிய நேரலாம்."

"பிரிவு என்றைக்காவது ஒரு நாள் எல்லோருக்கும் வராமல் போகாது. அந்த நாளை எண்ணிக் கொண்டு எந்த மனிதனும் சேர்ந்திருக்க விரும்பாமல் இருப்பதில்லை" வீரர்களுக்குப் போர்க்களமும் ஓர் அந்தப்புரம்தான்."

இதைக் கேட்டு மெல்ல புன்னகை செய்த அபராஜிதன் மேல்தளத்தில் மௌனமாய் உலவியபடி வானத்தின் வண்ணக் கோலங்களில் பார்வையைச் செலுத்தினான். பிறகு இருந்தாற்போலிருந்து "உனக்கு நடனமாடத் தெரியுமா?" என்று வினவினான்.

"நடனம் தெரியாதவர்கள் பாண்டிய நாட்டில் இருக்க முடியாது" என்றாள் அவள்.

"அப்படியானால் இங்கு இப்போது ஆடேன்."

"இங்கேயா?"

"ஆம் மங்கை. அதோ பார் காற்று இசைக்கிறது. காண்பதற்கு நட்சத்திரங்கள் கோடி கோடியாய் கூடிவிட்டன. ஏன் ஆடக்கூடாது நீ?"

புது அனுபவமாய்த் தோன்றினாலும் ஆடச் சொல்லி கேட்பவன் அன்பின் தலைவனாய் இருந்துவிட்டதால் தடை சொல்லாமல் தன்னை மறந்து ஆடினாள் மயில் நிற மங்கை. கொஞ்ச நேரத்திலேயே கலத்திலிருந்த வீரர்கள் மேலே கூடிவிட்டார்கள். அவர்களுக்கும் இந்த வைபவம் வினோதமாய் இருந்ததால் கைகளைத் தட்டியும் உதடுகளால் கூவியும் குதூகலித்தார்கள். ஆனால் இதையெல்லாம் கேள்விப்பட்ட மாவலிராயனுக்கோ எரிச்சலாக இருந்தது. போதாத குறைக்கு மயில் நிற மங்கையின் நடனத்தை ஒவ்வொரு கலத்திலும் நடத்தினான் பல்லவ இளவல். எப்போது பார்த்தாலும் கூத்தும் பாட்டுமாய் இருந்தன. நடனமில்லாதபோது அபராஜிதனும் மயில் நிற மங்கையும் இணைந்து காணப்பட்டார்கள்.

சிரித்துச் சிரித்து சிறைபட்டார்கள். இடைஇடையே சீனனும் தனக்குத் தெரிந்த பாடல்களைப் பாடியும்



நாட்டியங்களை ஆடியும் வீரர்களைக் களிப்படைய வைத்துக் கொண்டிருந்தான். தற்போது மாவலிராயன் மட்டுமின்றி உபதளபதிகளும் வெறுப்படைந்தார்கள். சந்தேகமும் அவநம்பிக்கையும் வளர்ந்தன. இத்தனைக்கிடையில் சீனன் மட்டும் எப்படிக் கவலையில்லாமல் இருக்கிறான் என்று வியந்த அவர்கள் ஒரு நாளிரவு அவனைத் தேடிச் சென்றார்கள். மேல் தளமொன்றில் கால்களை நீட்டி மிகவும் நிம்மதியாகப் படுத்திருந்த அவனைக் கண்டு வயிறெரிந்த அவர்கள் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் "என்ன சீனா படுத்துவிட்டாயா?" என்றார்கள். அவர்களைக் கண்டதும் "யாரது, உபதளபதிகளா? வாருங்கள், வாருங்கள்" என்று படுத்தபடியே வரவேற்ற சீனன், என்ன கேட்டீர்கள்?" என்றான்.

"படுத்துவிட்டாயா என்றோம்" என்றார்கள் அவர்கள்.

அதைக்கேட்டுச் சீனன் சிரிக்கவே, "இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்றான் ஓர் உபதளவதி.

"சிரிக்காமல் என்ன செய்வது?"

"அதுதான் ஏன் என்கிறோம்."

"படுத்திருப்பவனைப் பார்த்து படுத்துவிட்டாயா' என்பது சிரிக்கக்கூடிய கேள்வி அல்லவா?"

"அதென்னமோ . இங்கு நடக்கிற எல்லாமே சிரிக்கிற மாதிரிதான் நடக்கின்றன" என்று அலுத்துக் கொண்டான் உபதளபதி.

"வேறெப்படி இருக்க வேண்டும்? அழுகிற மாதிரி இருக்க வேண்டும் என்கிறீரா?"

"அப்படிச் சொல்லவில்லை. எதற்கும் ஓர் எல்லை இருக்க வேண்டும் என்கிறோம்."

"வாஸ்தவம்" ஒப்புக்கொண்டான் சீனன்.

"அப்படியானால் எல்லை மீறுவது தவறு என்பதை நீ ஒப்புக் கொள்கிறாய் அல்லவா?"

"அதிலொன்றும் உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்."

"அப்படியானால் வா விஷயத்திற்கு. மாமல்லபுரத்தை விட்டு நமது மூன்று மரக்கலங்களும் ஏன் புறப்பட்டன?"

"அதுவே தெரியவில்லையா உங்களுக்கு?"

"தளபதிக்குத்தான் தெரியவில்லை என்று தோன்றுகிறது."

"அடடா! ஏன் அப்படி?"

"போருக்குப் போகும் கலங்களாகவே இல்லை. வெறும் உல்லாசக் கப்பல்களாக இருக்கின்றன."

"இவைகளைத்தான் சிரிக்கக்கூடிய காரியங்கள் என்கிறீர்களா?" என்று கேட்டான் சீனன். அவர்கள் 'ஆமாம்' என்றதும் எழுந்து கொண்டான் சீனன். உபதளபதிகள் அவன் பதில் சொல்லத்தான் எழுந்து கொள்கிறான் என்று நினைத்தார்கள். அவனோ பேசாமல் இறங்கிப் போகவே, "சீனா எங்கே கிளம்பிவிட்டாய்?" என்றார்கள்.

"எனக்கு வேறு வேலைகள் இருக்கின்றன" என்றான் சீனன். அவன் கூறுவதின் அர்த்தம் அவர்களுக்குப் புரிந்தது. ஆனாலும் கோபப்படாமல் "சந்தேகத்தைத் தீர்த்து விட்டுப் போ" என்றார்கள்.

"நீங்களும் உங்கள் சந்தேகங்களும்" என்று அலுத்துக் கொண்ட, சீனன், "தளபதியைப் பற்றி ஏடாகூடமாகச் சந்தேகிப்பதும் மண்டையை உடைத்துக் கொண்டு விவாதிப்பதும்தான் உபதளபதிகளின் வேலையா?" என்று சீறினான்.

"தளபதிக்குக் கீழ்படிவது மட்டுமே உபதளபதிகளின் வேலையாகாது. ஏனென்றால் தளபதியின் உத்தரவுகள் சில நேரங்களில் முட்டாள்தனமாக இருக்கலாம்" என்றான் ஒருவன்.

"உத்திரவுகளின் தன்மையை ஆரம்பத்திலேயே முடிவு கட்டுவிடுவதுதான் உமது வழக்கமா?" முடிவுகட்டிவிடவில்லை. ஆராயத் தொடங்கியிருக்கிறோம். உங்களுக்கேன் அந்த வேலை? காரியங்களைத் திட்டமிடுவதும் அதற்கான முடிவுகளைத் தாங்குவதும் தளபதியின் கடமை. உங்களுக்கு அவசியமில்லை."

"சீனா, உபதளபதிகள் முட்டாள்களல்லர்."

"ஏன் இதை வற்புறுத்துகிறீர்கள்?"

"விளைவுகளுக்குத் தளபதி பொறுப்பாளியாய் இருக்கலாம். ஆனால் விளைவுகள் நல்லதாக அமைய உபதளபதிகள் விரும்புவது தவறாகிவிடுமா?"

"நீங்களெல்லாம் தற்போது அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள் போலிருக்கிறது."

"ஆம்."

"அப்படியானால் தளபதியின் காரியங்கள் நல்ல விளைவுகளைத் தராதென்பது உங்கள் அபிப்ராயமாக இருக்க வேண்டும்."



"பின்னென்ன? போருக்குப் புறப்பட்ட கலங்கள் கேளிக்கைகளில் ஈடுபட்டிருப்பது நல்ல விளைவிற்காகவா?"

"இல்லையா?"

"எப்படி இருக்க முடியும்? வீரர்களையும் மற்றவரையும் பாடகர்களாகவும், நடனக்காரர்களாகவும் ஆக்கிவிடாதா இக்கேளிக்கைகள்? இது நீடித்தால் வீரர்களின் கவனம் என்னாவது?"

"ஐயா உபதளபதி, வீரத்தின் இலக்கணமே மறந்துவிட்டுப் பேசுகிறீர்கள். பாவம்."

"என்னது?"

"உபதளபதி, பாடலும் ஆடலும் என்றாவது வீரத்தை அழிப்பதுண்டா? சிறந்த வீரர்கள் சிறந்த கலைஞர்களாகவும் இருப்பதில்லையா? மகேந்திரவர்மர், நரசிம்மவர்மர், ராஜ சிம்மப் பல்லவர் ஆகியோரை மறந்துவிட்டீர்களா? கேளிக்கை நடத்தை வீரர்களின் மனத்தை மகிழ்ச்சியில் வைப்பது. போர் நிகழும்போது தெம்பை உண்டாக்குமேயன்றிக் கெடுத்துவிடாது."

உபதளபதிகள் உடனடியாக ஒன்றும் பேசவில்லை. பிறகு ஒருவன், "புறப்பட்டு மூன்று நாளாகியும் எந்தவித உத்திரவையும் பிறப்பிக்கவில்லையே, ஏன்?" என்று கேட்டான்.

"அதற்கு அவசியம் என்ன வந்துவிட்டது? எதிரே வந்து நின்றுவிட்டானா எதிரி? அல்லது கடலில் கொந்தளிப்பு வந்துவிட்டதா?"

பேச்சு அத்துடன் நின்றது. கேளிக்கைகளும் தொடர்ந்தன. ஈழத்தைவிட்டு எதிரி புறப்பட்டுவிட்டதாகச் செய்தி எப்போதோ வந்திருந்ததால் இன்னும் ஏன் அவன் தட்டுப்படவில்லை என்று கேட்டுக் கொண்டு குழம்பினார்கள் உபதளபதிகள். அடிக்கடி சீனனை கேள்வியால் துளைத்தார்கள். சீனனும் பொறுமையை அவர்களுக்கு உபதேசித்து வந்தான். ஒரு வார காலம் கழிந்த இரவுப் பொழுதொன்றில் சீனனுடன் பேசிக் கொண்டிருந்த உபதளபதிகளில் ஒருவன் கலங்கள் சென்று கொண்டிருக்கும் திசையைச் சுட்டிக்காட்டி "அதோ, அதோ பாருங்கள்" என்றான் பரபரப்புடன். உபதளபதிகள் சுறுசுறுப்படைந்து தடதடவென கீழிறங்கினார்கள். சீனன் மட்டும் தளத்திலேயே இருந்தபடி எதிர்திசையை உற்றுநோக்கிக் கொண்டிருந்தான் தன் பூனைக் கண்களால்.

★ ★ ★

# அத்தியாயம் ஏழு

(ஆசிரியத்துறை)

மதிகெடும் போதும் கதிகெடும் போதும் மாற்றொணா
விதிசுடும் வேளை உறுத்திடும் போதும் மனிதமனம்
நதிகெடும் வெள்ளம் நேர்ந்தாற் போலச்
சதிபடும் சரிந்திடும் கணத்தினில் எதுவும் நிகழ்ந்திடும்.

சினனின் சின்னஞ்சிறு கண்களைப் போலவே தூரத்திலே இரண்டு விளக்கு வெளிச்சங்கள் தென்பட்டன. அதையே அவன் பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் கீழே சென்ற உபதளபதிகள் மஞ்சத்தில் படுத்திருந்த அபராஜிதனை அழைத்துக் கொண்டு தளத்திற்கு வந்தார்கள். "அதோ பாருங்கள் இரண்டு மரக்கலங்களின் விளக்குகள்தான் அவை" என்று கூற வாயெடுத்த உபதளபதி யொருவன் திகைத்துப் போய் நின்றான்.

ஒரு கணம் எல்லோரும் குழம்பி நின்றார்கள். கசமுசாவென்று பேசிக் கொண்டார்கள். அதையெல்லாம் கண்ட அபராஜிதன், "என்ன ஆயிற்று? ஏன் என்னை அழைத்தீர்கள்?" என்று சாதாரணமாகக் கேட்டான்.

"இரண்டு கலங்கள் தொலைவில் சற்று முன்னால் தெரிந்தன. ஆனால்..."

"ஆனால்?"

"இப்போது காணவில்லை."

"உபதளபதி, இரவில் சரிவர தூங்காமல் இருந்துவிட்டால் இருப்பது இல்லாதது போலவும் இல்லாதது இருப்பது போலவும்தான் தோன்றும். போய் உறங்குங்கள்."

"இல்லை இல்லை. நான் பார்த்தது உண்மை" என்றான் ஒருவன். எல்லோரும் அதை ஆமோதிக்கவே அருகில் இருந்த சினனைக் கண்ட அபராஜிதன், "இவர்கள் சொல்வது உண்மையா?" என்று கேட்டான்.



"ஆம் பிரபு. சற்று முன்தான் விளக்கை அணைத்தார்கள்" என்றான் சினன்.

ஏதோ நேரில் பார்த்த மாதிரி அவன் கூறியதைக் கேட்டு வியந்த உபதளபதிகள், "நாம் உடனடியாக போருக்கு ஆயத்தம் ஆகலாமல்லவா?" என்று வினவினார்கள்.

"போருக்கா?" என்று ஒன்றுமே தெரியாதவனைப் போல் கேட்டான் பல்லவ இளவல்.

ஆம் தளபதி. எதிரே வரும் மரக்கலங்களின் விளக்குகள் அணைந்ததற்குக் காரணமே தங்களை இருட்டில் ஆழ்த்திக் கொண்டு மோதுவதற்குத்தான்" என்றான் ஒருவன்.

"விளக்கை அணைத்தவன் எதிரி என்று எப்படிச் சொல்கிறீர்கள் உபதளபதி?"

"எதிரியாக இருப்பதால்தான் விளக்கை அணைத்திருக்கிறான்."

"எதைப் பார்த்துவிட்டு?"

"தீபங்களுடன் வந்து கொண்டிருக்கும் நமது கலங்களைக் கண்டுவிட்டுத்தான்."

"அதற்கு விளக்கை ஏன் அணைத்துக் கொள்ள வேண்டும்?"

"தன்னை இன்னாரெனக் காட்டிக் கொள்ளாமல் இருப்பதற்குத்தான்."

"எப்படியானாலும் நம்மை மோதவேண்டுமானால் நெருங்கி வந்துதானே ஆக வேண்டும்? அப்படி வந்தால் தீபங்களுடன் இருக்கும் இக்கலங்களின் வெளிச்சத்தில் அவற்றை நம்மால் கண்டுகொள்ள முடியாதா?"

"அப்படியானால்..." என்று இழுத்தான் உபதளபதி.

"நமது கலங்களில் இன்னும் அதிகமாக பந்தங்களை ஏற்ற வேண்டாம். எரிகிறவைகளை அணைக்கவும் வேண்டாம். அவை எரியும் வரை எரியட்டும்."

"பந்தங்களை அணைக்காமலா போரிடுவது?"

"போரா? உபதளபதி, இன்றிரவு போர் நடக்காது. போரிடும் நோக்கம் நீங்கள் சொல்லும் எதிரிகளுக்கு இருக்குமானால் நாளை இரவு வேண்டுமானால் மோத முயலலாம்" என்ற அபராஜிதன் மேற்கொண்டு எதையும் பேசாமல் கீழிறங்கிச் சென்றான்.

அபராஜிதனின் மீதிருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையும் மறைந்தது உபதளபதிகளுக்கு. மாவலிராயனிடம் போய் அது விஷயமாய்க் கூறவும் செய்தார்கள். மாவலிராயன் அதற்குப் பிறகும் கைகளைக் கட்டிக் கொண்டிருக்கத் தயாராக இல்லை. உபதளபதிகள் அனைவரையும் ரகசியமாக ஆலோசனைக்கு அழைத்து அவர்களிடம் பேசலானான்.

"உபதளபதிகளே, நம் எல்லோருக்கும் முதலிலிருந்தே அபராஜிதரின் பேரில் நம்பிக்கையில்லை. கம்பவர்மர் விரும்பிவிட்டார் என்பதாலும் பல்லவ மன்னர் அதற்கு சம்மதம் தெரிவித்துவிட்டார் என்பதாலும் வேறு வழியில்லாமல் அபராஜிதர் கடற்படைக்குத் தளபதியாக நியமிக்கப்பட்டதை ஒப்புக் கொண்டோம். ஆனால் நினைத்த மாதிரிதான் அவரது போக்கு இருந்து வருகிறது. அவரது பைத்தியக்காரத்தனமான உத்திரவுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஓர் எல்லை வேண்டாமா? மேன்மேலும் இவற்றை அனுமதித்தால் விபரீதங்கள் விளையும் என்பதில் சந்தேகமே வேண்டியதில்லை. என்ன சொல்கிறீர்கள்?"

"உண்மை. உண்மை. அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாது" என்று பலரும் இரைந்தார்கள்.

"அவசரப்படாதீர்கள். தளபதியின் முட்டாள்தனங்களுக்குக் கீழ்ப்படிந்து அழிவதைவிட, தோற்பதைவிட அவரை மீறியாவது அழிவைத் தடுத்து நிறுத்துவதுதான் சரி. இல்லையா?"

"ரொம்பவும் சரி. நாங்கள் ஏமாறத் தயாராக இல்லை" என்றார்கள் உபதளபதிகள்.

"போதாதகுறைக்கு அந்தப் பூனைமுகச் சீனன் பெரும் விஷமியாகவும் அதிகப்பிரசங்கியாகவும் இருக்கிறான். அவனும் தளபதியும் சேர்ந்து அனைத்தையும் குட்டிச்சுவராக்கி விடுவார்கள் போலிருக்கிறது. இதற்கொரு முடிவு கட்ட வேண்டும்."

"சொல்லுங்கள் எதுவாக இருந்தாலும் ஒப்புக் கொள்கிறோம்" என்று கோஷமிட்டார்கள் உபதளபதிகள்.

"நாளை இரவு வரை பொறுப்போம். அபராஜிதரின் ஜோதிடம் பலிக்கவில்லையென்றால் அவரைத் தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான். அந்தப் பொறுப்பை நான் ஏற்கிறேன். சம்மதமா?" என்றான் மாவலிராயன்.

"நாளை என்று தள்ளிப் போட வேண்டாம். இன்றே செய்து முடியுங்கள்" என்று புதுக்குரல் ஒன்று குறுக்கிட்டது அங்கே.



அதையடுத்து நரைவிழுந்த தலையும், திரைவிழுந்த கண்ணும், கறை விழுந்த உடலுமாய் பிரவேசித்தான் கிழவன் ஒருவன். அவனைக் கண்டதும் "யார் நீ" என்று எரிந்து விழுந்தான் மாவலிராயன்.

கிழவன் மாவலிராயனின் அதிகாரக் குரலால் அசந்து விடவில்லை. "விருந்துண்பவர்களுக்கு விருந்துதான் பெரியது. இலையை யார் பொருட்படுத்துகிறார்கள்?" என்று கூறிவிட்டு, "என்ன புரியவில்லையா நான் சொல்வது? துடுப்புத் தள்ளுபவன் நான். போர்க்கலங்களில் பயணம் செல்பவர்கள் துடுப்பு தள்ளுவோரை எங்கே பொருட்படுத்துகிறார்கள்?" என்றான்.

கிழவனின் தலையீட்டை விரும்பாத மாதிரியே அவனது விளக்கங்களையும் விரும்பாத மாவலிராயன். "சரி சரி, உன் வேலையைப் போய்ப் பார்" என்றான்.

கிழவனோ "ஏன் நானிங்கு இருக்கக் கூடாதா?" என்று கேட்டான்,

"உனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள் பேசப்படும்போது நீ இருக்க வேண்டிய அவசியமில்லை. மரியாதையாகப் போய்விடு" என்றான்' என்றான் ஓர் உபதளபதி.

"ஐயா, கலங்கள் கடலோட புறப்பட்டபின் மாலுமிகளுக்கில்லாத சம்பந்தம் யாருக்கிருக்க முடியும்? என்னை அன்னியனாக நினைக்க வேண்டாம். இந்தக் கலங்கள் உருவாவதற்கு முன்பே துடுப்பை ஏந்தியவன் நான்" என்று கூறிய கிழவன், "மாவலிராயரே, கொலைத் திட்டங்களை மட்டும் தாமதிக்கவே கூடாது, கொலைகாரன் செய்யும் தாமதம் ஆபத்தானது" என்றதும், "நாங்கள் பேசியதைக் கேட்டாயா? அபராஜிதர் ஜோதிடம் கூறியிருக்கிறார். அது பலிக்கிறதா என்பதை நான் பார்த்துவிட்டு நடவடிக்கையில் இறங்குவதுதான் நியாயம்" என்றான் மாவலிராயன்.

"ஐயா, தளபதியைக் கொல்ல நினைப்பதே நியாயத்திற்குப் புறம்பான காரியம். அநியாயத்தைச் செய்ய நியாயமான காரணம் தேடுவது வேடிக்கையாக இல்லையா?"

"அது சரி வயோதிகரே, நீங்கள் தேடி வந்து இதை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய அவசியமென்ன?" என்று சாமர்த்தியமாகக் கேட்டான் ஓர் உபதளபதி.

கிழவன் அசரவில்லை. "வயதானவர்களின் இயல்பு அது" என்றான்.

"எது?"

"அறிவுரை சொல்வது."

"கொலை புரியச் சொல்வது ஓர் அறிவுரையா?"

"எந்த அறிவுரையும் அவரவர்களது நிலைமைகளைப் பொறுத்தது. உங்கள் பேச்சு கொலையைப் பற்றியதாய் இருக்கும்போது அதில் நான் அறிவுரை சொல்வது எப்படித் தவறாகும்?" என்று கூறிவிட்டு "உபதளபதிகளே, நீங்கள் தாமதம் செய்யும்பட்சத்தில் உங்கள் திட்டம் தலைவனுக்குத் தெரிந்துவிட்டால் உங்கள் கதி என்னாகும் என்று யோசியுங்கள். தலைவனுக்கு எதிராகச் சதி செய்வோரின் தலைகளை வெட்டிக் கடலில் எறிவதுதான் வழக்கம். என் நீண்டகால அனுபவத்தில் பலவிதமான சதிகளையும் அது முடிந்த விதங்களையும் கண்டிருக்கிறேன். ஆகவேதான் வலிய வந்து கூறுகிறேன். இனி உங்களிஷ்டம்" என்றும் கூறிவிட்டு எழுந்து சென்றான் கிழவன்.

கிழவன் போனபிறகு அனைவரும் மீண்டும் விஷயத்தை அலசினார்கள். கிழவனின் பேச்சில் நிரம்ப உண்மை இருந்ததையும் புரிந்து கொண்டார்கள். கடைசியில் அன்றிரவே அபராஜிதனைத் தீர்த்துக்கட்டிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. அந்தப் பணியை முடிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட மாவலிராயன் குறுவாளொன்றை எடுத்து இடையில் செருகிக் கொண்டான். பிறர் பேச்சைக் கேட்டுக் காரியம் செய்பவனுக்கு உண்டாகும் சங்கடம் அவனுக்குத் தற்போது உண்டாகியிருந்தது. இருந்தாலும் கவலைப்படாமல் பூனை போல் நடந்து அபராஜிதன் இருந்த மரக்கலத்தை அடைந்தான். இன்னும் சிறிது நேரத்தில் பிணமாய் விழப்போகும் அபராஜிதனை எண்ணிப் புன்முறுவலும் கொண்டான். ஆனால் அபராஜிதனின் அறையை அடைந்தபோது ஏமாற்றத்தையே சந்திக்க வேண்டியதாயிற்று. அங்கே அபராஜிதன் இல்லை. பொக்கிஷ அறைக்குள்ளும் அதற்கடுத்திருந்த ஆயுத அறைக்குள்ளும் சென்று பார்த்தான். அங்குமில்லை. பகடை உருட்டியவர்களும் பாட்டுப்பாடி ஆடியவர்களும் ஆங்காங்கே பகடைகளைப் போல் உருண்டு கிடந்தார்கள். மதுவுண்டு திளைத்தவர்கள் மதுக் கலயங்களைப் போல் ஜீவனற்றுக் கிடந்தார்கள். அங்கும் காணாததால் பலபடி யோசித்தவனாய் மேல்தளத்தை நோக்கிப் படிகளில் ஏறியபோது எதிரே வந்து கொண்டிருந்த பல்லவ இளவலுடன் மோதி விழப் போனான். அவனைத் தாங்கிப் பிடித்துக் கொண்ட பல்லவ இளவல், "என்ன மாவலிராயரே? எதிரிகள் வராமல் போகவே என் மீது மோதிக் கொள்கிறீரா?" என்று சிரித்தபடி கேட்டதும் மாவலிராயனுக்கு வியர்த்துக் கொட்டியது.



"மன்னிக்க வேண்டும். ஏதோ யோசனையில் இருந்துவிட்டேன்" என்று ஏதோ சொன்னான்.

"உபதளபதிகளுக்கு யோசனைகள் தேவைதான். ஆனால் தளபதியோடு மோதிக்கொள்ளும் அளவிற்கு இருக்கக் கூடாது மாவலிராயரே. யோசித்தது போதும். போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்."

மாவலிராயனுக்கு விட்டால் போதுமென்றாகிவிடவே விடுவிடுவென இறங்கி வந்தான்.

அவனுக்கு மறுநாள் புதிய சங்கடமொன்று வந்து சேர்ந்தது.

மாவலிராயனைக் கூப்பிட்டனுப்பிய அபராஜிதன், "என்னை மன்னித்துவிடும் மாவலிராயரே, எனக்கு உடல்நலம் சரியில்லை. அதோடு என் சக்தி குறைந்துபோய்விட்ட மாதிரியும் தோன்றுகிறது. இந்நிலையில் என்னால் எதையும் சாதிக்க முடியவில்லை. போதாதகுறைக்கு என் ஜோதிடமும் பலிக்கவில்லை. ஆகவே, என் பொறுப்பை உமக்கு அளித்துவிட்டேன். நீர்தான் இனி தளபதி. எல்லா உபதள பதிகளையும் உடனே அழையும் அறிவித்துவிடுகிறேன்" என்றான்.

மாவலிராயன் செய்வதறியாமல் திகைத்தான். பதில் சொல்ல முற்பட்டபோது பல்லவ இளவல் அங்கிருக்கவில்லை. தவித்துத் திரும்பியபோது பேரிடி விழுந்தது அவன் தலையில். அவனிருந்த மரக்கலத்திற்குப் பின்னால் வெகுதூரத்தில் முன்பு கண்டதுபோல் இரண்டு விளக்குகள் தெரிந்தன. முன்நோக்கித் துரிதமாக நகரவும் செய்தன.

அவை மரக்கலங்கள்தான் என்பதில் மாவலிராயனுக்கு எந்தவிதச் சந்தேகமும் இல்லை. அபராஜிதனின் ஜோதிடம் பலித்துவிட்டது ஒருபுறத்திலும் பொறுப்பைத் தன்மீது சுமத்திவிட்டது மறுபுறத்திலுமாய் அவனைப் பெரிதும் உலுப்பிவிட்டிருந்தன. அபராஜிதனின் போக்கு அவனை அடியோடு குழப்பியது.

முதல் நாள் இரவு எந்தவித வித்தியாசத்தையும் காட்டாத அபராஜிதன் மறுநாள் காலையிலிருந்தே பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் கண்டிருந்தான் மாவலிராயன். வீரர்களின் கேளிக்கைகள் முற்றிலுமாய் நின்றதோடு போர் சன்னதத்தில் ஈடுபட்டார்கள். ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த கலங்கள் அடுத்தடுத்து கொண்டு வரப்பட்டு ஒரே வரிசையில் சென்றன. பந்தங்கள் எதையும் ஏற்ற வேண்டாம் என்ற கட்டளையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இப்படிப் பல

வழிகளிலும் போருக்கு ஆயத்தம் செய்துவிட்டு அபராஜிதன் திடீரென தனக்கு உடல்நிலை சரியில்லையென்று கூறி ஒதுங்கிக் கொண்டதை நம்ப முடியவில்லை மாவலிராயனால். ஜோதிடம் பலித்துவிட்ட நிலையில் தன் நிலைமை பலவீனப்பட்டு விட்டதால் தலைமைப் பதவியை ஏற்கத் தயங்கிய அவன் உபதளபதிகளை அழைத்துக் கொண்டு அபராஜிதனைச் சந்திப்பதே உகந்தது என்று கருதி அவ்வாறே சென்றான்.

பல்லவ இளவல் அவனது அறையில் மரப்பலகையொன்றை வைத்துக் கொண்டு எதை எதையோ வரைவதும் அழிப்பதுமாக இருந்தான். இவர்களைக் கண்டதும், "வாரும் மாவலிராயரே, தளபதி பதவியைத் தந்துவிட்டு தளபதியின் அறையைத் தராமலிருப்பது தவறுதான். இப்போதே காலி செய்கிறேன்" என்றான்.

உபதளபதிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். மாவலிராயன் பேச முற்பட்டு, "நாங்கள் அதற்காக வரவில்லை" என்றான்.

"அது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதற்காக நானெப்படி அறையைக் காலி செய்யாமல் இருக்க முடியும்?" என்றான் அபராஜிதன்.

மாவலிராயனின் குரல் தழுதழுத்தது.

"தளபதி, எங்களை குறிப்பாக என்னை மன்னிக்க வேண்டும்."

"எதற்கு?"

"காரணத்தைப் பிறகு சொல்கிறேன். தயவுசெய்து நீங்கள்தான் பொறுப்பேற்று கடற்போரை நடத்த வேண்டும்."

"என் இயலாமையை ஏற்கெனவே சொல்லிவிட்டேன் மாவலிராயரே."

"அது உண்மைதானா?"

"உங்களிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கென்ன?"

"ஒருவேளை விளையாட்டிற்கு."

"விளையாட வேண்டிய அவசியமும் எனக்கில்லை உபதளபதி. என்மீதே எனக்கு நம்பிக்கை இல்லை."

"நடுக்கடலில் எங்களைக் கைவிட்டுவிடாதீர்கள்."

"என்னால் இயலவில்லை உபதளபதி. இல்லையென்றால் ஏன் கைவிடப் போகிறேன்?"



"உங்களால் முடியும் பிரபு. இயலாமை என்பது உங்கள் சரித்திரத்திலேயே இல்லை."

"பொய்கள் இங்கு தேவையில்லை மாவலிராயா" கடுமையாகச் சொன்னான் அபராஜிதன்.

"பொய்களா?"

"நீங்கள் இப்போது பேசியது பொய்யல்லவா?"

"தளபதி!"

"உண்மை என்ன என்பது சீனனுக்குத் தெரியும். அவனோடு நீங்கள் பேசியிருக்கிறீர்கள். ஆகவே அது விஷயமாக நான் பேசத் தயாராக இல்லை, போய் வாருங்கள்."

அபராஜிதனுக்கு அனைத்தும் தெரிந்துவிட்டது என்பதை உணர்ந்த அவர்கள், "மன்னித்துவிடுங்கள். எதுவும் விளங்காததால் தவறாக எண்ணிவிட்டோம்" என்றார்கள்.

"இதுதான் உபதளபதிகள் காட்டும் ஆதரவா?"

"நல்ல விளைவுகள் உண்டாக வேண்டும் என்றெண்ணி அதற்காகச் சற்று ஆலோசனை செய்தோம் உபதளபதிகளின் கடமை என்ற முறையில்."

"தளபதிக்கு எதிராகச் சதி செய்வதும் உபதளபதிகளின் கடமைகளில் ஒன்றா?" இதைக் கேட்டதும் அனைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள்.

அபராஜிதன் உறுதியான குரலில் சொல்லலானான். ஒன்றை மட்டும் தெரிந்து கொள்ளுங்கள். எனக்குத் தெரியாமல் எந்த சதியும் இங்கு நடந்துவிடாது. அப்படி அறியாமல் இருக்கும் அளவிற்கு நான் மடையனுமல்ல. அவநம்பிக்கையோடு நீங்கள் செய்கிற ஒவ்வொரு உதவியும் தோல்விக்கான ஆதரவுகள் என்பது நினைவிருக்கட்டும். என்மீது பூரண நம்பிக்கை வைத்தாலொழிய போருக்கான பொறுப்பை ஏற்க முடியாது."

மாவலிராயனுக்கு உண்மையிலேயே 'ஏன்தான் இப்படியெல்லாம் செய்தோமோ?' என்றிருந்தது. அனைவருமாக அவன்மீது நம்பிக்கையை தெரிவித்தபின் அவர்களுடன் மரக்கலத்தின் மேல் தளத்திற்குச் சென்றான் அபராஜிதன். அவனுடன் சீனனும் சேர்ந்து கொண்டான். அனைவரும் பின்னால் நோக்கியபோது அவர்களை நெருங்கிக் கொண்டிருந்த மரக்கலங்களின் வடிவம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புலப்படலாயிற்று.

* * *

# அத்தியாயம் எட்டு

(குறளடி வஞ்சிப்பா)

வீசும்இளங் காற்றும்மொழி
பேசும்தனி இரவில்நிலை
மாறுங்கடல் மேலேபல
சீறுங்கலம் சேர்ந்தேவர
பேரும்பெரும் புகழும்பெற
போரும்உடன் சார்ந்தேவுற
தீயும்பல தீர்ப்பலர்
சாயும்படி மோதல்பட
முடிவினில்
திட்டமும் சீரியத் தேர்ச்சியும்
பட்டன வெற்றி பறந்தது பதாகை.

மரக்கலங்களைக் கண்ட அவர்களுக்கு மாயாஜாலம் போன்ற காட்சியும் தென்பட்டது. சமீபத்தில் தெரிந்த விளக்குகள் மறைந்து பிறை போன்ற பல வடிவங்கள் கடலுக்கு மேலே அந்தரத்தில் தோன்றின. பிறகு பெரும் அளவில் உள்ளங்கை வடிவத்தில் ஒளிப் பிழம்புகள் தோன்றின. அதையடுத்து இரண்டும் சேர்ந்து எருமைக்கிடாவின் தலை போன்ற வடிவத்தை ஒளிப்பிழம்புகளாகக் காட்டின. அதுபோன்ற வடிவங்கள் ஐந்து தெரிந்தன. ஏதோ ஐந்து ராட்சஸ எருமைகள் கடலில் ஊர்வதுபோல் எருமைக்கிடாவின் தலை போன்ற முகப்புகளுடன் மரக்கலங்கள் வந்து கொண்டிருந்ததைக் கண்ட அபராஜிதன் எதிரி செய்யும் ஜால வித்தைகளுக்கான காரணத்தை எண்ணிச் சிரித்துக் கொண்டான். தன்னை மிரட்டும் வகையில் எதிரி பலத்தைக் காட்டவே இவ்வாறெல்லாம் பந்தங்களால் ஒளி வெள்ளத்தை உண்டாக்கிக் காட்டுகிறான் என்பதை உணர்ந்தான் அபராஜிதன். இதற்கிடையில் மேலும் நெருங்கிய அம்மரக்கலங்கள் அடுத்தடுத்து ஒரே வரிசைக்கு வந்து நின்றன. நங்கூரங்களையும் தடால்தடாலெனப் பாய்ச்சின.

இவற்றையெல்லாம் கண்ட நிலையில் பேச முற்பட்ட மாவலிராயன், "எதிரியிடம் ஐந்து மரக்கலங்கள் இருக்கின்றன, நமக்குப் பின்னால் நமக்கு இணையாகச் சுவர் போல் நிற்கின்றன. நங்கூரமும் பாய்ச்சியிருக்கின்றன. இவற்றோடு இந்த நடுக்கடலில் மோதுவதால் நமக்குப் பயன் ஏதும் இல்லை. எனவே காற்றும் சாதகமாக இருக்கும் இந்நிலையில் பாய்விரித்துவிடுவோம். அவர்கள் நங்கூரத்தை எடுத்து நம்மைத் துரத்திப் பிடிக்க எளிதில் முடியாமல் திணறுவார்கள். நாம் சோழ மண்டல கடற்கரைக்குப் போய் அவர்களை இழுத்து முறியடிப்போம்" என்றான். அந்தத் திட்டம் அவ்வளவாகச் சரியில்லை என்பதை அபராஜிதன் முகம் புலப்படுத்தியது. பக்கத்தில் இருந்த சீனனைப் பார்த்து, "நீ என்ன சொல்கிறாய் சீனா" என்று கேட்டான்.



"மாவலிராயர் சொன்னதுபோல் இக்கலங்களுடன் மோத வேண்டாம்" என்றான் சீனன்.

"ஏன்?"

"பிரபு, அந்தக் கலங்களைப் பார்த்தீர்கள் அல்லவா? அவை 'உன்னதா' வகையைச் சார்ந்தவை."

"ம்."

"நடுவில் இருக்கும் மூன்று கலங்கள் 'கர்ப்பிணி' உட்பிரிவையும் ஓரமாய் இருக்கும் இரு கலங்கள் 'அநூர்த்வா' உட்பிரிவையும் சேர்ந்த போர்க்கலங்கள்."

"ஆம். உயரத்தைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகின்றன."

"கர்ப்பிணி கலங்கள் மிகவும் உயரமானவை. அநூர்த்வாவின் உயரம் சற்று குறைவு. ஆனால் இரண்டுமே தீய பயனை விளைவிக்கக் கூடியவை."

"உண்மைதான்."

"உயரத்திற்கேற்ற கனமிருக்கும்."

"சரி."

"நம்முடைய கலங்கள் உயரமற்றவை. வேகமாக ஓட முடியுமேயன்றி கர்ப்பிணி கலங்களுடன் மோதும் அளவிற்கு வலுவற்றவை. அதுமட்டுமல்ல; நமது கலங்கள் எதிரியை நெருங்கும் நிலையில் உயரத்தில் இருக்கும் எதிரியால் நம்மீது எளிதில் வாணங்களை வீசியும் தீ மூட்டியும் அழித்துவிட முடியும். ஆகவே மோத வேண்டாம்."

"ஆகவே பாய் விரித்து ஓடிவிடலாமா?"

"அது கோழைத்தனம். நாங்கள் எங்கள் நாட்டில் கையாளுகிற முறையே வேறு. சாதாரணமாக கர்ப்பிணி கலங்களையும் அநூர்த்வா கலங்களையும் நாங்கள் எதிர்த்துப் போரிடுவதில்லை. அவற்றுக்குப் பணிவதுபோல் வேஷமிட்டு ஒன்றாகிவிடுவோம். தீய பயன்களை விளைவிக்கும் இத்தகைய கலன்கள் பெரும்பாலும் கடற்கொள்ளைக்காரர்களிடமும் வர்த்தகப் போர்வையில் ஏமாற்றிவரும் சுயநலப் பழங்குடிகளிடமுமே இருக்கின்றன.

ஆகவே இந்த முறையைத்தான் நாம் கையாள வேண்டும். அடிமை வேடம் போடுவோம் நான் வேண்டுமானால் தூது போகிறேன் அந்தப் பிசாசிடம்" என்றான் சீனன். அதைச் சொன்னபோது அவனது குரலில்கூட அச்சம் தொனித்தது. எல்லாவற்றையும் கேட்ட அபராஜிதன், "சீனா, உன் தந்திரங்களுக்கு இப்போது வாய்ப்பில்லை. நேரமும் இல்லை. நம்முடைய எதிரிகள் இந்த ஐந்து மரக்கலங்கள் மட்டும்தான் என்றால் உன் உபாயத்தைக் கையாளலாம். ஆனால் நான் அப்படி எண்ணவில்லை. மாவலிராயனின் யோசனையும் சரியல்ல. இத்தகைய பயங்கரமான கலங்கள் எதிரியிடம் இருக்கும் என்று நாம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. ஆகவே சற்றுத் துணிந்துதான் காரியமாற்ற வேண்டும்" என்று கூறிவிட்டு, "இந்த ஐந்து மரக்கலங்களும் ஏன் இந்த நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சியிருக்கின்றன?" என்று கேட்டான்.

"இயல்புக்கு விரோதமாய் இருக்கிறது" என்றான் ஓர் உபதளபதி.

"நம்மைப் பின்னுக்கு வராமல் தடுப்பதே எதிரியின் எண்ணம்" என்றான் மற்றொருவன்.

"நாம் முன்னால் போய்க் கொண்டிருக்கும்போது இவர்கள் பின்னால் சுவர் போட்டு என்ன பயன்?" கேட்டான் அபராஜிதன்.

"அப்படியானால்..." உபதளபதியின் குரல் விபரீதமாக ஒலித்தது.

"நமக்கு முன்னால் எதிரியின் வேறொரு பிரிவு வேகமாக நெருங்கிக் கொண்டிருக்க வேண்டும் உபதளபதி. ஆகவே தான் முன்னால் தெரிந்த இக்கலங்கள் நமக்குப் பின்னால் வந்து சுவர் போடுகின்றன. நாம் மோதாமல் நகர்ந்தால் நம்மைப் பின்தொடரும். ஒரு கட்டத்தில் எதிரிகள் முன்னும் பின்னுமாய் இருப்பார்கள். இடையில் நாம் சிக்கிக் கொள்வோம். நம் கதி அதோகதிதான்." அபராஜிதன் மிகவும் நுட்பமாக விஷயங்களை அலசுவதைக் கண்ட மாவலிராயன் இவனைப் போய் விஷயம் தெரியாதவன் என்று சந்தேகப்பட்டோமே?" என்றெண்ணி வெட்கப்பட்டான். பிறகு, "கட்டளையிடுங்கள் தளபதி" என்றான் பரவசமுடன்.

"மாவலிராயரே, உபதளபதிகளே, இந்தச் சுவர் பொழுது விடிவதற்குள் உடைக்கப்பட வேண்டும். எதிரியின் இரண்டாவது பிரிவு நமக்கு முன்னால் தென்படும் முன் உடைந்தாக வேண்டும். அவற்றில் எதையும் பிடிக்கும் நோக்கம் நமக்கு வேண்டாம். அழித்துவிடுவதே நல்லது. ஆகவே மாவலிராயரே, நீர் நமது கலங்களில் மூன்றாவது கலத்தை இயக்கிச் சென்று எதிரியின் சுவற்றை நெருங்கும். மோதிவிட வேண்டாம்.



மோதுவதுபோல் போக்கு காட்டும். ஒரு கலமாவது உம்மைத் தாக்க நங்கூரத்தை தூக்கிவிட்டு நகரும். அதுவரை நான் சொன்னபடி செய்யும். பிறகு நான் கவனித்துக் கொள்கிறேன். உபதளபதி, நீ இரண்டாவது கலத்தை இயக்கி வலதுபுறமாக எதிரியை அணுகுவதுபோல் போய் மோதாமல் பின்புறமாகப் போய்விடும். கலத்தில் பாய்கள் எதுவும் பறக்க வேண்டாம்" என்றான் பல்லவ இளவல். திட்டத்தைக் கேட்ட சீனன் "துணிகரமான திட்டம் பிரபு" என்று பாராட்டிவிட்டு என் பங்கென்ன?" என்றதும் அபராஜிதன் அளித்த பதில் அவனது செவிகளில் நாராசமாக ஒலித்தது.

"எனக்குப் பங்கில்லையா?" என்று கேட்கவும் செய்தான்.

"ஆம் இதில் பங்கில்லை. உனக்குப் பெரிய விஷயமொன்றிருக்கிறது' என்று கூறிய அபராஜிதன் செவியில் எதையோ ஓதியதும் சீனனின் குதூகலம் அளவுக்கு மீறிப்போயிற்று கடலில் குதித்து மறைந்தான். அதையடுத்து போர் நடவடிக்கைகள் மும்முரமாய் நடந்தன. அபராஜிதனின் ஆணைப்படி மூன்றாவது மரக்கலத்தை இயக்கிய மாவலிராயன் எதிரிக்கு இடப்புறமாகச் சென்று திடீரென்று வாணங்களையும் அம்புகளையும் எடுத்து வீசும்படி உத்தரவிட்டான்.

எதிரிகளின் அநூர்த்வா கலங்கள் எதிரே தென்னை மர உயரத்திற்கு நின்றிருந்தன. எனவே அவற்றை அதிகமாக நெருங்காமல் மாவலிராயன் வீசிய வாணங்களும் அம்புகளும் எந்தவிதச் சேதத்தையும் எதிரிக்கு உண்டாக்கவில்லை. எதிரி தரப்பிலிருந்து ஒரு வாணம்கூட வந்து விழவுமில்லை. இதனால் சற்றே துணிந்த மாவலிராயன் தன் கலத்தை மேலும் சற்று நெருங்கிச் செல்லப் பணித்தபோது விபரீதம் விளைந்தது. திடீரென எதிரியின் இரண்டு அநூர்த்வா கலங்களும் மாவலிராயனை நோக்கி நகரலாயின. அதெப்படி சாத்தியம் என்று யோசித்துக் குழம்பிய மாவலிராயன் தன் கலத்தைப் பின்னடையச் செய்யத் தீர்மானித்துச் சுக்கானைத் திருப்ப உத்தரவிட்டான். ஆனால் சுக்கான் திருப்பப்படவில்லை. மாவலிராயனின் கலம் மேலும் மேலும் எதிரியை நோக்கியே சென்றது. ஏதோ சூது நடக்கிறதென சந்தேகித்த மாவலிராயன் துடுப்பு தள்ளுவோரைக் கவனிக்கச் சென்றான். அதற்குள்ளாகவே முன்நோக்கி நகர்ந்த எதிரியின் இரு கலங்களும் மாவலிராயன் கலத்துடன் டமாலென மோதின. கணக்கற்ற பாணங்களை அதன் மீது வீசின. அதையடுத்து மாவலிராயனின் மரக்கலத்தில் தீ உண்டாகி தளமும் நடுத்தண்டும் படீர் படீரென வெடித்துச் சிதறின. வீரர்கள்

கடலில் குதித்தார்கள். சிலர் தீ வெடிப்பின்போது தூக்கி யெறியப்பட்டார்கள். விரைவிலேயே அவனது கலம் பெரும் ஜ்வாலையுடன் பயங்கரமாக நீரில் மூழ்கலாயிற்று.

மாவலிராயனின் கலம் எதிரியை மேன்மேலும் நெருங்கிச் சென்று கொண்டிருந்தபோது அங்கு ஏதோ நடந்துவிட்டது என்பதைத் தொலைவில் தன் கலத்திலிருந்தபடி கண்ட அபராஜிதன் அது தீப்பற்றத் தொடங்கிய நேரத்திலேயே தன் கலத்தை எதிரியின் கர்ப்பிணீ கலத்தை நோக்கிச் செலுத்தினான். துடுப்புகள் வேகமாகத் துழாவப்பட்டன கர்ப்பிணீ கப்பலில் இருந்தவர்கள் மாவலிராயனின் கலம் படும்பாட்டைக் கவனித்துக் கொண்டிருந்தார்களாதலால் மின்னல் வேகத்தில் நெருங்கிய அபராஜிதனின் கலத்தையோ, அருகில் வந்த அவனது கலம் அகல வாட்டத்தில் திரும்பி நின்று தாக்க முற்பட்டதையோ உரிய நேரத்தில் கவனிக்கவில்லை. கர்ப்பிணீ கலத்தைப் போன்ற கனமோ உயரமோ இல்லாத தீர்க்கா வகையைச் சேர்ந்த அபராஜிதனின் கலத்திற்கு வேறெந்த கலத்திற்கும் இல்லாத நீளமிருந்தது. இரண்டு கர்ப்பிணீ கலங்களை உள்ளடக்கிவிடக் கூடிய நீளமிருந்ததால் அது கர்ப்பிணீ கலங்களை அணுகி அகல வாட்டத்தில் திரும்பிக் கொண்டதால் கர்ப்பிணீ கலங்களில் உயரத்தில் இருந்தவர்களால் அதன் நடவடிக்கைகளைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. அந்த நேரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டான். பல்லவ இளவல்.

நீளம் அகலமாய் இருந்த அவனது கலத்தின் இரண்டு முனைகளிலும் போர் பொறிகள் நிரம்ப அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் மூலம் விஷ அம்புகளையும் எரியம்புகளையும் எய்வதற்குப் போதுமான வீரர்களும் குவிக்கப்பட்டிருந்தார்கள். எனவே பந்தங்கள் எதுவும் எரிக்காமல் இருளில் மூழ்கடித்துக் கொண்டு தன் கலத்தை கர்ப்பிணீ கலங்களின் நிழல் விழும் தூரத்திற்குள் செலுத்திய அபராஜிதன் எரியம்புகளையும், விஷ அம்புகளையும் எய்யக் கட்டளையிட்டானாதலால் அவற்றை மழையெனப் பொழிந்தார்கள் வீரர்கள். போதாத குறைக்கு அவனது கலம் கர்ப்பிணீ கலங்களுக்கு மிக அருகில் வந்துவிட்டபடியால் அவற்றின் அடிப்பாகங்களில் அம்புகளையும் வாணங்களையும் நன்றாக எய்ய முடிந்தது. இந்தத் திடீர் தாக்குதலைச் சமாளிக்க கர்ப்பிணீ கலங்கள் நங்கூரங்களைத் தூக்கி நகர முயன்றபோது, முன்கூட்டியே தீர்மானித்திருந்த பல்லவ இளவல் தன் கலத்தின் இரு முனைகளின் அடிப்பாகத்திலும் பொருத்தப்பட்டிருந்த ராட்சத எஃகுக் கத்திகளை உந்தும் விசையை முடுக்க வைத்தான்.



கத்திகள் நீண்டன கர்ப்பிணீ கலங்களின் அடிப்பாகத்தை நோக்கி. அடிப்பாகத்தை கத்தி முனைகள் குத்தித் தாக்கியபோது எதிரி கலங்கள் நங்கூரமெடுத்து அசையவே மிகவும் எளிதாய்ப் போயிற்று. கத்தி முனைகளில் மோதி டமாலென அக்கலங்களின் அடிப்பாகங்கள் பிளந்தன. அடிப்பாகம் பிளந்து தத்தளித்த நிலையில் இரண்டு கர்ப்பிணீ கலங்களும் நீரில் மெல்ல மெல்ல மூழ்கலாயின. இரண்டாவது மரக்கலத்தை இயக்கிய பல்லவ உபதளபதி தன் பணியைச் சாமர்த்தியமாகச் செய்தான். பல்லவ இளவல் இரண்டு கர்ப்பிணீ கலங்களை மூழ்கடித்த வேளையில் மூன்றாவது கர்ப்பிணீ கலத்தை அணுகிய அவன் அபராஜிதனைப் போலவே போரிட்டான். ஆனால் அவனது தாக்குதல் நேரெதிர்புறத்தில் நடந்தது.

எனவே, யார் யாரிடம் கவனம் செலுத்துவது என்று குழம்பியபோது எதிரியின் அக்கலத்தின் அடிப்பாகத்தைப் பிளந்தான் உபதளபதி. ஏககாலத்தில் மூன்று கர்ப்பிணீ கலங்கள் அழிந்துவிட்டதை மாவலிராயனின் கலத்தைக் கவிழ்த்த அநூர்த்வா கல எதிரிகள் கவனித்து வியந்தார்கள். ஒரே வரிசையில் மூன்று கர்ப்பிணீ கலங்கள் மூழ்கியதால் வழி தடைப்பட்டது. அபராஜிதனின் கலமும் உபதளபதியின் கலமும் அந்தத் தடைப்பட்ட கல வரிசைக்கு இப்புறமும் அப்புறமாய் இருந்துவிட்டதால் உடனடியாக இரண்டும் இணைய முடியவில்லை. அதைச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள அந்த அநூர்த்வா கலங்கள் இரண்டும் முற்பட்டபோது மேலுமொரு விபரீதத்தை விளைவித்தான் பல்லவ இளவல்.

கர்ப்பிணீ கலங்களைவிட உயரத்தில் குறைந்த எதிரியின் அநூர்த்வா கலங்கள் தன்னை நோக்கி நகர்வதைக் கண்டதுமே தன் உபதளபதியின் மரக்கலத்துடன் இணைய முற்படுவதுபோல் மூழ்கிய கப்பல்களுக்கு அப்பால் கலத்தை நகர்த்தினான் பல்லவ இளவல். அவனது போலி முயற்சியை நம்பிவிட்ட எதிரி அதற்கு தடைவிதிக்கும் எண்ணத்தோடு முன்னேறி அபராஜிதனின் கலத்திற்கும் மூழ்கிவிட்ட கலங்களுக்கும் இடையிலும் நுழைந்தான். அப்படி நுழைந்து கணிசமாக முன்னேறும்வரை போக்குக் காட்டிய பல்லவ இளவல் தன் கலத்தின் சுக்கானை விர்ரென்று சுற்றிவிடவே அவனது கலம் மிக வேகமாகச் சுழன்றது. அப்படிச் சுழன்று எதிரியின் கலங்களுக்கு அருகாமையிலும் வந்தது. அதன் இருமுனைக் கத்திகள் நீண்ட நிலையிலேயே இருந்தன.

எனவே சுழற்சியின்போது அக்கத்திகளின் முனைகள் எதிரிகளின் கலங்களது அடிப்பாகங்களை மெல்ல உரசின. அதன் ஆபத்தை உணர்ந்த எதிரி கலங்களை விலக்கிச் செல்ல முயன்றான்.

அப்படி முயலவும் அக்கலங்கள் பின்னடைய முடியாமல் மூழ்கிவிட்ட கப்பல்களால் உண்டான வழித்தடையினால் சிக்கிக் கொள்ளவும் சரியாக இருந்தது. அதற்காகவே காத்திருந்த அபராஜிதன் "ம். விசிறுங்கள் கொக்கிகளை எரியுங்கள் பாணங்களை" என்று இரைந்து கட்டளையிட்டான். இதற்கிடையில் உபதளபதியின் கலமும் இப்புறத்திற்கு வந்துவிட்டதால் அதிலிருந்த வீரர்களும் இரும்புக் கொக்கிகளையும் கயிறுகளையும் வீசி எதிரியின் கலங்களுக்குத் தாவலானார்கள். வாணவேடிக்கைகள் பயங்கரமாக நடந்தன. வீரர்கள் வாட்போரிலும் இறங்கினார்கள். இந்த நிலையில் தற்காப்புப் போர் மட்டுமே சாத்தியம் என்பதை உணர்ந்த எதிரி சமாதான சங்கை ஊதினான். கலத்தில் பறந்து கொண்டிருந்த ஈழ நாட்டுக் கொடிகள் கிழித்தெறியப்பட்டன. பல்லவன் பதாகைகள் ஏற்றப்பட்டன. தன் இரண்டு கலங்களையும் எதிரியின் இரண்டு கலங்களையும் போர்த்தளத்திலிருந்து விலகும்படி கட்டளையிட்டான் அபராஜிதன்.

கட்டளைகள் துல்லியமாகவும் விரைவாகவும் நிறைவேற்றப் பட்டன. பல்லவ வீரர்கள் சிங்கள வீரர்களையும் தலைவர்களையும் அவரவர் கலங்களிலேயே சிறை செய்தார்கள். கலங்களின் தளங்களும் இதர பகுதிகளும் நீரால் கழுவி சுத்தம் செய்யப்பட்டன. காயம் பட்ட வீரர்கள் மரக்கலங்களிலேயே சிகிச்சையளிக்கப்பட்டார்கள். கலங்களில் பல்வேறு காரணங்களால் மரணமடைந்தவர்களின் சடலங்கள் கடலில் தூக்கியெறியப் பட்டன. எதிரிகள் நிராயுதபாணிகளாக்கப்பட்டார்கள். அவர்களது கலங்களில் இருந்த ஆயுத வகைகளும், உணவு வகைகளும், வாணங்களும் பல்லவர் கலத்திற்கு மாற்றப்பட்டன. அந்த இரு கலங்களில் இருந்த பொறிகளும் சிதைக்கப்பட்டன. இருநூற்று சொச்ச சிங்கள வீரர்களை அந்தக் கலங்களிலேயே வைத்துப் பல்லவ உபதளபதிகள் சிலரோடு மல்லைத் துறைமுகத்திற்கு அனுப்பி வைத்தான் அபராஜிதன். மல்லையில் வந்த வீரர்களைச் சிறையெடுக்கும் ஓலையொன்றும் துறைமுகக் காவலனுக்குக் கொடுத்தனுப் பப்பட்டது. அநூர்த்வா கலங்கள் இரண்டும் அந்த வகையில் சிறைப்பட்ட வீரர்களுடன் மல்லைக்குப் புறப்பட்ட பின் மாவவிராயன் போரில் உண்டான இருதரப்பு சேதங்கள் பற்றியும் தெரிவித்தான். அபராஜிதன் அவற்றையெல்லாம் சம்பிரதாயமாகக் கேட்டுவிட்டுத் தன் அறைக்குச் சென்று கால்நீட்டிப்படுத்தான். உடல் அசதியால் அவனது கண்கள் உடனடியாக உறக்கத்தைத் தழுவின. உறக்கம் விழித்தபோது தன்னை மென்மையானதொரு பொருள் தழுவிக் கிடந்ததைக் கண்டு திடுக்கிட்டான்.

★ ★ ★



# அத்தியாயம் ஒன்பது

(கட்டளைக் கலித்துறை)

நதியென்றும் நகரென்றும் நலங்கெடுக்கும் வெள்ளமென
மதுவென்றும் மங்கையென்றும் முனைந்திரண்டு சேருகையில்
மதிகெட்டு கதிகெட்டு மனிதன் சீர்கெ டுவதெல்லாம்
விதிகெட்டு வெளிப்பட்ட விளைவு இன்றிப் பிறிதில்லை

அபராஜிதனைத் தழுவிக்கிடந்த மென்மையான பொருள் வேறு எதுவுமல்ல. மயில் நிற மங்கைதான். அபராஜிதனை எல்லா உபதளபதிகளும் அவநம்பிக்கையோடு பார்த்தது முதல் மிகுந்த மரியாதை காட்டிப் போற்றியது வரையிலான அனைத்து நிகழ்ச்சிகளையும் தனித்து நின்று பூரணமாகக் கண்டது அவள் மட்டும்தான். பல்லவ இளவலைக் கண்டு அந்தந்த சமயங்களில் அவரவர்களும் ஒவ்வொருவிதமாக நடந்து கொண்டார்கள். ஆனால் அபராஜிதனோ அனைவரும் தன்னைச் சந்தேகித்தபோதும் சரி, பெரும் வெற்றி பெற்ற நிலையில் அனைவராலும் பாராட்டப்பட்டபோதும் சரி, எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல் இயல்பாகவே நடந்து கொண்டான். நிதானமும் தவறாமல், கவனமும் பிசகாமல், விவேகத்தையும் இழக்காமல் உறுதியாக இருந்தான். அதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட அந்தப் பாண்டிய நாட்டுப் பெண் அவன் மீது அளவு கடந்த மதிப்பையும் அன்பையும் கொண்டாள். நிலத்தின் மேல் இருந்தாலும் நீரின் மேலிருந்தாலும் எதையும் சகஜமாக சமாளித்து வெற்றியும் பெற்றுவிடும். அவனது ஆண்மையை எண்ண எண்ண அவளது உள்ளமும் உடலும் புல்லரித்தன. எதற்காகவோ தன்னைத்தானே நொந்து கொண்டாள் அவள். சில தினங்களில் மரக்கலங்களில் தன்னை ஆடவிட்டு ரசித்தும், தன்னோடு ஆடி ரசிக்கவிட்டுமாய் அவன் போக்கிய வேளைகளைப் பரவசத்துடன் எண்ணிப் பார்த்தாள். தன் வாழ்க்கையில் ஆனந்தப்படக்கூடிய பகுதிகள் உண்டென்றால் அது அந்த நாட்களாகத்தான் இருக்க முடியும் என்று கருதினாள். இப்படியொரு எண்ணத்தைத் தன்னிடம் உண்டாக்கிவிட்ட அந்த அரியவனைச் சில நாட்களாகத்

தனிமையில் பார்க்க முடியாமல் போனதாலும், போர் வெற்றிக்குப் பின் சந்திக்காததாலும் தற்போதாவது சந்தித்துவிட வேண்டும் என்ற துடிப்பு உண்டாகவே இரண்டாவது கலத்தில் இருந்த அவள் அபராஜிதன் இருந்த கலத்திற்கு வந்து அவனது அறையை அடைந்தாள். உள்ளே அந்த மாவீரன் மர மஞ்சத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்ததை அருகில் சென்று பார்த்தாள். "பாவம்" என்று அவளது தேனதரங்கள் முணுமுணுத்தன. போர் உடைகளைக்கூட களையாமல் ஒரிரு இரத்த காயங்களையும் கழுவாமல் அவன் படுத்து உறங்கிவிட்டதிலிருந்தே அவனுக்கு உண்டாகியிருந்த அளவற்ற அயர்சியைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவனது உறக்கத்தைக் கலைக்க அவளுக்கு மனமில்லை. வீரர்களை அழைத்து உடைகளை மாற்ற வைத்தாள். காயங்களைக் கழுவி வென்னீரால் ஒத்தடம் கொடுத்து இதப்படுத்தினாள். அவ்வளவுக்கும் அவனது உறக்கம் களையவில்லை. அதைக் கண்ட அவள் மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு அவனது தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டாள். முன்பு மதுரை மாளிகையில் வெட்கத்துடன் நின்றிருந்த தன்னிடம் "எங்கோ அமர்ந்துவிட்ட நீ மஞ்சத்தில் அமர்ந்தாலென்ன?" என்று அவன் கூறிய வார்த்தைகளை தற்போது எண்ணிச் சிரித்துக் கொண்டாள். மடியின் மீது கிடந்தவன் ஒரு நாள் முழுவதும் கண்விழிக்கவில்லை. மயில் நிற மங்கையும் அவன் விழிக்கவில்லையே என்பதால் அவனை மரத்தில் கிடத்திவிட்டுப் போய்விடவில்லை. பசியை அவன்பால் வென்று மறந்து தாங்கிக்கொண்டாள். கெட்ட சொப்பனம் ஒன்று கண்ட அபராஜிதன் கண்விழித்ததுமே தன் மீது மென்மையானதொரு பொருள் தென்படவே திடுக்கிட்டான். ஆனால் மறுகணம் திடுக்கிட வேண்டிய அவசியம் இல்லை என்பதை அறிந்து கொண்டான்.பட்டை விட மென்மையான மயில் நிற மங்கையின் மடி என்பதை உணர்ந்ததுமே சற்றே புரண்டு முகத்தை அவளது மடியில் பதித்துக் கொண்டான் குழந்தையைப் போல். அவளும் அவனது செய்கையில் இருந்த உரிமையாலும் காதலாலும் பரவசமடைந்து அவனது குழல்களைக் கோதிவிட்டாள். சிறிது நேரத்திற்குப் பின் பழையபடி புரண்டுபடுத்த அவன் கண்களை மூடாமலேயே கிடந்தான். மாற்றப்பட்டிருந்த ஆடைகளையும் கழுவப்பட்டிருந்த காயங்களையும் கவனித்தான். எல்லாம் யாருடைய வேலை என்பதையும் ஊகித்துக் கொண்டு சொன்னான்:

"ஒரு மனைவியைபோல் நடந்து கொண்டிருக்கிறாய் மங்கை."



அவனது சொற்களைக் கேட்டு உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்த அவள், "இதிலொன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் மூன்றே மூன்று கலங்களை வைத்துக் கொண்டு ராட்சதக் கலங்களை வெற்றி கொண்டீர்களே, அதுபோல் எத்தனை பேரால் முடியும்?" என்றாள் இதமான குரலில்.

"யார் வேண்டுமானாலும் விவேகமாக செயல்பட்டால் வெற்றி பெற்றுவிட முடியும். ஆனால் உன்னைப் போல் நடந்து கொள்ள முடியாது மங்கை" என்று தொடர்ந்தான் அபராஜிதன்.

அவளதை மறுத்தாள். "இல்லை பிரபு. எவள் வேண்டுமானாலும் மனைவியாகிவிடலாம். ஆனால் எல்லா ஆடவர்களும் மாவீரர்களாகிவிட முடியாது. மாபெரும் வெற்றிகளைப் பெற்றுவிட முடியாது."

"முதலிலிருந்தே என்னை உயர்த்தியும் உன்னைத் தாழ்த்தியும் பேசி வருகிறாய். மதுரை நகர் மங்கையர்கள் இப்பத்தான் இருப்பார்களோ?" சிரித்துக்கொண்டே வினவினான் அபராஜிதன்.

"மதுரை நகர் பெண்கள் என்றில்லை பொதுவாகப் பெண்களே அப்படித்தான். அதோடு..?"

"அதோடு?"

"பெண்ணின் மனத்தைக் கவரும் ஆடவர்கள் அவர்களைவிட எல்லா வகையிலும் உயர்ந்துதான் நிற்கிறார்கள்."

இதைக் கேட்டுச் சிரித்த அபராஜிதன் "எனக்குத் தெரிந்து சம பருவத்திலுள்ள ஆடவரும் பெண்ணும் சந்தித்துக் கொள்ளும்போது பெண்களைப் புகழ்வதைத்தான் ஆடவர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இங்கே அந்த நிலை தலைகீழாக மாறிவிட்டது" என்றான்.

"அது ஏன் நான் எதைச் சொன்னாலும் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்?" என்று பிணக்குற்றவள்போல் கூறினாள் அவள்.

"அப்படியில்லை மங்கை.."

"வேறெப்படியாம்?"

"எதுவுமே இயல்பாக நடந்தால்தான் பொறுத்தமாக இருக்கும். இயல்பாக நடக்கும் விஷயங்களில் தகராறுக்கு வழியில்லை."

"நான் சொல்வதெல்லாம் தப்பு; நீங்கள் சொல்வதுதான் சரி. அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். நான் போகிறேன்" என்று

கூறிய அவள் அவனை மடியிலிருந்து எடுத்து மஞ்சத்தில் கிடத்திவிட்டு கோபத்துடன் எழுந்தாள்.

அபராஜிதனும் மஞ்சத்தில் எழுந்து அமர்ந்து கொண்டு அவளைப் பார்த்துக் கடகடவெனச் சிரித்தான்.

அவள் சற்றே கோபமடைந்து, "ஏன் இப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்று சீறினாள்.

அழகிய பெண் அருகிலிருக்கும்போது சிரிக்காமல் அழவா முடியும்?" கேட்டான் பல்லவ இளவல்.

"போதும். அசடு வழிகிறது" இகழ்ச்சியுடன் சொன்னாள் அவள்.

"வேறுவழியில்லை மங்கை" என்றான் அபராஜிதன்.

"எதற்கு?"

"அழகான பெண்களின் கோபத்திற்கு முன்னால் ஆடவர்களுக்கு அசடு வழிவதைத் தவிர வேறு வழியில்லை."

"வேறு மாதிரி நடந்துகொள்ள முடியாதாக்கும்."

"முடியாமலென்ன? சொல்லட்டுமா?"

"சொல்லுங்களேன்."

"உளற முடியும்."

"உங்களைப் பார்த்தாலே புரிகிறது."

"புரிகிறதல்லவா? சந்தோஷம். அப்புறம் அவர்களுக்குக் கற்பனை பிறக்கும்."

"ஓகோ."

"கவிதைகள் வடிப்பார்கள்."

"ம்."

"வானும் நிலவும், தேனும் பாலும், மலரும் மணமும், மதுவும் மானும் படாதபாடுபடும் அவர்களிடம்."

"ஆமாமாம்."

"உண்மை மங்கை. தான் பிறந்ததே பெண்களுக்காக என்பார்கள்."

"அப்படியா?"

"பெண்களுக்காக எதையும் செய்வதாகச் சொல்வார்கள்."



"நீங்களும் அப்படித்தானா?"

"நீ அழகிதானே? பிறகென்ன, நானும் அப்படித்தான்."

அப்படியானால் நான் சொல்வதைச் செய்யுங்கள்."

"சொல் மங்கை."

"அதோ இருக்கிறதே, அதை எடுத்து குடியுங்களேன் பார்ப்போம்."

"எதை? மதுவையா? இதை குடிப்பதா பெரிய விஷயம்? குடிக்கிறேன் பார்" என்று கூறிய அபராஜிதன் அறையின் மூலையில் இருந்த மதுக்கலயம் ஒன்றை யெடுத்தான். சற்றே முகர்ந்தான். பிறகு கடகடவென குடிக்கவும் செய்தான். குடித்துவிட்டு வெண்ணையைக் குடித்துவிட்டுப் பார்க்கும் கள்ளப் பூனையைப் போல் அவளைப் பார்த்து கண்களை உருட்டினான்.

"இப்போதுதான் நீ இயல்பாக நடந்து கொள்கிறாய் மங்கை" என்று கூறி எட்டி அவளது கரத்தைப் பிடித்து இழுத்தான்.

அவனது முரட்டு இழுப்பில் காற்றில் முடிந்த மலர்க்கொத்துபோல் அவன் மீதே வந்து விழுந்தாள் அவள். அவளைத் தன்னோடு அழுந்தப் பிடித்தான் பல்லவ இளவல். அவனது முரட்டுக் கைகள் அவளது அங்கத்தின் மென்மையான பகுதிகளில் பட்டு ஓடின. தடுமாற்றம் அவனிடம் உண்டாகவே பிடி இளகியது. மயில் நிற மங்கை அதுதான் நேரமென்று அவனை விட்டு வெளியே ஓடினாள். அரை நினைவில் இருந்த அபராஜிதன் மயில் நிற மங்கை வெளியேறியதை அறியாதவனாய் தள்ளாடியபடி நடந்து அறைக் கதவைத் சாத்தித் தாளிட்டான்.

இதே நேரத்தில் இரண்டாவது மரக்கலத்தில் மாவலிராயனும் இதர உபதளபதிகளும் கூடி நடைபெற்ற போரைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். போரின் வெற்றிக்கு அபராஜிதனின் அறிவுக் கூர்மையும் ஆற்றலுமே முக்கியக் காரணம் என்பது சந்தேகமறத் தெரிந்ததால் அது குறித்து அனைவரும் அவனைப் பாராட்டிக் கொண்டார்கள். அவனுக்குக் கடற்போர் பற்றி எதுவும் தெரியாது என்று கருதியிருந்த அவர்கள் தற்போது அவனைவிட எவனாலும் அத்தனைச் சிறப்பாக போரிட்டிருக்க முடியாது என்று வாய்விட்டுச் சொல்லவும் செய்தார்கள்.

அவர்களது பேச்சு பிறகு அடுத்ததாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைப் பற்றித் திரும்பியது. மயிலையிலிருந்து

உதவிக்கு வருவதாக இருந்த கடற்படை வந்து சேராததும், சிங்களத்தின் இரண்டாவது கடற்படை எப்போது தென்படும் என்பதும் தெரியாததால் அவர்களது அமைதியைக் கலைத்தன. அபராஜிதன் அசதி காரணமாக நெடுநேரம்வரைத் தூங்கிவிட்டதால் அவனிடம் ஆலோசிக்க முடியவில்லை. மயில் நிற மங்கை இதற்கிடையில் அவனைச் சந்தித்துவிட்டு வெளியேறியதைக் கண்டதும் அபராஜிதன் விரைவிலேயே அனைவரையும் சந்திப்பான் என்று எதிர்பார்த்த அவர்கள் ஏமாறவே செய்தார்கள். பாண்டிய நாட்டுப் பெண் வெளியேறி ஒரு நாள் ஓடியும் அபராஜிதன் வெளிப்படவில்லை. அறையருகே சென்றபோது அறைக்கதவு உட்புறம் தாளிட்டிருப்பது தெரிந்தது. இந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் மேலும் ஒரு நாள் வரை பொறுத்தார்கள். இதற்கிடையில் அவர்கள் முற்றிலும் எதிர்பாராத விபரீதம் ஒன்று விளையப்போவதற்கான ஆயத்தங்களைக் கண்டார்கள் வானத்தில்.

"தளபதியின் உத்தரவுகள் இப்போது ரொம்பவும் அவசியம்" என்றான் ஓர் உபதளபதி.

"ஆம். ஆம். தெற்கு வானத்தைப் பாருங்கள்" என்று சுட்டிக்காட்டினான் மற்றொருவன்.

"கரியமேக மலைகள் திரள்கின்றன" என்றான் வேறொருவன்.

"ஆம். காற்றும் வித்தியாசமாக வீசுகிறது."

"பயங்கர மழையும் சூறாவளியும் தோன்றப் போகிறது."

"இந்நிலையில் எதிரியின் அபாயம் வேறு இருக்கிறது."

"எதிரிக் கலங்கள் இப்பயங்கரச் சூழ்நிலையில் வந்துவிட்டால் விளைவுகளைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்."

"மயிலையிலிருந்து உதவிக் கப்பல்களும் வருவதாக இல்லை."

"சூறாவளியினால் அவை தேக்கப்பட்டு அதே நேரத்தில் எதிரியும் வந்துவிட்டால் நம்கதி அதோகதிதான்."

இப்படிப் பலரும் பேசிக் கொண்டு தளபதியின் அறைக்கதவை உடைத்துத் திறப்பதென தீர்மானித்து. கதவை உடைக்கவும் செய்தான் மாவலிராயன். உள்ளே அபராஜிதன் இருந்த நிலை திகிலை உண்டாக்கியது. அத்திகிலைப் பெரிதாக்குவதுபோல் உலகமே அதிர்ந்ததுபோல் பேரிடியொன்று வானில் ஒலித்தது.

★ ★ ★



# அத்தியாயம் பத்து

(ஆசிரிய விருத்தம்)

உடலாடும் ஆசை கடலுக்கு வந்ததால்
உடையாக நெளிந்த அலையாட
நடமாடும் ஆசை நீர்மகள் கொண்டதால்
நன்மழை உருவமாய் புரையோட
படமாடும் ஆசை பாம்புக்கு வந்ததால்
பொன்மின்னல் போர்வையில் விளையாட
தடமாடும் இடியோடு புயல்மங்கை வாய்விரித்து
கலம்நாடி வந்தவிதம் எத்தகைத்தோ!

பேரிடியைத் தொடர்ந்து இயற்கையின் விபரீதங்கள் விளையாட்டு நிகழ்ச்சிகளைப்போல் ஒவ்வொன்றாய் நடக்கலாயின. வானத்தில் எங்கோ ஒரு கோடியில் கரியமலைக் கூட்டங்களைப் போல் தெரிந்த கார்மேகங்கள் அரக்கன் தாவி வந்தது போல் 'இப்படியும் நடக்குமோ?' என்று வியக்கும் வகையில் வெகுவேகமாக முன்னேறி வானம் முழுதும் கரியைப் பூசுகிற மாதிரி வியாபித்துக் கொண்டன. அதையும் தொடர்ந்து சிவப்பு நிற நுனிகளைக் கொண்டு மற்றுமொரு கருமேக அடை தளைத்துவந்து ஏற்கனவே உண்டாகியிருந்த இருட்டை கும்மிருட்டாக்கி இருக்குமிடம் எது என்றே அனுமானிக்க முடியாமல் செய்தது. திக்கெல்லாம் அடைபட்டு கரிய சூன்யமாய் அப்பிராந்தியம் மாறிய அந்நிலையில் எங்கிருந்தோ 'ஊ' வென சத்தம் உண்டாகி ஏதோ மாயக்காரன் ஊதும் வாத்தியம்போல் ஒலித்து திடீரென நாலாபுறமும் பரவி காதடைக்கும் பெருங்காற்றாய் வெளிப்பட்டது. அடைமேல் அடையாய் வந்து படிந்த மேகங்கள் அக்காற்றில் சற்றே கலைந்தாலும் கரிய நிறமும் காரிருளும் தொடரவே செய்தன. பெருங்காற்று உண்டானதுமே அவற்றோடு சல்லாபிக்கப் புறப்பட்டாற் போல் நீர் பரப்பு துள்ளியது. துள்ளிய அந்நீர் பரப்பின் அடிப்பரப்பும் திடீரென யாரோ கீழே இருந்து கொண்டு கலக்கிவிடுவதுபோல் கிடுகிடுவெனச் சுழன்று

அலைகளாக உருண்டது. இதற்கிடையில் மரக்கலத்தில் தலைவனது அறையில் மதுவினை உண்டு மதுக்கலயம் போல் உருண்டு கிடந்த பல்லவ இளவலைக் கண்டு திகிலடைந்த மாவலிராயன் முயற்சி மேற்கொள்வதற்குள் தானாகவே எழுந்து கொண்ட அபராஜிதன் சுற்றிலும் ஒருமுறை நோக்கினான். கலம் பயங்கரமாக ஆடியதையும் கண்டான். "புறப்படு மாவலிராயா" என்று அழைத்தபடி அறைக்கு வெளியே வந்து படிகளில் ஏறி மேல் கட்டிற்கு வந்தான்.

அவனை வரவேற்பதுபோல் கரிய வானில் இயற்கை வரையும் சித்திரம்போல் படமாடும் பெரும் பாம்புபோல் பொன் மின்னலொன்று மிகப் பெரிய அளவில் வெளிப்பட்டது அந்த மின்னலின் வளைவிலிருந்து இலையற்ற கிளைகளைப் போல் பற்பல சிறு மின்னல்களும் தோன்றின. வானில் ஓவியம் வரைந்தாற்போல். நிலப்பகுதியில் காணப்படும் மின்னல்களைப் போலில்லாமல் தெளிவாகவும் அதிகப் பிரகாசமாகவும் இருந்த அம்மின்னலைக் கண்ட அபராஜிதன் இயற்கையின் எழில் கோலத்தைக் கண்டு பிரமித்தான். மின்னல் தோன்றி மறைந்த மறுகணமே வானம் உடைந்து பொடியாவதுபோல் பேரிடிகள் தடால் தடாலெனச் சரமாரியாக எழுந்து அந்தப் பிராந்தியத்தைக் கலக்கின. சுற்றிலும் ஒருமுறைப் பார்த்தான் அபராஜிதன். கண்களுக்கு எதுவும் புலப்படாததோடு கண்களில் காற்றானது அம்புபோல் குத்தித் தடுமாறவும் வைத்தது. அந்தத் தடுமாற்றத்தை உச்சக் கட்டதிற்குக் கொண்டு போவது போலவும், துள்ளும் கடலை அறைய வந்தது போலவும் சரசரவென மழையும் உண்டாயிற்று. நிலத்தின் மேல் பொழியும் மழையைப் போலில்லாமல் வானம் கிழித்துக் கொண்ட மாதிரி அருவி போல் பெரும் திரையாகக் கொட்டியது. மழையும் காற்றும் பெருகிவிட்ட நிலையில் அலைகளும் தத்தம் திறமையைக் காட்ட முற்பட்ட மாதிரி மரக்கல உயரத்திற்கு எழுந்து தடால் தடாலென கடலில் விழுந்தன. அபராஜிதனது கலங்கள் கனத்திற்குப் பெயர் போனவைகள் அல்லவாதலால் இந்த பயங்கர அலை விளையாட்டில் மோசமாகத் தத்தளித்தன. கல உயரத்திற்கு அலைகள் உயரும்போது தூக்கி எறியப்பட்ட மரக்கலங்கள் அவ்வலைகள் தாழும்போது உண்டான பள்ளங்களில் கவிழ்வதுபோல் விழுந்து நீரின் இழுப்பில் நிற்க முடியாமல் தடுமாறின. புயல் காற்றின் உச்ச கட்டத்தை உணர்ந்து கொண்ட அபராஜிதனும் உடனே புயலைப்போல் செயல்படலானான்.

அவனும் மாவலிராயனும் இயற்கையால் பழிவாங்கப்பட்ட அனாதைக் குழந்தைகளைப்போல் நைந்து போய்விட்ட



நிலையிலும் இங்குமங்குமாய் பேய்களைப் போல் திரிந்து தேவையான கட்டளைகளை இடலானார்கள். அவர்களது கட்டளைகள் வருவதற்கு முன்பாகவே கலங்களில் வந்து விழுந்த கடல்நீரை வாரி வாரி இறைத்து நீர் தேங்கி விடாமலிருக்க முனைந்து விட்டிருந்தார்கள் மாலுமிகள். அபராஜிதன் இரண்டு மரக்கலங்களுக்கும் சென்று காற்றின் இழுப்பிற்கும் நீரின் இழுப்பிற்கும் ஏற்ப சுக்கானை அழுத்திப் படிக்கவும், விட்டுக் கொடுக்கவும், திருப்பிச் சுழற்றவும் உடனிருந்து கவனித்தான். பாய்கள் முதலிலேயே அவிழ்த்து விடப்பட்டிருந்தன. திசை தெரியாத நிலையில் பெரிதும் அல்லல்பட்டன கலங்கள். ஆனால் மாலுமிகளோ இத்தகைய சண்டமாருதங்கள் பலவற்றைக் கண்டிருந்தவர்களாதலால் மனம் தளராமல் தங்கள் பணிகளைச் செய்தார்கள். கற்றும் மழை நீரும் அவர்களை நிலைக்க விடாமல் அலைக்கழித்தபோதும், அவ்வப்போது பயமுறுத்துவதுபோல் இடிஇடித்தபோதும், இடையில் கேலி பேசுவதுபோல் மின்னல் வெடித்துச் சிதறியபோதும் அவற்றை யெல்லாம் விளையாட்டுத்தனமாகவே கருதி செயல்பட்டார்கள். தொடக்கத்தில் மாவலிராயன்கூட சற்றே கலங்கினான் என்றாலும் அபராஜிதன் இட்ட கட்டளைகளையும், அவை சிறப்பாக நிறைவேறும் விதங்களையும் கண்டபின் திருப்தியே கொண்டு தெம்புடன் நடந்து கொண்டான்.

ஏறக்குறைய நள்ளிரவில் தொடங்கிய இந்தக் கடல் விளையாட்டு அன்று இரவும் மறுநாளும் நீடித்தது. உயிர் போராட்டமாக அமைந்துவிட்ட காரணத்தால் மாலுமிகள் நேரம் போவதே தெரியாமல் தத்தம் பணிகளில் தங்களை ஆழ்த்திக் கொண்டிருந்தார்கள். இரண்டாம் நாள் மாலை புயல் காற்று முற்றிலுமாக கடந்துவிட்டதினால் கடல் பிராந்தியத்தில் சற்றே தெளிவு பிறந்தது. அடையாகத் தழைத்திருந்த கரு மேகங்களும் இரவெல்லாம் அனுபவித்த கணிகை அதிகாலையில் அசதியோடு வெளியேறிய உதடுகளைக் காட்டி எழுவதுபோல் சக்தியை இழந்து வெறும் பஞ்சு மேகங்களாய் மாறிக் கிடந்தன. காற்று நின்ற கையோடு மழையும் பின்பற்றிப் போய்விட்டிருந்ததால் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக சீர்படலாயிற்று. அலைகளிடம் வேகமில்லை என்றாலும் சுழற்சி இருக்கவே செய்ததினால் தோற்றுப்போன வீரர்கள் சிறைக்களத்தில் முனகுவதுபோல் அடக்கத்துடன் நெளிந்தன. புயல் ஆபத்து முற்றிலுமாய் கலைந்துபோய் விட்டதென்று அறிவிக்கிற மாதிரி கலைந்து சிதறிய வெண்ணிற மேகங்களுக்கிடையில் சந்திர பிம்பம் வெளிப்பட்டது. கொலை நடந்த இடத்தில் கருணையன்னை விஜயம் செய்ததுபோல்

வெளிப்பட்ட அந்த பிம்பத்தைக் கண்டான் பல்லவ இளவல். அவனது முகமும் அந்நிலவு போல் விகசித்தது. பெரும் போராட்டத்திற்குப் பிறகு கண்டதாலோ என்னவோ நிலவின் அழகு பேரழகாய் இருந்தது அவனுக்கு. அதை விஸ்தரிக்கிற மாதிரி மேகங்கள் மேலும் மேலும் விலகி வெண்பையிலிருந்த முத்துக்களை இறைப்பதுபோல் நட்சத்திரங்களைப் புலப்படுத்தின. கரிய வானில் மின்னல் சித்திரம் தெரிந்தது எந்த அளவிற்கு பயங்கரமான அழகாகத் தெரிந்ததோ அதற்குச் சமமாக தாலாட்டும் அழகாகத் தற்போது விளங்கிய நிலவையும் நட்சத்திரங்களையும் கண்ட அபராஜிதன் ஆண்டவனது படைப்புகளின் பேரில் பேருவகை கொண்டான். சற்று முன்வரை பேயாய் இருந்து அலைக்கழித்துக் கிடந்த புயல் உலவிய இடத்தில் பன்னீர் தெளிக்கும் பெண்ணென புறப்பட்டிருந்த தென்றல் அவனைத் தழுவுவதுபோல் தடவி ஓடியது. சாதாரணமாய் புயல் தோன்றிய பல நாட்களுக்குத் தொல்லை தருவது வழக்கமாய் இருப்பினும் தன் விஷயத்தில் அப்படி இல்லாமல் போனதை உணர்ந்த அவன் 'இயற்கையும் நமக்கு சாதகத்தையே செய்கிறது' என்று கூறிக் கொண்டு மாவலிராயனை அழைத்து, 'மயிலையிலிருந்து நமது மரக்கலங்கள் வந்துவிட்டன என்று நினைக்கிறேன்' என்றான் பின்னால் தெரிந்த விளக்குகளைக் காட்டி.

"ஆம். தளபதி அப்படித்தான் தெரிகிறது" என்றான் மாவலிராயன்.

"நம் கலங்களில் பந்தங்கள் எதுவும் எரியவில்லையல்லவா?"

"ஆம்."

"காற்று தற்போது இல்லை."

"ஆம் தளபதி."

"ஆகவே பந்தம் ஒன்றைக் கொளுத்தி அடையாளத்திற்கு ஆட்டு."

மாவலிராயன் தாமதம் எதுவும் செய்யாமல் பெரும் பந்தமொன்றைக் கொளுத்திக் கொண்டு மேல் தளத்திற்குச் சென்று ஆட்டினான். அவனது செய்கைக்கு உடனடியாக பதில் கிடைக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்து பின்னால் தெரிந்த விளக்குகள் ஒவ்வொன்றாய் அணைந்தன. மாவலிராயன் தன் பந்தத்தை அணைத்தான். தற்போது பின்னால் வந்து கொண்டிருந்த மரக்கலங்களிலிருந்து தனித்த பந்தமொன்று தெரிந்தது. இப்படியும் அப்படியுமாய் ஆடியது. மாவலிராயன்



உடனே தன் பந்தத்தைக் கொளுத்திக் கொண்டு ஆட்டினான். இரு தரப்பிலும் இத்தகைய சமிக்ஞைகள் நடந்தபின் இருதரப்பு கலங்களிலும் எல்லா பந்தங்களும் ஏற்றப்பட்டதால் இருண்டு கிடந்த அக்கடற் பகுதி ஒளி பெற்றுப் பிரகாசித்தது. தன் கலங்களிலிருந்த வாத்தியங்களைச் சூடுபடுத்தி வாசிக்கும்படி கட்டளையிட்டான் பல்லவ இளவல். வீரர்கள் விடுவிடுவென செயல்பட்டார்கள். மங்கள் வாத்தியங்கள் பற்பல முழங்கவும், வாணங்கள் வெடிக்கவும், மயிலைக் கலங்கள் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டன. அக்கலங்களின் தலைவன் படகில் இறங்கி அபராஜிதனின் கலத்திற்கு வந்து தன் மரக்கலங்கள் வந்துவிட்டதைக் கூறித் தலை வணங்கினான்.

"மிக்க மகிழ்ச்சி உபதளபதி. சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்துவிட்டீர்கள். சற்றுமுன் கலக்கிவிட்ட புயலில் எங்கே உங்கள் வரவு தாமதமாகிவிடுமோ என்று அஞ்சினேன். அப்படி ஏதும் ஆகாமல் திறமையோடு செலுத்தி வந்திருக்கிறீர்கள்" என்று பாராட்டிய பல்லவ இளவல்" உங்களிடம் சீனன் வந்தான்?' என்று கேட்டான்.

"வந்தார். உங்கள் ஆணைப்படி அனைத்தையும் செய்துவிட்டேன்."

"எவ்வளவு கலங்கள் உங்களுடன் வந்திருக்கின்றன?"

"எட்டு மரக்கலங்கள், தாரணிகள் ஐந்து, ஊர்த்வாக்கள் மூன்று."

"நல்லது. நீளத்தாலும் உயரத்தாலும் சிறந்த நல்ல வகைக் கப்பல்களையே கொண்டு வந்திருக்கிறீர்கள். சீனனிடம் அப்படித்தான் சொல்லியிருந்தேன். ஆக, மொத்தம் பத்துக் கலங்களாகின்றன."

"இன்னொன்று?"

"முதல் மோதலில் இழந்துவிட்டேன் உபதளபதி."

இங்கே குறுக்கிட்ட மாவலிராயன், "மூன்று கர்ப்பிணீ கலங்கள் மூழ்கி, இரண்டு அநூர்த்வாக்கள் பிடிபட்ட போரில்தான் இந்த நஷ்டம்" என்றான்.

"என்ன! மூன்று கர்ப்பிணீக்கள் மூழ்கடிக்கப்பட்டனவா?" வியப்போடு கேட்டான் உபதளபதி.

அது விஷயமாகப் பேச்சை வளர்க்க விரும்பாத அபராஜிதன், நடந்ததெல்லாம் போகட்டும். நாம் சாதிக்க வேண்டியது இனிமேல்தான் இருக்கிறது. அதுபற்றிப் பேசுவோம்

வாருங்கள்" என்று கூறித் தன் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே ஆலோசனை நடத்தப்பட்டது. பல்லவ மரக்கலங்கள் அனைத்திலும் இருந்த மாலுமிகள், போர் வீரர்கள், பொறிகள், ஆயுதங்கள், உணவு சேமிப்புகள் ஆகியவை அலசப்பட்டன. உபதளபதிகள் தங்களுக்கிருந்த சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். அனைத்து விஷயங்களையும் வைத்துக் கொண்டு எதிரியை முறியடிக்கும் திட்டத்தைத் தீட்டினான் அபராஜிதன். திட்டத்தில் பேரபாயங்கள் பல இருந்ததை உணர்ந்த உபதளபதிகள், திட்டங்கள் திறமையாக நிறைவேற்றப்பட்டாலன்றி தங்கள் அனைவரது கதியும் அதோகதிதான் என்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டு உறங்கச் சென்றார்கள்.

அபராஜிதன் உடனடியாக உறங்கச் செல்லவில்லை. தளத்திலேயே நின்றபடி யோசனையில் ஆழ்ந்திருந்தான். அவனைப் போலவே உறக்கமிழந்த மாவலிராயன், அபராஜிதன் தனித்திருப்பதைப் பார்த்துவிட்டு அங்கே வந்தான். "ஏன் உறங்கவில்லையா பிரபு?" என்று வினவவும் செய்தான்.

"இல்லை மாவலிராயரே. உறங்கவில்லை. இனி, அந்த மாதிரி உறங்கவும் மாட்டேன். என்னை மன்னித்துவிடும்" என்றான் அபராஜிதன்.

மாவலிராயனுக்கு அவன் என்ன சொல்கிறான் என்பது விளங்கவில்லை. "என்ன சொல்கிறீர்கள் பிரபு? நான் எதற்குத் தங்களை மன்னிக்க வேண்டும்?" என்று கேட்டான்.

"என்மீது நீரைத் தெளித்து மயக்கம் தெளிவித்தீரே, நினைவில்லையா?"

"ஆமாம்."

"நானிருந்த நிலையையும் கண்டீர்களல்லவா?"

"அதிலொன்றும்..."

"சகஜம் என்கிறீரா?"

"மது அருந்துவதொன்றும் பெருங்குற்றமல்லவே!"

"அப்படியில்லை உபதளபதி. முக்கியமான பொறுப்பில் இருந்து கொண்டு கடமையை முற்றிலுமாக நிறைவேற்றவும் செய்யாமல் மதுவை அளவுக்கு மீறி குடித்துவிட்டு நாள் கணக்கில் மயங்கிக் கிடந்தது தவறுதான். அதுவும் கேவலம் - ஒரு பெண்ணிடம் வாயாடி வீம்புக்காகச் செய்த காரியம் அது. நினைத்தால் வெட்கமாகவும் இருக்கிறது."



"வீணாக வேதனைப்படாதீர்கள் தளபதி. இப்போது எதுவும் ஆகிவிடவில்லை. மதுவை அருந்தியிருந்தாலும் மயக்கம் நீங்கிய மறுகணமே பூரணமாக சுதாரித்துக் கொண்டு விட்டீர்கள். அதுபோதும்."

"மயில் நிற மங்கை எங்கே இப்போது? புயலின்போது தென்படவே இல்லையே?"

"அந்த கலத்தில் இருக்கிறார் தங்களுக்குப் பயந்துகொண்டு."

"நாளெல்லாம் மயங்க வைத்தவளுக்குப் பயமென்ன வேண்டியிருக்கிறது? போகட்டும். போர் முடியும் வரை அவளைக் கண்ணில் காட்டாதீர் உபதளபதி. மீண்டும் மயங்கித் தொலைக்கப் போகிறேன்" என்ற அபராஜிதன் சற்று பொறுத்து, "மாவலிராயரே, சிங்களவனின் ஐந்து கலங்களை ஏதோ சமாளித்துவிட்டேன். ஆனால் இனிமேல் எப்படிச் சமாளிக்கப் போகிறேன் என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது. எத்தனைக் கலங்களை இனி நாம் சந்திக்க வேண்டியிருக்குமோ?" என்று கவலைப்பட்டான்.

"தங்களால் இயலாதது எதுவுமில்லை தளபதி. எந்த சந்தர்ப்பத்திலும் உங்களால் சுதாரித்துக் கொண்டுவிட முடியும் என்பதைப் பல நிகழ்ச்சிகள் மூலம் தெரிந்து கொண்டுவிட்டேன்."

"மாவலிராயரே, இப்போது நாம் எந்தப் பகுதியில் இருக்கிறோம்? நம் நாட்டைவிட்டுப் பிரிந்து நெடுநாட்கள் ஆகின்றனவே?"

"பயணக் கணக்குப்படி நாமிப்போது ஏறக்குறைய ஈழ நாட்டை நெருங்கி விட்டோம் பிரபு. சற்று வடமேற்கே திரும்பிச் சென்றால் ராமேஸ்வரத்தை அடையலாம் என்று தோன்றுகிறது."

இப்படி இருவரும் மேலும் சிறிது நேரம் வரை பேசியிருந்துவிட்டு லேசாக கண்ணை மூடினார்கள்.

உதயகாலம் நெருங்கும் நேரமிருக்கலாம். உதயகீதம் போல் பேரொலிகள் எழுந்து அவர்கள் அனைவரையும் எழுப்பின. பல்லவர்கள் அனைவரும் வியப்புடன் கண்களைத் திறந்து பார்த்தார்கள். அவர்களுக்கு எதிரே பிரம்மாண்டமான காட்சி விரிந்திருந்தது. அவர்கள் எதிர்பாராத அளவிற்கு சிங்களவரின் மகத்தான கடற்படை அவர்களுக்கு முன்னே திரண்டிருந்தது.

★ ★ ★

# அத்தியாயம் பதினொன்று

(இன்னிசை வெண்பா)

**சீராளும் சிங்களத்துச் செவ்வியதோர் கலம்வந்து**
**பாராளும் பேராசை காராளன் கொண்டவுடன்**
**போராளும் பேர்விடுத்துப் பாதாள வலைவிரித்தான்**
**தாராள மனத்தோடு தான்.**

சிங்களவரின் மரக்கலங்களிலிருந்து போர்த்தாரைகள் உதயராகம் போல் எழுந்ததைக் கண்டதுமே பல்லவ வீரர்கள் வியந்தாலும் உடனடியாக சுதாரித்துக் கொண்டு போர் ஆயத்தங்களை விடுவிடுவெனச் செய்தார்கள். ஆனால் தாரைகளை பலமாக ஊதினாலும் மோதுவதற்கான முயற்சிகள் எதுவும் சிங்களத் தரப்பில் செய்யப்படாமலிருந்ததை கவனித்தான் பல்லவ இளவல். சிங்களத் தரப்பில் மொத்தம் பதினெட்டு மரக்கலங்கள் காணப்பட்டன.

பலதரப்பட்ட வகைகளைச் சேர்ந்த அம்மரக்கலங்கள் கடல் பிராந்தியத்தைப் பெருமளவு ஆக்கிரமித்துக் கொண்டு அரை வட்ட வடிவில் அணிவகுத்து நின்றதிலிருந்தே எதிரி மிகவும் விவேகத்துடன் திட்டமிட்டு நடந்து கொண்டிருப்பதாய் நினைத்தான் அபராஜிதன். எதிரியின் தரப்பில் ஆச்சரியப்படத்தக்க அம்சங்களும் சில இருக்கவே செய்தன. சிங்களவரது பதாகைகளைத் தாங்கிக் கொண்டிருந்த பதினெட்டு மரக்கலங்களிலும் பாய்கள் நன்றாக விரிக்கப்பட்டிருந்தன. போரின்போது வாணங்கள் வீசப்பட்டால் எளிதில் தீப்பற்றிவிடக் கூடிய வகையில் பாய்களை எதிரி விரித்து வைத்திருந்தது வியப்பாக இருந்தது அபராஜிதனுக்கு.

சாதாரணமாகப் போர்க்கலங்களில் தயாராக வைக்கப்படும் பொறிகள்கூட அசைக்கவும் படாமல் இருந்தன. மோதுவதற்குரிய வீரர்கள் மருந்துக்கும் வெளியே தென்படவில்லை. இவ்வளவு அலட்சியமாக தன் நிலையை வைத்திருப்பது சிங்களக் கடற்படைத் தளபதியின் துணிச்சலுக்கு அத்தாட்சியே தவிர பலவீனத்திற்கு அடையாளமல்ல என்று கருதினான் பல்லவ



இளவல். இப்படியொரு தளபதியையும் கடற்படையையும் கொண்டிருக்கும் சிங்கள மன்னனை மாயபாண்டியன் அண்டியதில் எந்தவித வியப்புமில்லை என்று நினைத்தான்.

இதற்கிடையில் சிங்கள மன்னரை வாழ்த்தும் ஒலிகள் எழுந்தன. எதிரி தரப்பிலிருந்து வெண்ணிறப் படகொன்று மூன்று பேருடன் புறப்பட்டு வந்தது. அப்படகில் தூது வருகிறது என்பதைப் புரிந்துகொள்ள பல்லவர் எவருக்கும் சிரமமாக இல்லை. தூதுவனைத் தன் அறைக்கு அழைத்து வரும்படி மாவலிராயனிடம் சொல்லிவிட்டுப் படிகளில் இறங்கினான் பல்லவ இளவல்.

தூதுவனுக்கு நூலேணி இறக்கப்பட்டது. அதில் அலட்சியமாக ஏறி வந்தான் தூதுவன். மேலே ஏறியதும் பல்லவக் கலங்களை அலட்சியத்துடன் பார்த்தான். "எங்கே தளபதி?" என்று மிரட்டலாகவே கேட்டான். உபதளபதிகள் அவனை மரியாதையோடு பல்லவ இளவல் அறைக்கு அழைத்துப் போனார்கள். அறையருகேயும் தன் துணிவைக் காட்டும் வகையில் 'ஈழ மன்னர் வாழ்க' என்றும் 'மாய பாண்டியர் வாழ்க' என்றும் முழங்கினான்.

அப்படியெல்லாம் பெரும் தோரணை செய்துகொண்டு போன அத்தூதுவன் பல்லவ இளவலின் கோலத்தைக் கண்டவுடன் பெருவியப்பு அடைந்தான். தான் காட்டிய அலட்சியமும் துணிச்சலும் அபராஜிதனுக்கு முன்னால் அரைக்காசு பெறாது என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்ட அவன் "தளபதி அவர்களுக்கு வணக்கம்" என்றான் பணிவுடன்.

உள்ளே சர்வ நிதானத்துடன் உணவருந்திக் கொண்டிருந்த அபராஜிதன் இடத்தைவிட்டு அசையாமல் "வாரும் தூதுவரே. படகில் வருவதாக உபதளபதிகள் சொன்னார்கள். வந்து உட்காரும்" என்றான்.

மஞ்சத்தில் வந்தமர்ந்த தூதுவன் அபராஜிதன் நிதானமாக உணவருந்திக் கொண்டிருந்ததையே பார்த்தான். அதைக் கவனித்த அபராஜிதன் "என்ன அப்படிப் பார்க்கிறீர்? என்னைப் பொறுத்தவரை எந்த நேரமாக இருந்தாலும் வயிற்றை வஞ்சிப்பதில்லை. பசி நேர காலம் தவறாமல் வந்துவிடுகிறதல்லவா?" என்றபடி கைகளைக் கழுவிக் கொண்டு வந்தமர்ந்து கொண்டு, சொல்லும் தூதுவரே, செய்தி என்ன?" என்றான்.

"எங்கள் சேனாதிபதி போரைத் தவிர்க்க விரும்பி ஒப்பந்த ஓலை அனுப்பியிருக்கிறார். அதைப் படித்து ஆவன செய்ய வேண்டியது தங்கள் கடமை" என்றான் தூதுவன்.

இதைக் கேட்டுச் சிரித்த அபராஜிதன் "போரைத் தவிர்க்க விரும்பும் உங்கள் சேனாதிபதி படையெடுத்து வருவானேன்?" என்று கேட்டான்.

தூதுவன் நிதானமாகச் சொன்னான்:

"படையை வைத்துக் கொண்டு போரிடாமல் வெற்றி பெறுவது சாத்தியம். ஆனால் படைகள் இல்லாமல் போரிடவும் முடியாது. தூது வரவும் முடியாது."

"அதாவது."

"சிங்கள சேனாதிபதியின் நோக்கமென்னவோ படையெடுப்பு தான். அதில் மாற்றமில்லை. கையாளும் முறைதான் மாறுகிறது."

"அதாவது பழம் நழுவி பாலில் விழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார் இல்லையா?"

"தளபதி, ஒரு விஷயத்தை நீங்கள் உணர்ந்து கொள்வது நல்லது. எங்கள் தரப்பில் பதினெட்டு கலங்கள் இருக்கின்றன. ஏறக்குறைய உங்களைப் போல் இரண்டு மடங்கு. இந்த நிலையில் போர் நடக்குமானால் உங்களால் வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறீர்களா?"

"எனக்கு முன்பாகவே இப்படிப் பேசிய உம்மைப் பாராட்டுகிறேன். உமது கூற்றின்படி எங்களுக்கு வெற்றி சாத்தியமில்லை என்றே வைத்துக் கொள்ளலாம். அதற்காகப் போரைத் தவிர்த்துவிடுவது நல்லதா?"

"ஏன் இல்லையா? ஆட்சேதம் பொருட்சேதம் ஆகியவை முற்றிலும் நீங்கிவிடுகின்றனவே?"

"சேதம் அவற்றுக்கு மட்டுமல்ல. கௌரவத்திற்கும் கூடத்தான்" என்று கூறி ஓலையை வாங்கிய அபராஜிதன் படிக்கலானான்.

"பல்லவர் தளபதிக்குச் சிங்களத்தின் சிங்கக் கடற்படை சேனாதிபதி தென்னவன் காராளன் எழுதுவது. எமது படையெடுப்பின் நோக்கம் உமக்குத் தெரிந்திருக்கும். உம்மை இப்போது அழிப்பதென்பது எனக்கு எளிய காரியம். இருக்கும் தற்போதைய நிலைமையே அதற்குச் சான்று. இந்நிலையில் உம்மிடம் பகற் கனவுகள் உண்டாவது நல்லதல்ல. வெற்றியடைந்து விடலாம் என்று முயன்று முற்றிலுமாய் அழிந்துவிட வேண்டாம். எனக்கும் உங்கள் அழிவு பிடிக்கவில்லை. மல்லைத் துறைமுகத்தை ஒப்படைக்கும் நிபந்தனையோடு நீங்கள் போரைத் தவிர்த்து சமாதானம்



தேடுவதே உகந்த காரியம். பலரது உயிரைக் காக்கவும் அனாவசிய சேதங்களைத் தவிர்க்கவும் நீர் சம்மதிப்பீர் என்று நம்புகிறேன். எனவே நேசக்கரம் நீட்டி என்னை வந்து சந்திக்கவும். நட்பிற்கு வழிகோலவும்."

"படித்தபின் சரி தூதுவரே, உமது சேனாதிபதியை நான் சந்திக்க வருகிறேன்" என்றான் அபராஜிதன்.

தூதுவன் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் சிங்கள சேனாதிபதி தென்னவன் காராளனைச் சந்திக்க பல்லவ இளவல் புறப்பட்டபோது மாவலிராயன் குறுக்கிட்டு "வேண்டாம். வேண்டாம் நீங்கள் போக வேண்டாம். என்னவானாலும் சரி, இங்கிருந்து நீங்கள் அகலவே கூடாது" என்றான் பதட்டத்துடன்.

பல்லவ இளவல் பதட்டப்படாமல் "ஓலைச் செய்தியை கண்டீரல்லவா?" என்று கேட்டான்.

"கண்டேன்."

"நிபந்தனை எப்படியிருக்கிறது?"

"மோசமானதாக இருக்கிறது."

"அதை நான் ஒப்புக் கொள்வேன் என்று நினைக்கிறீரா?"

"மானமுள்ள எவனும் ஒப்புக் கொள்ளமாட்டான்."

"இப்போது புரிகிறதா ஏன் அவனைச் சந்திக்க நான் செல்கிறேன் என்று."

"புரியவில்லை."

"மாவலிராயரே, சேனாதிபதியின் நோக்கம் என்ன தெரியுமா?"

"அதாவது..."

"இந்த ஓலை விஷயம் வெறும் கண்துடைப்பு."

"அதாவது..."

"என்னை வரச்சொல்லி சிறை செய்துவிடுவதே அவன் நோக்கம்."

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன்."

"அப்படி என்னைப் பிடித்துக் கொண்டு உங்களையெல்லாம் அழித்துவிட மனக்கோட்டை கட்டுகிறான்."

"ஆம்."

"அதை நாம் தகர்க்க வேண்டாமா?"

"முடியுமா?"

"இங்குதான் அவனே உதவுகிறான்."

"உதவுகிறானா?"

"ஆம் உபதளபதி. அவனது குண விசேஷங்கள் புரிகிறதா உங்களுக்கு? அவனது பலவீனம் புலப்படுகிறதா?"

"அதாவது..."

"அவனது பலம் வஞ்சகம். நம்மைக் கண்டவுடனேயே இப்படியொரு திட்டத்தைத் தீட்டுகிறான்."

"ஆம்."

"அவனது பலவீனம் பேராசை."

"பேராசையா?"

"ஆம். நமது மரக்கல எண்ணிக்கையைக் கண்டதுமே தவறான அனுமானம் செய்கிறான். நமக்குத் தோல்வி நிச்சயம் என்று கருதுகிறான். எனவே சேதமாகாமல் கலங்களைப் பிடிக்க ஆசைப்படுகிறான். அவன் வலையில் நான் சிக்குவேன் என்று எதிர்பார்க்கிறான். மொத்தத்தில் பேராசையில் வீழ்கிறான். அது நமக்கு அனுகூலம்."

"எப்படி?"

"பேராசைக்காரனிடம் வஞ்சகம் இருக்கலாம். தீர்க்கமான யோசனை இருக்காது."

"அதனால்?"

"அவனை வெல்வது எளிது" என்று கூறிய பல்லவ இளவல், "என்னைப் பற்றி கவலை வேண்டாம். சேற்றில் வலியச் சென்று காலைவிட்டு மாட்டிக் கொள்ளும் மடையன் நானல்ல. நான் அவனிடம் போனதும் கொஞ்ச நேரத்திற்கெல்லாம் முரசு கொட்டி போரைத் துவங்கிவிடுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான்.

மாவலிராயன் மேலும் தயங்கவே அவனது செவிகளில் எதையோ ஓதினான் பல்லவ இளவல். அவ்வளவுதான். மாவலிராயனிடம் அதுவரை நிலவிய அச்சமும் தயக்கமும் சுவடு தெரியாமல் மறைந்தன. முகத்தில் நிலவிய இருளும் ஒழிந்தது. அபராஜிதன் கடைசியாக பேசமுற்பட்டு, "எதிரியின் கலங்கள் பிறை நிலவுபோல் அரைவட்டமாக நிற்கின்றன. அந்த



அரைவட்ட விளிம்புகளை ஒரே கோட்டில் இணைப்பதுபோல் நம் மரக்கலங்கள் நிற்கின்றன. கொம்பூதியதும் நான் சொன்னபடி செய்துவிடுங்கள். அனைவருக்கும் அறிவித்துவிடுங்கள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

படகில் தன்னை நோக்கி வந்து கொண்டிருந்ததைக் கண்ட சிங்களப் படைத் தலைவனின் மனம் கடலலையைப் போல் துள்ளியது. கனவுலகில் விழுந்தான் அவன். சிங்கள கடல் பிராந்தியத்தில் பிரசித்தி பெற்றவனும், கடற்போரில் நிகரற்றவனும், தென் பழந் தீவுகள் அனைத்திற்கும் சிம்ம சொப்பனமாகக் கருதப்பட்டவனும், சிங்கள மன்னனாலும் படைகளாலும் மதிக்கப்பட்டவனுமான தென்னவன் காராளன் பிரம்மதேவனைப் போல் ஆஜானுபாகுவாகக் காட்சியளித்தான். தென் பிராந்தியங்களில் அரிய செயல்களைப் புரிந்த காரணத்தாலேயே 'தென்னவன்' என்ற சிறப்புப் பட்டத்தை பெற்றிருந்த அவனது முகத்தில் அவனது சிறப்பைப் போலவே பெரிய மீசை வளர்ந்திருந்தது. அணிகலன்களுக்கும் இதர வீரக் கழல்களுக்கும் வீரனின் உடலில் இருப்பதால்தான் சிறப்பு வருகிறது என்பதை நிரூபிப்பதுபோல் அவனது போர்க்கவசம் மார்பை மறைத்திருக்க, வீரக்கழல்கள் கைகளிலும் கால்களிலும் உருண்டு கிடக்க, தழைத்திருந்த கேசம் காதுகளை மறைத்து கழுத்திலும் வந்து புரள, இடையில் பெரிய உடைவாள் தொங்க அரியதொரு தோரணையுடனிருந்தான் அவன். அவனது பார்வை நெருப்புப் போல் இருந்ததென்றால் அவனது அசைவு மலை அசைவது போலிருந்தது. தற்போது அவ்வாறே அசைந்து கண்களை உருட்டிய அவன், "உங்களில் சிலர் போய் பல்லவ தளபதியை தக்க மரியாதையுடன் அழைத்து வாருங்கள்" என்றான் சிலரை அழைத்து.

அதையடுத்து நடந்த வரவேற்புகள் பல்லவ இளவலை வியப்பில் ஆழ்த்தின. நான்கைந்து படகுகளில் வாத்தியங்களைச் சுமந்து இசைத்தபடி சென்ற சிங்கள வீரர்கள் அபராஜிதனுக்கு மாலையணிவித்துத் தங்கள் சேனாதிபதியிடம் அழைத்துச் சென்றார்கள். அதையெல்லாம் கண்ட பல்லவ இளவலுக்கு "இந்தச் சேனாதிபதி மட்டும் வஞ்சகனாய் இல்லாதிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!" என்றிருந்தது. முடிவில் சேனாதிபதியை அவனது மரக்கலத்தில் சந்தித்த பல்லவ இளவல் "சேனாதிபதியின் மகத்தான வரவேற்பிற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றான்.

தென்னவன் காராளனிடம் அலட்சியப் புன்னகையொன்று விரிந்தது. "சிங்களவர்கள் என்றுமே பண்பில் உயர்ந்தவர்கள்.

நன்மை செய்ய விரும்புகிறவர்கள்" என்று மெதுவாகவும் சொன்னான்.

அவன் சொல்வது எவ்வளவு பொய் என்பது தெரிந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், "அத்தகைய பண்பு என்றும் நிலைத்திருக்கட்டும்" என்று தெரிவித்துக் கொண்ட பல்லவ இளவல்" ஓலை கிடைத்தது" என்றான்.

"நீங்கள் வந்ததிலிருந்தே தெரிகிறது" சகஜமாகவே சொன்னான் சேனாதிபதி.

"எதற்காக வந்திருக்கிறேன் என்று தெரிகிறதா?"

"அது ஓலையில் இருக்கிறது" என்றான் காராளன்.

"ஓலையில் ஒரு நிபந்தனை போட்டிருக்கிறீர்கள்."

"ஆம். அப்படித்தான் நினைக்கிறேன்."

"அதற்குச் சம்மதித்து நேசக்கரம் நீட்டிச் சந்திக்கச் சொல்லியிருக்கிறீர்கள்."

"உண்மை."

"நான் வந்திருப்பதால் அதைத்தான் எதிர்பார்க்கிறீர்களா?"

"எதையும் எதிர்பார்க்கும் நிலையில் நானில்லையே."

"எப்படி?"

"என் நிலையை ஏற்கெனவே ஓலையில் விளக்கியிருக்கிறேன். கண்கூடாகவும் பார்த்திருக்கலாம் அதை."

"அதாவது உங்கள் கரம் ஓங்கியிருப்பதாகச் சொல்கிறீர்கள்."

"அப்படியும் வைத்துக் கொள்ளலாம்."

"அப்படியானால் ஓலையை நானல்லவா அனுப்பியிருக்க வேண்டும்? நீங்கள் அனுப்ப வேண்டிய அவசியம்? எதையும் எதிர்பார்க்காத நிலையில் இருக்கும் நீங்கள் பேசாமல் தாக்க வேண்டியதுதானே?"

இதைக் கேட்டுப் புன்முறுவல் கொண்ட காராளன், "தளபதியாரே, நான் ஓலையை அனுப்பியது பெருந்தன்மைக்கு அடையாளம். சம்பிரதாயத்தை மீறிய விஷயம். சம்பிரதாயத்தை மட்டுமே பெரிதாக நினைத்துக் கொண்டிருப்பவர்களல்லர் சிங்களவர்கள்" என்று கூறிவிட்டு இருந்தாற்போலிருந்து "என் நிபந்தனைகளுக்கு நீ சம்மதிக்கவில்லை அவ்வளவுதானே?" என்று மரியாதையைக் கைவிட்டுப் பேசியதோடு, "உன் நிலையை நீ புரிந்து கொள்வது நல்லது" என்றான்.



அபராஜிதன் ஆடிப் போய்விடவில்லை. சற்று சாய்ந்தே அமர்ந்து கொண்டதோடு காராளன் நிதானம் தவறியது குறித்து மகிழ்ச்சியும் கொண்டான்.

"என் நிலைக்கு என்ன?" என்று கேட்கவும் செய்தான்.

"நிர்க்கதியான நிலைதான்" என்றான் காராளன்.

"அதெப்படி?"

"உன்னை இப்போது நான் கைது செய்வதை யார் தடுக்க முடியும்?"

இதற்குப் பல்லவ இளவல் பதிலளிக்கவில்லை. அவனுக்குப் பதிலாக எழுந்தது பெரியதொரு கொம்பொலி. அதைக்கேட்ட கணத்தில் பார்வையை காராளன் சற்றே அகற்றியதும் மின்னல் வேகத்தில் தன் வாளை உருவி அவனை எதிர்கொண்டான் பல்லவ இளவல். இதற்கிடையில் வெளியே குழப்பம் உண்டானதுபோல் ஏதேதோ சத்தங்கள் கேட்டன. இதனால் சீற்றத்திற்கு ஆளான தென்னவன் காராளனும் வாளை உருவினான். வாட்போர் அப்போது அவனுக்குத் தேவையில்லாத ஒன்றுதான். அவனது கடமை அப்போது நிலைமையை அறிந்து உத்திரவிட வேண்டியது. ஆனால் அறைக்குள் சிக்கிக் கொண்டானாதலால் எந்தவிதக் கட்டளையும் அவனால் போட முடியவில்லை. அதோடு அபராஜிதனின் உபதலைவன் ஒருவன் அறைக்கு வெளியே தென்பட்டானாதலால் தனக்கு உதவ எவனும் உள்ளே வரமுடியாது என்பதையும் புரிந்து கொண்டான். பல்லவ இளவலோ உக்கிரமான போரைத் துவக்கி சிங்கள காராளனைத் தேக்கினான் அறையில். தேவையற்ற வாட்போர் உள்ளே நடந்து கொண்டிருக்க வெளியிலோ பயங்கரப் போர் மூண்டுவிட்டிருந்தது. சிங்களவரின் மரக்கலங்கள் பற்றி எரிந்தன. எங்கும் ஒரே ஓலமாகிவிட்டிருந்தது.

சிங்களக் காராளனைச் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு பல்லவ இளவல் சென்றதுமே அவன் சொல்லி வைத்தமாதிரி கச்சிதமாக நடந்து கொண்டான் மாவலிராயன். அனைத்து உபதளபதிகளுக்கும் திட்டத்தைப் பற்றிய செய்தியனுப்பி உரிய ஆயத்தங்களையும் செய்யலானான். சிறிது நேரம் பொறுத்திருந்த பின் திடீரென கொம்பூதிவிட்டு அனைத்து மரக்கலங்களையும் இயக்கும் ஆணைகளைப் பிறப்பித்தான். அரைவட்ட வடிவிலிருந்த எதிரியின் அணிவகுப்பில் அம்பு முனையைப் போல் ஒடிந்து ஓடிய பல்லவர் கலங்கள் திட்டமிட்டபடி விர்விர்ரென்று தீயம்புகளையும் சரமாரியான

வாணங்களையும் எதிரியின் கலங்கள் மீது வீசியபடி முன்னேறின. சமாதான ஓலையைப் பெரிதாக நம்பியிருந்த சிங்கள சேனாதிபதி தன் கலங்கள் அனைத்திலும் பாய்களை விரித்திருந்தானாதலால் பல்லவர் பரப்பிலிருந்து புறப்பட்டத் தீயம்புகளும் வாணங்களும் எளிதில் பாய்களைத் தொட்டுத் தீப்பற்ற வைத்துவிட்டதினால் எதிர்பாராத தீயும் சுவாலையும் உண்டாயின. அதோடு எதிரியின் மரக்கலத்தளங்களில் அம்பெய்யும் பொறிகள் ஏற்றப்படாமலிருந்ததாலும், போர் வீரர்கள் போரை அவ்வளவு குறுகிய காலத்தில் எதிர்பார்க்காததினாலும், பயங்கரமாக உண்டாகிவிட்ட தீயை அணைக்க வேண்டிய இக்கட்டு ஏற்பட்டுவிட்டதாலும், ஆணை பிறப்பிக்க வேண்டிய சேனாதிபதி அறையிலேயே இருந்துவிட்டதாலும் எதிர் நடவடிக்கை எடுப்பதில் தாமதமாயின. இதற்கிடையில் பாய்களேதும் விரிக்காத நிலையில் முன்னேறிய பல்லவர் கலங்கள் எதிரியின் அணியில் மோதின. மாவலிராயன் இயக்கிச் சென்ற மரக்கலம் வெகு வேகமாக முன்னேறி சந்திர வளையத்தின் நடுவில் மோதியது. அப்படி மோதியபோது கலத்தின் அடிப்பாக இரும்புப் பாளம் நீட்டிவிடப்பட்டிருந்ததால் மோதலுக்கு ஆளான சிங்கள மரக்கலம் பிளவுபட்டு மூழ்கியது கடலில். இதனால் எதிரியின் அணி இரண்டாகப் பிரிந்துவிடவே பல்லவரது கலங்கள் ஐந்து ஐந்தாகப் பிரிந்து தாக்கின. அருகில் நெருங்கிவிட்ட பல்லவர் கலங்களிலிருந்து கொக்கிகள் வீசப்பட்டும் வீரர்களால் தாக்கப்பட்டும் ரகளை பெருகியதால் உக்கிரமான போர் மூண்டுவிட்டது. ஆனால் இத்தனை இக்கட்டுகளிலும் சிங்களவர்கள் தங்களை சமாளித்துக் கொண்டுவிடுவார்கள் என்பதை விரைவிலேயே தெரிந்து கொண்டான் மாவலிராயன். தற்போது தன் நிலையைக் குறித்து அவன் அஞ்சவும் வேண்டியதாயிற்று.

★ ★ ★



# அத்தியாயம் பன்னிரண்டு

(வேற்றொலி வெண்துறை)

வெற்றியே தும்பக்கம் வாளையும் தமக்குத்தான் வாளுக்கும் வேலையில்லை
சுற்றியே வந்திடலாம் சல்லாபித் தபடி என்றிருந்தச் சிங்களவர்
பற்றியே தீயும்தான் பாய்மரம் தொட்டவுடன்
நெற்றியே வெடித்தாற்போல் நிலையும் தான்குலைந்து
வற்றியே போய்விட்ட வெற்றிடமாய்த் தானாகிக்
கற்றார் நல்பாடம் கச்சிநகர் இளவலிடம்.

போர் மூண்டுவிட்ட சிறிது நேரத்திலேயே சிங்கள வீரர்கள் சுதாரித்துக் கொள்ளலானார்கள். தீப்பற்றிக் கொண்டிருந்த கலங்களைப் பொருட்படுத்தாமல் அவர்களது கலங்கள் சில பின்னடைந்து போய் தீயை அணைப்பதில் முயன்றன. இவை போக வேறு இரு மரக்கலங்கள் தீயை மேலும் பெருக்கிக் கொண்டு பல்லவ அணிகள் இரண்டையும் நோக்கி நகரலாயின. சிங்கள உபதளபதிகள் போட்ட உத்தரவுகள் இடியென எல்லா திசைகளிலும் எதிரொலித்தன. அவர்கள் எரியம்புகளையும் வாணங்களையும் வீசினார்கள். அந்தத் தாக்குதலால் பல்லவர் கலங்கள் சில தீப்பிடித்துக் கொண்டு பின்னடைவதைக் கண்ட மாவலிராயன் திகிலடைந்தான். அவனது திகிலை உச்ச கட்டத்திற்குக் கொண்டு போகும் வகையில் சிங்கள மரக்கலம் ஒன்றில் தென்னவன் காராளனின் உருவம் புலப்பட்டது.

அதைக் கண்டதுமே மாவலிராயனுக்கு அபராஜிதனின் நிலை குறித்துச் சந்தேகம் எழுந்தாலும் அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்து தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த தீக்கப்பலிடமிருந்து விலகும் வகையில் ஆணைகளைப் பிறப்பிக்க முற்பட்டான். அப்போது வேறொரு ஆச்சரியமும நிகழ்ந்தது. அவன் யாரைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தானோ அந்த அபராஜிதன் அங்கே பிரவேசித்தான். உடனடியாக பற்பல கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு தன் கலத்தை தென்னவன் காராளனின் தீக்கப்பலை நோக்கி இயக்கினான்.

சாதாரணமாகத் தன் கலங்களுக்குத் தீ வைத்துக் கொண்டு இயக்கி எதிரியின் கலங்கள்மீது மோதி அவற்றை உடைத்தும், தீய்த்தும் அழிப்பதுமே கடற்போரின் வழக்கமாய் இருந்தது. அதனாலேயே தன் கலத்தைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான் சிங்கள சேனாதிபதி. ஆனால் அபராஜிதனின் கலம் தன்னுடைய தீக்கலத்தைத் தேடி முன்னேறி வந்து கொண்டிருப்பதைக் கண்டதும் அவன் குழம்ப வேண்டியவனான். சற்று நேரத்திற்கு முன் வரை தன் அறையில் வாட்போர் நிகழ்த்திக் கொண்டிருந்த அபராஜிதன் இவ்வளவு சீக்கிரத்தில் பல்லவருடன் சேர்ந்து கொள்வான் என்றோ துணிகரத் திட்டத்தை மேற்கொள்வான் என்றோ சிறிதும் அவன் எதிர்பார்க்காததால் தற்போது வியப்பும் ஆத்திரமும் அடைந்து, "இவனைத் தொலைக்காமல் விடுவதில்லை" என்று கறுவியும் கொண்டான்.

இதற்கிடையில் இன்னொரு பல்லவர் கலம் தீப்பிடித்து நீரில் மூழ்கியது. எஞ்சிய கலங்களுக்கும் சிங்களக் கப்பல்களுக்கும் உக்கிரமான போர் நடந்து கொண்டிருந்தது. பற்றியிருந்த தீயை அணைத்துக் கொண்டு சிங்களக் கப்பல்களும் முன்னேறலாயின. மோதல்கள் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்த வேளையில் தன் 'ஊர்த்தவா' கலத்தை இயக்கிய பல்லவ இளவல் தென்னவன் காராளனை நெருங்குவதுபோல் சென்று திடீரென விலகி இயக்கினான். இச்செயல் காராளனுக்கு எரிச்சலை மூட்டவே விலகி ஓடிய அக்கலத்தை நோக்கித் தன் கலத்தையும் செலுத்தப் பணித்தான். அதைக் கண்ட அபராஜிதன் தன் கலத்தை வேறு திசையில் விலக்கினான்.

இப்படியே செய்ததால் இரண்டு கலங்களுமே போர்க்களப் பிராந்தியத்தை விட்டுக் கணிசமாக விலகி வந்திருந்தன. இந்த நிலையில் தன் கலத்திலிருந்த பாய்களைச் சரசரவென்று ஏற்றி அவற்றுக்குத் தீயும் வைத்துக் கொண்ட அபராஜிதன் அதைக் காராளனை நோக்கி வேகமாகச் செலுத்தினான். இரண்டு கலங்களும் தடாலென மோதின. நீண்ட நேரமாய் தீக்கிரையாகிக் கொண்டிருந்த தென்னவன் காராளனின் கலம் இம்மோதலினால் படீரெனப் பிளந்து மூழ்கலாயிற்று. பாய் மரத்துண்டுகள் வெடித்துச் சிதறின. மோதிய கணத்திலேயே தன் கலத்தை விலக்கிக் கொண்ட பல்லவ இளவல் பாய்களில் பற்றிய தீயை அணைக்கும்படி ஆணையிட்டான். கலத்தைப் போர்க்கள மையப் பகுதிக்குச் செலுத்தும்படியும் பணித்தான். இவனது இதே தந்திரத்தை இவனது கட்டளையின்படி மாவலிராயனும் வேறொரு திக்கில் சென்று சிங்களக் கப்பலொன்றை மூழ்கடித்தான். தற்போது பல்லவர் தரப்பில் ஆறு கலங்களும் சிங்களவர் தரப்பில் பன்னிரண்டு கலங்களும் ஒன்றையொன்று



எதிர்த்து அம்பு மழை பொழிந்து கொண்டிருந்தன. அந்த நேரத்தில் கொம்பொன்றை எடுத்து ஊதினான் அபராஜிதன். அதை ஆமோதிப்பதுபோல பயங்கரமாக ஊளையிட்டபடி பற்பல கலங்கள் மேற்கேயிருந்து வரலாயின. அக்கலங்கள் சரியாகப் புலப்படாதவாறு புகை மண்டலமொன்று துரிதமாக வந்து கொண்டிருந்தது.

மூழ்கி மரக்கலத்திலிருந்து குதித்தோடி வந்திருந்த தென்னவன் காராளன் வேறொரு கப்பலில் இருந்தபடி இக்காட்சியைக் கண்டான். பகல் நேரமாதலால் புகை மண்டலத்தினூடே மரக்கலங்களில் ஏற்பட்டிருந்த கொடியின் நிறமும் அடையாளமும ஓரளவிற்குப் புலப்பட்டது அவனுக்கு. புகையைக் கிளப்பிக் கொண்டு வரும் அந்தக் கொள்ளையர் கப்பல்கள் தாக்குதலில் இறங்கிவிட்டால் அவற்றைச் சமாளிக்கவே சரியாக இருக்கும் என்பதையும், அந்த நேரத்தில் பல்லவர் கலங்கள் போரிட்டால் தன் கதி அதோகதிதான் என்பதைப் புரிந்து கொண்டான் சந்தேகமில்லாமல். அதோடு கொள்ளையர் கலங்களில் பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த வாணங்களைப் பற்றியும் நினைத்துக் கொண்டான்.

புகையைத் திரைபோல் பயன்படுத்திக் கொண்டு கொள்ளையர்கள் வாணங்களை வீசி வளைத்துக் கொள்வார்களானால் எத்தகைய பரிகாரத்திற்கும் இடமிருக்காது என்று கருதிய அவன் மீண்டும் வஞ்சகத்தில் இறங்கினான். சமாதானச் சங்கை ஊதி முதலில் பல்லவர்களோடு சேர்ந்து கொண்டு கொள்ளையர்களை வீழ்த்துவதென்றும், அப்படி வீழ்த்தியபின் பல்லவர்களையும் தீர்த்துக்கட்டி விடுவதென்றும் தீர்மானித்து சமாதானத் தாரைகளை ஊதப்பணித்தான்.

ஆனால் இந்த முறையும் அவனது வஞ்சகம் எடுபடவில்லை. அபயத் தாரைகள் ஊதப்பட்டபோதும் சிங்களக் கப்பல்கள் சற்றே குழப்பமடைந்து பின்னடைந்தாலும் அபராஜிதன் எந்தவிதமான போர் நிறுத்த அறிவிப்பும் செய்யாததால் பல்லவ வீரர்கள் தாக்குதலைத் தொடரவே செய்தார்கள்.

பன்னிரண்டு கப்பல்களை வைத்திருப்பவன் அபயத் தாரைகளை ஊதுவது பொறுத்தமாய் இல்லாதிருந்தாலும், தென்னவன் காராளனின் வஞ்சக குணத்தை நேரிலேயே கண்டிருந்ததாலும் தற்போது ஊதப்பட்ட அபயத் தாரைகளை பல்லவ இளவல் பொருட்படுத்தவில்லை. இதற்கிடையில் சிவந்த கொடிகளைத் தாங்கிய ஐந்து கொள்ளையர் கலங்கள் நெருங்கிவிட்டிருந்தன. சுவர்ணமுகி வகையைச் சேர்ந்த உயரமான அந்த மரக்கலங்கள் படகொன்றை முன்னே விட்டு

புகையைக் கிளப்பியதால் போர்ப் பிராந்தியம் குழப்பத்தில் ஆழ்ந்தது. வந்த ஐந்து கலங்களில் இரண்டிரண்டும் பக்கமாக முன்னேறின. ஐந்தாவது மரக்கலம் தனக்குத்தானே தீயிட்டுக் கொண்டு சிங்கள மரக்கலத்தை நோக்கி வெகு வேகமாக வந்தது.

இந்த நிலையில் விஷயத்தை விளங்க வைத்துக் கொண்டான் தென்னவன் காராளன். வந்த ஐந்து மரக்கலங்களும் சிங்களக் கப்பல்களை நோக்கியே வந்ததால் அதில் ஏதோ சூதிருக்கிறது என்று நம்பினான். அவைகள் கொள்ளையர் மரக்கலங்கள் அல்ல என்றும், அத்தகைய முத்திரையிட்டுக் கொண்டு வந்த பல்லவர் கலங்களே என்றும், ஆகவேதான் தன் அபயக்குரலை அபராஜிதன் சட்டை செய்யவில்லை என்றும் ஊகித்து உணர்ந்தான். அதையடுத்து அவனது கட்டளைகள் பிறந்தன. இக்கட்டு வந்தபோதும் மனம் தளராமல் துணிவோடு செயல்பட்டான். சற்றே மந்தப்பட்டுக் கிடந்த போர் மீண்டும் மும்முரமாயிற்று.

அந்த மும்முரத்தைக் கண்டு பெருவகை கொண்டான். ஐந்து மரக்கலங்களைத் தலைமை வகித்து வந்த சீனன் சென்சுவான். வேட்டைக்காரனின் கண்ணில் பட்டுவிட்ட விலங்குகளைப் போல் போரின் மும்முரமானது அவனை உற்சாகப்படுத்தியது. நெடுநாட்களாக விரும்பியிருந்த கடல் போரை நடத்தும் ஆனந்தம் உண்டாயிற்று அவனிடம்.

போர் வெறி முகத்தில் தாண்டவமாடியது. கொளுத்திக் கொண்ட தன் கப்பலை சிங்கள மரக்கல அணிக்குள் அலட்சியமாக நுழைந்துச் சுழன்றானாதலால் பெரும் எடையுள்ள அவனது கலம் சிங்களக் கப்பல்களைப் பெரிதாக ஆட்டிவிட்டன. அவனது கலத்தில் பிடித்திருந்த தீ அவன் காட்டிய வேகத்தில் தூண்டப்பட்ட காற்றினால் நாலாபுறமும் விசிறப்பட்டு அருகே வந்த கலங்களை எட்டியது. அவனது கலத்தில் இருந்தவர்கள் பெரும்கொக்கிகளை வீசி இழுத்தும் அக்கலங்களில் குதித்தும் கோரத் தொழில்களில் ஈடுபட்டார்கள்.

சீனனின் உபாயப்படி மரக்கலங்களில் குதித்துப் போரிட்ட வீரர்கள் அச்சிங்களக் கப்பல்களின் உபதளபதிகளைக் கொன்றுவிட்டு அக்கப்பல்களைத் தனியே பிரித்து இயக்கிச் சென்றார்களாதலால் சிங்களவர் தரப்பில் தற்போது ஆறு கப்பல்களே போர்ப் பிராந்தியத்தில் இருந்தன. பல்லவரது தரப்பிலும் காராளனின் தரப்பிலுமாய் மேலும் இரு கலங்கள் மூழ்கின. இந்த நிலையிலும் தளராத காராளன் தன் கலங்களை யெல்லாம் ஒன்றாக வைத்துக் கொண்டு போரிட்டான்.



பொறிகளிலிருந்து அம்புகள் சரமாரியாக எழுந்து பாய்ந்தன. கலங்களை ஒரு நிலையில் வைத்துப் போரிட்டானாதலால் பல்லவ கலங்கள் அவற்றை உடைக்கவோ ஊடுருவவோ முடியாமல் எதிர்த்திசையிலேயே இருந்து அம்புத் தாக்குதல்களை நடத்தின.

இதைக் கவனித்தான் பல்லவ இளவல். இந்த ரீதியில் போர் தொடர்ந்தால் அம்புகள் விரயமாவதுதான் மிச்சம் என்பதை உணர்ந்து சீனனை அழைத்து, "சீனா நிலைமை மந்தப்பட்டுக் கொண்டு போவதை அறிந்தாயா?" என்றான்.

"ஆம் பிரபு. வீண் விரயமாகிக் கொண்டிருக்கிறது" என்றான் சீனன்.

"நம்மிடம் ஒன்பது கலங்கள் எஞ்சியிருந்தாலும் மூன்று கலங்கள் நிரம்ப சேதமாகியிருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்த முடியாது."

"உண்மைதான் பிரபு. ஏறக்குறைய நாம் சம பலத்தில் இருக்கிறோம், அவர்களது ஆறு கலங்களை நம்மவர்கள் தனியே பிரித்துக் கொண்டு போய்விட்டார்கள்."

"மொத்தத்தில் பதினெட்டு கப்பல்களில் பன்னிரண்டை இழந்தும் காராளன் சமாதானத்திற்கு வராமல் போரிடுகிறானே, இது எதைக் குறிக்கிறது?"

"பிரபு. காராளன் போரின் முடிவைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று தோன்றுகிறது. அதோடு இன்னமும் வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ணுகிறானோ என்னவோ?"

"அந்த நம்பிக்கையை வளரவிடுவது ஆபத்தல்லவா?"

"இதற்காகத்தான் என் உபாயத்தை முதலிலேயே சொன்னேன். தடுத்துவிட்டீர்கள்."

"நேரம் வந்துவிட்டது சீனா. வேறு வழியும் இல்லை. உன் திட்டத்தைச் செயல்படுத்து சீக்கிரம்."

அபராஜிதன் இவ்வாறு அனுமதியளித்ததுதான் தாமதம். திருட்டுத்தனமாகப் பாலைக் குடித்துவிட்டுக் களிக்கும் பூனைபோல் தலையை ஆட்டிக் கொண்டே சென்றான் சீனன். சென்றவன் அனைத்துப் பல்லவர் கலங்களுக்கும் விஜயம் செய்தான். அடுத்தகணம் சிங்களவர் எதிர்பாராத மாயாஜாலம் நடந்தது. அதுவரைப் பயன்படுத்தாதிருந்த பயங்கரச் சீன வேட்டுகளைத் தற்போது சீனன் கொளுத்தி எரிந்தானாதலால் வானத்தில் மிக உயரத்தில் சூரியனே வெடித்துச்

சிதறுவதுபோல் ஓசை உண்டாகி ஒளிப்பிழம்புகளும் புலப்பட்டன. அவை தனது கலங்களின்மீது விழும்பட்சத்தில் தீ உண்டாவது மட்டுமின்றி கலங்களைப் பெரிதும் சிதைத்துவிடும் என்பதை உணர்ந்த காராளன் "ம். கலங்களை பின்னடையச் செய்யுங்கள். வேட்டுகளிலிருந்து தப்புங்கள்" என்று பிசாசுபோல் இரைந்தான்.

அதையடுத்து அவனது கலங்கள் பின்னடைந்தாலும் சீன வெடிகளை வீசிய பல்லவர் கலங்களோ அவற்றைத் தொடர்ந்தன. இதைக் கண்ணுற்ற சிங்கள சேனாதிபதி இப்படியே நடந்து கொண்டிருந்தால் இதற்கொரு முடிவிருக்காது என்று கருதியதோடு துணிவின் எல்லையை மீறிவிடவும் தீர்மானித்து, கலங்களைப் பல்லவர்களை நோக்கிச் செலுத்துங்கள். மோதுங்கள். வளையங்களை வீசித் தாவுங்கள். வெற்றியோ தோல்வியோ தளர வேண்டாம்" என்று மீண்டும் கூக்குரலிட்டு சிங்கள வாழ்த்துக் கோஷங்களையும் போட்டானாதலால் சிங்கள வீரர்கள் தெம்படைந்து அவனது ஆணைகளை நிறைவேற்றலானார்கள்.

அந்த ஆணையின் விபரீதத்தை எண்ணி திகைத்தான் சீனன். சிங்களவரின் கலங்கள் தங்களை நோக்கி மோதும்பட்சத்தில் தான் வீசும் பயங்கர வேட்டுக்கள் தம் கலங்களின் மீதும் விழுமாதலால் இருதரப்பினருமே அழிய நேரிடும் என்பது புரிந்தது அவனுக்கு. இந்த நேரத்தில் அபராஜிதனின் கூறிய அறிவு வேலை செய்தது. சமயோசிதமான ஆணைகளைப் பிறப்பித்தான்.

அதையடுத்து பல்லவர் தரப்புக் கலங்களில் ஒரு கோடியில் ஒன்றும் மறுகோடியில் ஒன்றுமாய் திடீரென்று பிரிந்து விலகி சிங்களவர் அணிக்குப் பின்புறமாய் வந்தன. அதன் காரணத்தை ஊகித்துக் கொண்ட சீனனும் புகையைக் கிளப்பிக் குழப்பினான். பின்புறத்தில் வந்துவிட்ட பல்லவர் கலங்கள் சீன வெடிகளை வீசின சிங்களக் கப்பல்களை நோக்கி. அப்படி பின்புறம் இரண்டு கலங்களும் முன்புறத்தில் சீனனுமாய் வெடிகளை வீசியதும் காராளனின் கலங்களில் மேலுமொன்று வெடித்து மூழ்கியது.

தன் திட்டப்படி எதையும் செய்ய முடியாத நிலைமைக்கு தான் வந்துவிட்டதை உணர்ந்த சிங்கள சேனாதிபதி தென்னவன் காராளன் போர் நிறுத்தச் சங்கையும் அபயத் தாரையையும் மாறி மாறி ஊதினான்.

அதையடுத்துப் போர் நிறுத்த ஏற்பாடுகள் விடுவிடுவென நடந்தன. சிங்களவரிடம் எஞ்சிய கலங்கள் வளைக்கப்பட்டு



வீரர்கள் சிறை செய்யப்பட்டார்கள். ஆயுதங்கள் பறிக்கப்பட்டன. சேதமான கலங்கள் நல்ல கலங்களுடன் இணைக்கப்பட்டன. கலங்களைச் சுத்தமாக்கும் பொருட்டு உயிரற்ற உடல்கள் கடலில் வீசியெறியப்பட்டன. போர் முடியும் நேரத்தில் மாலை நேரமும் தோன்றிவிட்டபடியால் கதிரவனின் பொன்னிறக் கிரணங்கள் அந்த பிராந்தியத்தில் வீசி கோரமான போர்க்களத்தை மேலும் பயங்கரமாக அடித்தன. குற்றுயிரும் கொலையுயிருமாய் கடலில் விழுந்துவிட்ட வீரர்கள் ஓலம் அந்தப் பிராந்தியத்தையே கலக்கியது. ஓலத்தைத் தொடர்ந்து பலர் மரணத்தைத் தழுவும் வேளையில் எழுப்பிய வாழ்த்தொலிகள் அந்த நேரத்திலும் வீர ஒலியாகவே இருந்ததாலோ என்னவோ கடல் நீரும் கலங்கிப் போய் பெரிதாக சலசலத்தது. உடல்களிலிருந்து உண்டான ரத்தம் பெருமளவிற்கு பரவிக்கிடந்ததால் நீலக்கடல் செங்கடல் போல் காட்சியளித்தது. அந்தச் சிவப்பை மேலும் சிவப்பாக்கக் கதிரவனும் செங்கதிர்களை வீசியபடி மெல்ல மெல்ல மேற்கே மறைந்ததாலும், அந்தச் செந்நீரில் மிதந்தும் சுழன்றுமாய்ச் சென்ற பிணங்களை சுறாக்கள் கூட்டமாக வந்து புரட்டியெடுத்ததாலும், அந்தப் புரட்டல்களுக்கெல்லாம் இடம் தர விரும்பாததுபோல் பல சடலங்கள் மரக்கல ஓரங்களில் சிக்கிக் கிடந்ததாலும், அவற்றின் மீது ஓயாமல் அலைகள் விழுந்து விழுந்து கழுவிச் சென்றதாலும் அப்போதைய காட்சி கோரத்திலும் ஒருவித அழகுண்டு என்பதை நிரூபித்தது. வானத்தில் சிறிது சிறிதாக சந்திரபிம்பமும் கருணை தேவதையின் முகம்போல் காட்சியளித்தபடி எழுந்தது. மரக்கலங்களில் பந்தங்கள் ஏற்றப்பட்டன. கலங்களை ராமேஸ்வரக் கரைக்குக் கொண்டு செல்லும் ஆணைகளைப் பிறப்பித்து விட்டு சிங்கள சேனாதிபதியையும் சந்தித்துவிட்டு தன் அறையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது யாருமே எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்துவிட்டது.

★ ★ ★

# அத்தியாயம் பதின்மூன்று

(மருட்பா)

வாத அரசியல் வலியவே அழைத்தினும்
போதை விழிபேசும் பேதை - காதல்
பாதை தன்னில் பாங்குற நடந்து
கோதை நாயகன் கருத்தினில் பதிந்து
சாதலில் வீழ்ந்தினும் வாழ்ந்தாள்
கீதமாய் அனைவரின் நெஞ்சினில் என்றுமே.

தென்னவன் காராளன் தோல்வியடைந்த பின் பல்லவரது கடமை முடிந்துவிட்டதாகவே கருதினான் அபராஜிதன். ஸ்ரீமாறர் ஸ்ரீவல்லபர் கோரியிருந்த உதவி ஈழப் படையை முறியடிப்பதுதான். ஆதலால் தற்போது அக்காரியம் அபராஜிதனால் செவ்வனே செய்து முடிக்கப்பட்டிருந்தது.

இலங்கைப் படைகளை முடுக்கிவிட்டுப் பாண்டிய நாட்டில் போரை உண்டாக்கி ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனை விரட்டியோ அல்லது முடிந்தால் கொன்றோ பாண்டியர் ஆட்சியைக் கைப்பற்றிவிட முனைந்த மாயபாண்டியன் சிங்களப் படைகளைத் தரை மார்க்கமாக அனுப்பாமல் கடல் மார்க்கமாக அனுப்பும்படி கேட்டிருந்தான். இதற்கிடையில் பாண்டிய மன்னனுக்கு உதவ பல்லவர் கடற்படை புறப்பட்டுவிட்டதால் சிங்களப் படைகள் முதலில் பல்லவரை அடக்கி ஒடுக்கிவிட முயன்றன. அந்த முயற்சி படுதோல்வி அடைந்ததால் மீண்டுமொருமுறை பாண்டிய நாட்டின் மீது போர் தொடுக்கும் வலிமையை சிங்களம் இழந்தது. அதை ஊகித்து உணர்ந்திருந்தான் பல்லவ இளவல்.

எனவே சிங்களம் வரை செல்லாமல் ராமேஸ்வரத்தை அடைந்தான். சிங்கள வீரர்கள் அங்கே இறக்கப்பட்டு கைதிகளாய் பாண்டிய நாட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். அந்த வகையில் தென்னவன் காராளனும் பல்லவ இளவரசனுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டான். அந்த மாவீரன் தலை குனிந்து கிடந்தது. அதைக் கண்டு அபராஜிதன் உள்ளூர



வருந்தினாலும், வருந்துவதால் பயனேதும் இல்லை என்பதை உணர்ந்து, "காராளா!" என்று தீட்சண்யமான குரலில் அழைத்தான்.

"என்ன?" அரக்கன் போல் நின்றிருந்த காராளனிடமிருந்து எழுந்தது குரல்.

"போர் முடிந்துவிட்டது" என்றான் பல்லவ இளவல்.

"அதற்கென்ன?"

"நடப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும்."

"யோசிக்க என்ன இருக்கிறது?"

"இல்லையா?"

"வீரர்களைத்தான் கைது செய்துகொண்டு போயாகி விட்டதே."

"அதற்கு யாரும் தடை செய்யவில்லை."

"சரி. உன் விருப்பம் ஏதாவது இருக்கிறதா?"

"மானமிழந்த பின் விரும்ப என்ன இருக்க முடியும்?"

"மனம் தளராதே காராளா. நீ மாவீரன். வீரர்களுக்கு போர்கள் சகஜம். வெற்றி தோல்விகளும் சகஜம். இந்தப் போரோடு அனைத்தும் முடிந்துவிடப் போவதில்லை. மேலும் பல போர்களும் நிகழலாம். அவற்றில் நீ வெற்றியும் அடையலாம்."

"அதற்கு நான் சிங்களம் செல்ல வேண்டும்."

"சென்று வா காராளா. உன்னை மட்டுமே திருப்பி அனுப்பி வைக்கிறேன். தோற்றவர்களில் ஒருவனையாவது சிங்கள மன்னன் காண வேண்டாமா? அதோ தனிக்கலம் தயாராக இருக்கிறது உனக்காக. ஏறிச்செல். மாயபாண்டியனைப் போன்ற முட்டாள்களுக்கு இனியும் உதவ விரும்ப வேண்டாம் என்று சிங்கள மன்னனிடம் சொல். மாயபாண்டியனை சந்தித்தால் அவன் இனிமேல் பாண்டிய நாட்டிற்கு வரவேண்டிய அவசியமில்லை என்று சொல். அங்கே இடமில்லை என்று சொல். பாண்டிய அரியணையைக் குறித்த பகற்கனவையும் விட்டுவிடச் சொல்."

தென்னவன் காராளன் பதிலேதும் பேசவில்லை. கிளை ஒடிந்த மரம்போல் நின்ற அவன் உயிரற்ற உடல்போல் தொங்கிய தலையுடன் கலத்தை நோக்கி நடந்தான்.

அவன் சென்றபின் தன் அறைக்குத் திரும்பிக் கொண்டிருந்த பல்லவ இளவல் தற்செயலாய் திரும்பியபோது தொலைவி லிருந்த சீனன் தன் குறுவாளை எடுப்பதைக் கண்டான். அதுபற்றி வினவுவதற்குள் அவனது குறுவாள் மின்னல் வேகத்தில் பறந்துவிட்டது. அதையடுத்து ஹா' என்ற ஓலம் அவனது அறையில் கேட்டது. அறைக்குள் சென்று பார்த்தான் அபராஜிதன். அங்கே சீனனின் குறுவாள் மார்பிலே பாய்ந்த நிலையில் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தாள் மயில் நிற மங்கை.

பதைத்துப் போன பல்லவ இளவல் திரும்பியபோது சீனனும் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் எரிமலை போலான பல்லவ இளவல், "டேய் சீனா, இதென்ன? ஏன் இந்த மகாபாதகத்தைச் செய்தாய்?" என்று இரைந்து சீனனின் கழுத்தைப்பிடித்து நெறித்தான். சீனனின் கண்கள் செருகிச் சென்றன.

அப்போது, "அவரை ஏதும் செய்ய வேண்டாம். அவர் மீது தவறேதுமில்லை" என்று மெதுவாக ஒலித்தது ஒரு குரல்.

அக்குரல் மயில் நிற மங்கையிடமிருந்துதான் வருகிற தென்பதை அறிந்த பல்லவ இளவல் சீனனின் கழுத்தை விட்டுவிட்டு ஏதோ வினவ முற்பட்டதும் "தங்களை இவள் கொல்ல முயன்றாள் பிரபு. ஆகவேதான் இவளை..." என்றான் சீனன்.

அபராஜிதனுக்கு மிகவும் குழப்பமாக இருக்கவே கீழே குனிந்து அவளைச் சந்தேகத்துடன் நோக்கினான். சீனன் சொன்னது சரிதான் என்பதைப்போல் தலையை ஆட்டினாள் அவள். அவளது கண்கள் கலங்கின.

"வேண்டாம் பிரபு. வேண்டாம். என் காயத்தை அப்படியே விட்டுவிடுங்கள். ஒன்றை மட்டும் செய்யுங்கள்" என்று இறைஞ்சினாள் அவள்.

"என்ன வேண்டும் மங்கை?" பலவிதமான உணர்ச்சிகளுடன் கேட்டான் அபராஜிதன்.

"இந்தப் பாவியைத் தங்கள் மடியில் வைத்துக் கொள்ளுங்களேன். நான் விரைவில் சாகப் போகிறேன்."

"ஏன் உன்னை இப்படியெல்லாம் கூறுகிறாய் மங்கை? நீயா பாவி?" இப்படிக் கேட்டுக் கொண்டே அவளது உடலைத் தன் மடியில் கிடத்திக் கொண்டான் அவன்.



அவளது முகம் ஒருவித மகிழ்ச்சியைப் புலப்படுத்தியது. ஒருகணம்தான். மறுகணமே அவளது கண்கள் நீரைப் பெருக்கின. "நான் பாவிதான். நான் பாவிதான். பாவி மட்டுமல்ல. துரோகி. தங்களைக் கொல்லப் பார்த்த வஞ்சகி" என்று புலம்பினாள்.

"என்னை நீ ஏன் கொல்ல வேண்டும்? நீ என்ன அன்னியவளா?"

"ஆம்."

"அமைச்சர் மகள் அன்னியவளா?"

"நான் அமைச்சர் மகளல்ல பிரபு."

"இல்லையா! பின்?"

சொன்னாள் அவள். அதுவரை வாழ்விலேயே அடையாத அதிர்ச்சியை அடைந்தான் அவன். அவனால் நம்ப முடியவில்லை. "உண்மையாகவா சொல்கிறாய்? உண்மைதானா மங்கை நீ சொல்வது? மாயபாண்டியனின் மகளா நீ?" என்று பித்தனைப் போல் கேட்டான் இளவல்.

"தங்கள் மீது ஆணை பிரபு. நான் மாயபாண்டியரின் மகள்தான்" என்றாள் அவள்.

இதைக் கேட்டதும் பல்லவ இளவலின் உடல் கூட சற்றே சிலிர்த்தது.

அபராஜிதன் வாழ்க்கையில் பலவிதத் திருப்பங்களைச் சந்தித்ததுண்டு. ஆனால் இத்தகைய திருப்பத்தை அவன் சந்தித்ததில்லை. அவன் நினைக்கிற மாதிரியும் வியக்கிற மாதிரியும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இந்த விவகாரம் போல் என்றும் நடந்ததில்லை. அளவுக்கு அதிகமான அதிர்ச்சி அவனிடம் சிரிப்பை உண்டாக்கிவிட்டது. அவள் மாயபாண்டியனின் மகளாய் இருக்கும் பட்சத்தில் தன்னைக் கொல்ல முயன்றதில் எந்தவித வியப்புமில்லை என்பதை உணர்ந்த அவன், தக்க சமயத்தில் குறுக்கிட்டு விட்ட சீனனை நிமிர்ந்து பார்த்தான். அவன் உணர்ச்சியற்று சிலைபோல் நின்றிருந்தான். மயில் நிற மங்கையின் அதரங்களையே கவனித்தபடி.

பல்லவ இளவலும் அவளை ஒருமுறை நோக்கினான். மதுரை மாளிகையும், மஞ்சமும், மஞ்சத்தருகே மயில் நிற மங்கை வந்து நின்றதும் அவனது நினைவிற்கு வந்தன. மாய பாண்டியனின் மகள் என்பது தெரிந்துவிட்டதால் பகைவன்

என்ற முறையில் அவளைக் காணும்போது ; அருவருப்பு தோன்றுவது இயல்புதான் என்றாலும் அபராஜிதனுக்கு இப்பொழுது அவள் மீது அனுதாபமே உண்டாயிற்று. முன்பு எப்படி அவள் எழில் குன்றாகத் தோன்றினாளோ அப்படித்தான் தற்போதும் தோன்றினாள். அவளது மயில் நிற உடல் அப்போது போலத்தான் இப்போதும் மருட்டியது.

அவளை ஒருமுறை நோக்கிவிட்டு, "மாயபாண்டியனின் மகளாக இருந்து கொண்டு மதுரை மாளிகையில் எனக்கு எப்படி சிகிச்சை அளித்தாய் மங்கை? மாயபாண்டியனின் மகளான உன்னை ஏன் மாயபாண்டியனின் ஆட்களே கடத்தினார்கள்?" என்று கேட்டான்.

ஜடம்போலக் கிடந்த அவள் "அனைத்தும் வெறும் நாடகம் பிரபு" என்ற அவள் "நீங்கள் மதுரைக்கு வெளியே திரிந்தபோது என் தந்தையின் ஆட்கள் உங்களைக் கண்டிருக்கிறார்கள். உங்களை பாண்டியரின் ஒற்றர் என்று சந்தேகித்து கண்காணித்திருக்கிறார்கள். இதற்கிடையில் உங்களைப் பற்றி ஏதும் அறியாத நான் மயங்கிக் கிடந்த நிலையில் கண்டதும் இயல்பாகவே சிகிச்சையளித்தேன்.

என் தந்தையின் ஆட்கள் வந்து விவரம் சொல்லி தங்கள் சந்தேகத்தைக் கூறினார்கள். "இவன் ஏதாவது பேசினானா?' என்று வினவினார்கள். இல்லை யென்றதும் மறுநாள் வருவதாகக் கூறிவிட்டுச் சென்றார்கள். சொன்னபடியே மறுநாள் வந்து என்னை இம்சைப்படுத்துவது போல் நாடகமானார்கள்.

அதைக்கண்டு நீங்கள் குறுக்கிடுவீர்கள் என்றும் அப்போது உங்களைப் பற்றிய விவரம் தெரிய வரும் என்று நம்பினார்கள் நம்பியபடியே நீங்களும் குறுக்கிட்டீர்கள். ஆனால் வீரர் தலைவனிடம் மாயபாண்டியரின் ஆளாக உங்களைச் சொல்லிக் கொண்டீர்களாதலால் அவன் குழம்பிப் போனான்.

அவனையும் அறியாமல் ஏதாவது மர்ம காரியங்கள் நடக்கிறதோ என்று சந்தேகித்தான். உங்களை ஒற்றராக எண்ணிய அவனுக்கு நீங்கள் ஒரு புதிராக ஆகிவிடவே உடனடியாக அவசரப்பட்டுவிட அவன் விரும்பவில்லை. உங்களை நம்புவதுபோல் நாடகமாடிவிட்டு மறுநாள் இரவு வருவதாகக் கூறி சென்றான். அப்படிச் சென்றவன் மறுநாள் காலையில் என்னைச் சந்தித்து, "பல்லவ மன்னருக்கு ஓலை ஏதாவது கொண்டு போகப் போகிறீர்களா?" என்று வினவினான். உண்மையிலேயே அப்படி ஓலையெதையும் நான் கொண்டு போவதாக இல்லையாதலால், 'இல்லை' என்றேன். உடனே



நீங்கள் அவனை ஏமாற்றிவிட்டதை உணர்ந்து உங்களைத் தீர்த்துக் கட்டிவிட மாளிகைக்கு வந்தான்."

இப்படிக் கூறிவிட்டு அழுதாள் அவள். பல்லவ இளவல் சலனமில்லாமல் அவளது கண்களைத் துடைத்துவிட்டு, அழாதே மங்கை நடந்ததைச் சொல். என்னையும் சீனனையும் வீழ்த்த வந்தார்கள் அவர்கள். நீ ஏன் தடுக்கவில்லை?" என்று கேட்டான்.

"சொன்னால் நம்புவீர்களா பிரபு?" என்று பரிதாபமாகக் கேட்டாள் அவள்.

"இதென்ன கேள்வி மங்கை? நீ பொய்யாய் இருந்த போதே நம்பியிருக்கிறேனே நான்! அப்படியிருக்கும்போது நீ மெய்யைப் பேசும்போதா நம்பாமல் இருந்துவிடப் போகிறேன்?"

அவள் பரவசப்பட்டு அவனது கைகளைத் தேடிப் பற்றிக் கொண்டு கூறலானாள்:

"பிரபு, நான் பெரும் அரசியல்வாதியின் மகளாக இருந்தாலும் அரசியலில் என்றுமே கவனம் செலுத்தியதில்லை, ஈடுபட்டதில்லை. என்னைப் பெற்றவரும் சுற்றியிருந்தவர்களும் அரசியலையே வாழ்வாகக் கொண்டிருந்தாலும் நான் என்னவோ சம்பந்தமே இல்லாதிருந்தேன். செடியெல்லாம் முள்ளாய் இருந்தாலும் இடையில் மலரும் மலர் மென்மையாய் இருப்பதில்லையா பிரபு? அப்படியிருந்த நான் உங்களை மயங்கிய நிலையில் கண்டபோது சலனமுற்றுக் கொஞ்சம் கொஞ்சமாய் மனதைப் பறிகொடுத்தேன்.

தாங்கள் வீரர் தலைவனை ஏமாற்றியது என்னை மிகவும் கவர்ந்தது. பெண் பெண்தான் என்பதை வெளிப்படுத்திக் கொண்டேன். அந்த மயக்கம் என்ன ஓரிரவில் மாற்றியது. வீரர்களின் தலைவனும் மற்றவர்களும் ஆயிரமாயிரம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் கவலைப்பட வேண்டிய அவசியம் எனக்கில்லை. அதோடு என்னைக் கவர்ந்துவிட்ட உங்களை அவர்கள் தீர்த்துக் கட்ட வந்தது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை.

அவர்களிடம் எதைச் சொல்லிப் போக வைப்பது என்று திணறினேன். ஆனால் நீங்களும் சீனருமாய்ச் சேர்ந்து திறமையாகச் சமாளித்துவிட்டீர்கள். நான் திருப்தியடைந்தேன். அந்தத் திருப்தி மிகவும் சீக்கிரமாகவே பறிபோயிற்று. அரசியல் சம்பந்தமில்லாத நான் அரசியலில் பகடைக் காயாக்கப்பட்டேன்."

பேச்சை சற்று நிறுத்திப் பெருமூச்செறிந்தாள் மயில் நிற மங்கை. அவளது நெஞ்சைத் தடவிக் கொடுத்த அபராஜிதன், "எப்படி நீ பகடைக்காயானாய் மங்கை?" என்று வினவினான். "பிரபு. என் மாளிகையில் என்னுடன் இருந்தாரே அடிகளார், அவர் உண்மையில் துறவியல்ல. துறவி வேடம் பூண்ட ஒற்றர். எனது தந்தையின் ரகசிய ஆலோசகர். அவருக்குப் பாண்டிய மன்னர் ஸ்ரீமாறர் ஸ்ரீவல்லபரிடம் நிரம்ப செல்வாக்கு உண்டு. அவருக்கும் இவர்தான் ஆலோசகர்.

மன்னருக்கோ அவர் என் தந்தையின் ஆள் என்பது தெரியாது. எனவே அடிகள் மிகவும் சௌகரியமாகச் செயல்பட்டு வந்தார். நீங்கள் மயங்கிக் கிடந்த தினத்திற்கு மறுநாள் பல்லவ மன்னருக்கு ரகசிய ஓலையொன்று தயாரிக்கப்பட்டது. அதிலுள்ள விஷயத்தைத் தெரிந்து கொள்ளத் துடித்தார் அடிகள். இயலவில்லை. எனவே வேறு மாதிரி தீர்மானித்து ஓலையை பெண்ணொருத்திமூலம் அனுப்புவது நல்லதென்றும் அதனால் அவருக்கும் சந்தேகம் வராதென்றும் மன்னருக்கு ஆலோசனை கூறி பெண்ணுக்கு உரிய ஏற்பாடுகளைத் தாமே செய்வதாகத் தெரிவித்துக் கொண்டார். மன்னரின் சம்மதம் பெற்றதும் என்னிடம் கொடுத்த அடிகள், "பெண்ணே, இந்த முக்கிய ஓலையை நம்மில் யாரும் இங்கு உடைத்துப் பார்க்க முடியாது. ஆகவே உனக்கு வழித்துணையாக இங்கே காயம் பட்டுக்கிடக்கும் வீரனை அழைத்துப்போ. ஓலையைக் கொண்டு போவதாகவும் தெரிவி.

அவனைப் பார்த்தால் பல்லவ நாட்டவன் போல் தெரிகிறது. வலது கையில் நந்தி இலச்சினையைக் கண்டேன். எனவே அவன் உன்னை ஏமாற்றி ஓலையைப் பறிக்கவும் படிக்கவும் முயலுவான். அவனை உன் வலையில் போட்டுக் கொண்டு விஷயத்தை அறிந்து கொள். அவன் இக்காரியத்தைச் செய்தால் நம்மீது பொறுப்பும் பழியும் விழாது" என்று தங்களையும் என்னையும் அனுப்பி வைத்தார். நீங்கள் சிறையிட்ட வீரர்கள் விடுதலை செய்தார். நான் மாயபாண்டியர் மகளென்பது பலருக்கும் மதுரையில் தெரிந்தாலும் என்னிடம் ஓலையிருக்கும் விஷயம் யாருக்கும் தெரியாதாகையால் ஒருவரும் என்னைச் சந்தேகிக்கவில்லை.

ஆனால் காஞ்சிப் பயணத்தின்போது அடிகளார் எதிர்பார்த்த மாதிரி எதுவும் நடக்கவில்லை. அடிகளுக்கு வேண்டுமானால் இது கவலையையும் ஏமாற்றத்தையும் அளித்திருக்கும். ஆனால் நான் கவலைப்படவில்லை. மாறாக காஞ்சியை அடைந்தபின் தாங்கள் பல்லவ அரசகுமாரர் என்றும் அறிந்தபோது பிரமிப்பும் திகைப்புமே அடைந்தேன்."



"பிறகு?" என்று கேட்டான் பல்லவ இளவல்.

"என்னைப் பகடையாய் உருவாக்கிய அடிகள் உருட்டத் தொடங்கினார். ஓலை விஷயம் பகிரங்கமானதும் காஞ்சிக்கு வந்து சேர்ந்த அவர் மாமல்லபுரத்திற்குப் போகும்படியும் அங்கு போய் பல்லவர் கலங்களில் மறைந்து கொள்ளும்படியும் சொன்னார்."

"நீ ஏதோ என்னுடனேயே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் வந்தேன் என்றாயே?" என்று கேட்டான் அபராஜிதன்.

"உண்மைதான் பிரபு. என் எண்ணமென்னவோ அதுதான். அது அடிகளின் திட்டத்திற்கும் பொருந்தி வந்தது. எனவே ஆனந்தத்துடன் சென்றேன். சீனரின் உதவியோடு மரக்கலத்துள் இருந்தேன். அடிகளும் வந்து சேர்ந்தார் மாலுமியாய்."

"உண்மையாகவா?"

"ஆம். கிழவனைப் போல் வேடமிட்டுக் கொண்டு துடுப்பு தள்ளும் பகுதியில் இருந்தார். என்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் தங்களுடன் சரசமாடும்படித் தூண்டினார். இதற்கு அவர் தூண்ட வேண்டிய அவசியமே இல்லாதிருந்தது. நானே அல்லவா அதற்காகத் துடித்துக் கொண்டிருந்தேன்? அதோடு தாங்களே என்னை நடனமாட வைத்து நல்ல பழக்கத்தை உண்டாக்கிவிட்டீர்கள். அதேசமயம் என்னோடு இருந்து உலகையே மறந்துவிடவில்லை. ஆனால் ஏமாற்றமடைந்த அடிகள் ஏற்கெனவே சதியில் ஈடுபட்டிருந்த மாவலிராயனைத் தூண்டி தங்களைக் கொன்றுவிட அனுப்பினார். அன்று ஒரு நாள் இரவு முழுதும் உங்களைத் தூங்கவே விடாமல் நச்சரித்தேனே, அன்றுதான் தங்களைக் கொல்வதாக இருந்தது. அதிலிருந்து தப்பத்தான் உங்களைத் தூங்க விடாமல் செய்தேன். கொலைத்திட்டம் பற்றிச் சொல்லவே அச்சமாக இருந்தது.

"கொலைத் திட்டம் பயனற்றுப்போய் போரும் துவங்கியது. அதிலாவது தன் சாகசத்தைக் காட்டலாம் என்று முயன்றார் அடிகள். சிங்களவரின் அநூர்த்வா கப்பலை மாவலிராயன் நெருங்கியபோது அவனது கட்டளைக்கு நேர்முகமாகத் துடிப்பு வலித்து அக்கலத்தை இழக்க வைத்தார். அப்படிச் செய்து உங்களை நிர்க்கதியாக்கப் பார்த்தார். தாங்களோ பெரும் சாகசமே புரிந்து அவரது மனக்கோட்டையை உடைத்தீர்கள்.

"அடிகளின் மனம் ஆறவில்லை. மேலும் என்னை உருட்டினார். தங்களுக்கு நிரம்ப மதுவைப் புகட்டிச் செயலிழக்க வைக்கும்படித் தூண்டினார். ஆனால் எதிர்பாராதவிதமாக

நீங்களே மதுவை நிரம்ப குடித்துவிட்டீர்கள். அதேசமயம் சரியான நேரத்திற்கு சமாளித்துக் கொண்டீர்கள்.

"அடிகள் மிகவும் துடித்தார். தங்களை ஒழிக்காவிட்டால் அனைவரது கதியும் அதோகதிதான் என்பதை உணர்ந்தார். நீங்களோ சிங்களவரை ஒழித்து வெற்றியும் பெற்றுவிட்டீர்கள். அவரால் காத்திருக்க முடியவில்லை. என் கையில் குறுவாள் ஒன்றைக் கொடுத்தார். அதில் நஞ்சு தடவப்பட்டிருந்தது. வெற்றிப் பெருமிதத்தில் நீங்கள் கவனக் குறைவுடன் அறைக்குத் திரும்ப வருவீர்கள் என்றும் அப்போது உங்களைக் குத்தி வேலை தீர்த்துவிட வேண்டும் என்றார். நான் மறுத்தேன்."

"ஏன் மங்கை?" ஆர்வத்துடன் கேட்டான் பல்லவ இளவல்.

"பிரபு, அதைச் செய்துவிட்டால் அப்புறம் என் வாழ்வில் என்ன இருக்கிறது? முதலிலிருந்து ஏதேதோ செய்தேன்தான். ஆனால் அவற்றையெல்லம் நானே விரும்பினேன். அடிகளுக்கு அவையெல்லாம் நாடகம் மாதிரி. எனக்கோ என் மன விருப்பப்படி நடக்கும் இன்ப நிகழ்ச்சிகள். அதுமட்டுமல்ல. அவைகளை நான் செய்ததெல்லாம் அரசியல் லாபத்திற்காக என்பது நன்றாகத் தெரிந்திருந்தது. அந்த அரசியல் லாப நஷ்டங்களால் என் தனி வாழ்க்கைக்கு எதுவும் நேரப் போவதில்லை. ஆகவே செய்தேன். ஆனால் அவர் குறுவாளைக் கொடுத்து கடைசியாகச் சொன்னதோ அப்படியல்ல. என்னைப் பாதிப்பது. அரசியல் விஷயங்களுக்காக தங்களை அதுவும் நான் கொல்வதென்பது முடியாத காரியமாய் இருந்தது. மாவீரர் தங்களின் உயிரைப் பறித்துக் கொண்டு நான் எங்கே போவது? அதற்காகவா இவ்வளவு தூரம் வந்தேன்? ஆகவேதான் மறுத்தேன். அவர் விடவில்லை. என் தந்தையின் நிலையைச் சொல்லி தூண்டினார்.

"பிரபு, அரசியல்வாதிகளுக்குப் பிறப்பவைகளெல்லாம் வெறும் பொம்மைகளாய் இயங்க வேண்டும் என்று அவர்களே விரும்புவார்களானால் அதைவிட வேறென்ன துரதிர்ஷ்டம் இருக்க முடியும்? அரசியல் தத்துவங்களை மாறிமாறிப் பேசி என்னை அடியோடு குழப்பி தங்கள் அறைக்கு அனுப்பி வைத்தார்.

"என் வாழ்வின் இருண்ட பகுதி உருவாகப் போகிறதென்று நினைத்தேன். இல்லை பிரபு. இல்லை. இருள் உண்டாகவில்லை. ஒளிமயமாகத்தான் ஆகியிருக்கிறது" என்று திடீரென பரவசமுடன் கூறினாள் அவள். அவளது உடல் சற்றே நெளிந்தது அவனது மடியில். மார்பு வலித்ததால் கைகளை



வைத்துத் தடவிக் கொண்டாள். அவளது நிலை மோசமாகிக் கொண்டு வருவதைக் கண்ட அபராஜிதன் சங்கடப்பட்டான். அதைக்கண்ட அவள், "ஏன் என்னவோ போலிருக்கிறீர்கள் பிரபு? எனக்காகவா கவலைப்படுகிறீர்கள்? நான் வாழ முடியுமானால் தங்களைவிட்டுப் பிரியவே விரும்பமாட்டேன். ஆனால் நான் வாழ முடியாது. வழியில்லை அதற்கு" என்று கூறிக் கொண்டே அவள், "தங்களைக் கொல்லும் தைரியம் எனக்கேது? மனம் தான் ஏது? கத்தி கைகளில் இருந்துவிட்டால் போதுமா? அடிகளைத் திருப்திப்படுத்த அறைக்குள் வந்து நின்று கொண்டேன். நீங்கள் வந்ததும் விஷயத்தைக் கூறி உங்கள் முன்பாக என்னை நானே மாய்த்துக் கொள்ள விரும்பினேன்.

தங்கள் மடியில் உயிர் துறக்க விரும்பினேன். எப்படியோ அந்த பாக்கியம் எனக்குக் கிடைத்துவிட்டது. தங்களைக் கொன்று இருள் சூழவிருந்த வாழ்க்கை வராமல் தங்கள் முன் இறந்து ஒளி பெறப் போகிறது. இப்பிறவி எனக்குப் போதும் பிரபு. இனி எப்போது பிறந்தாலும் தங்களை மறக்க முடியாது. தங்களை என் இதயம் பாடாமல் இருக்காது" என்றாள் மயில் நிற மங்கை.

பேச வேண்டியதெல்லாம் பேசிவிட்ட மாதிரி பெருமூச்சொன்று எழுந்தது அவளிடம். வாழ வேண்டியதை யெல்லாம் வாழ்ந்துவிட்ட மாதிரி திருப்தியொன்று விரிந்தது அவள் முகத்தில். எழுத்தாய் வடிக்க முடியாத பேச்சுக்களே அவளிடம் மிச்சமிருந்தன. அவற்றைக் கண்களால் அழகாக வெளிப்படுத்தினாள் அவள். "நான் உங்களது காதலி" என்ற பரவசம் பிராணன் போகும் அந்த நேரத்தில் நயமாகவும் தீட்சண்யமாகவும் தெரிந்தது.

உடலால் வாழ முடியாத வாழ்வே அவளிடம் மிச்சமிருந்ததாலோ என்னவோ அபராஜிதனின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அவள். சிலையாகிவிட்டிருந்த அபராஜிதன் அவளையே வெறித்துப் பார்த்தான். "மங்கை" என்று முணுமுணுத்தன அவனது உதடுகள். "பிரபு" என்றாள் மயில் நிற மங்கை. அவளது செவ்விய அதரங்களின் ஓரத்தில் நிலநீர் வெளிப்பட்டது. அபராஜிதனைப் பற்றியிருந்த பிடி இறுகியது. விழிகள் விடைபெறுவதுபோல் இருமுறை துடித்தன. அவளது மலர் முகம் பிரகாசித்தது. விழிகள் நிரந்தரமாய் மூடிக்கொண்டன.

"விஷம் அருந்தியிருக்கிறார் பிரபு" என்றான் சீனன்.

மாவலிராயன் ஓடிவந்து, "தளபதி, கிழ மாலுமி வேடத்தில் ஓர் ஒற்றன் பிடிபட்டிருந்தான். அவன் தப்பியோடிவிட்டான்"

என்று கூறிக்கொண்டே வந்து அறைக்குள் நிலவிய காட்சியைக் கண்டதும் மௌனமானான்.

"ராமேஸ்வரம் வந்துவிட்டது" என்றான் ஓர் உபதளபதி.


★ ★ ★

மதுரை மாநகரம் விழாக்கோலம் பூண்டு சிங்கள வரைவென்று வாகை சூடிய பல்லவ இளவரசனை மதுரை வீரனாய் வாழ்த்தி உபசரிக்கத் தயாராய் இருந்தது. புரவியில் வந்து இறங்கினார்கள் அபராஜிதனும் சீனனும். முன்பு எங்கு வந்து இறங்கி கோட்டைக்குள் நுழைய முடியாமல் தவித்தானோ அங்கே நின்று முன்போல் ஏங்க விரும்பினான் இளவல். ஏக்கத்தில் இருக்கும் இன்பம் எதிலுமில்லை என்று தோன்றியது அவனுக்கு. ஏங்கித் தவித்து நுழைந்தபோது தான் பொங்கிப் பூரித்தாற்போல் எழிற்கோலமாய் கிடைத்தாள் மாயபாண்டியன் மகள். அவன் விரும்பியது நடக்கவில்லை. மக்கள் வெள்ளமும் படைகள் வெள்ளமும் இரண்டாவது வையையாய் கூடியிருந்தன. கோட்டை வாயிலிலேயே பாண்டிய மன்னர் ஸ்ரீமாறர் ஸ்ரீவல்லபரும், இளவரசன் வரகுணனும் அபராஜிதனை எதிர் கொண்டார்கள். தேரில் அபராஜிதன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டான். செல்கிற வழியில் மயில் நிற மங்கையின் மாளிகை தென்பட்டபோது அவனது கண்களில் நீர் திரண்டது. அதைக் கண்ணுற்ற பலரும் வியந்தார்கள் விவரம் தெரியாமல். விவரம் புரிந்த சீனனோ மௌனமாய் அழுதான்.

பின்னால் பாண்டிய அரசவையில் பூமாலைகளும் பாமாலைகளும் சூட்டப்பட்டன. ஆனால் பூவும் பாவும் இல்லாத மாலைகளாகவே அவை இருந்தன அபராஜிதனுக்கு. பாராட்டுகளைவிட அவனது நெஞ்சத்தில் அப்போது நீக்கமற நிறைந்திருந்தாள் மயில் நிற மங்கை.

ஆலவாய் அழகனின் ஆலயத்திலிருந்து பெரிதாய் எழுந்த மணியோசை மதுரை மாநகர் வீதிகளில் தெய்வீகப் பண்ணாய் எதிரொலித்தது.

★ ★ ★


மயில் நிற மங்கை
உதயணன்